# கல்கி

குடும்பத்துடன் களிக்க...

KALKI 29.1.2006
ரூ.8.00
96 பக்கங்கள்



"இனி பாறுப்பதில்லை!"



## அறிமுகமே அமர்க்களம்!



ராணி தாகுதி!



பூக்களின் சங்கமம் பூங்கா...
புடவைகளின் சங்கமம் சாரதா'ஸ்..!
SSD-502
SM-40
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:2852117.

# பரமசிவன்



தமிழ் சினிமா ஹீரோக்கள் காஷ்மீர் தீவிரவாதியை வளைத்துப் பிடித்து நீண்ட நாட்களாகிவிட்டன. நாட்டில் தீவிரவாதம் மீண்டும் தலை தூக்கியிருக்கும் இச்சமயத்தில் அஜித்தின் கையில் இப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார் இயக்குனர் பி. வாசு.

அஜித்தை, சிறையிலிருந்து அழைத்து வந்து (தப்பிக்க வைத்து), தீவிரவாதிகளை வேட்டையாடப் பயன்படுத்திவிட்டு, இறுதியில் அஜித்தையே போட்டுத் தள்ள எஸ்.பியான பிரகாஷ்ராஜ் போடும் செயல் திட்டமும், சொல் விளையாட்டும் அசத்தல் ரகம்.

லைலாவைவிட இளமையாகக் காட்சியளிக்கும் ரீ என்ட்ரி அஜித்துக்கு. தோட்டா வேகத்தில் சீறிப்பாயும் ஆக்ஷன் காட்சிகள் கைகொடுத்திருக்கின்றன. ஆனால் க்ளைமாக்ஸ் பைக் ரேஸில் வீரத்தின் அளவை அதிகமாகக் காண்பிக்கப் போய் இறுதியில் நமக்கு வீடியோ கேம்ஸ் பார்த்தது போலாகி விடுகிறது.

சிறையிலிருந்து தப்பித்த அஜித்தை மோப்பம் பிடிக்கும் சி.பி.ஐ அதிகாரியான ஜெயராமின் நடவடிக்கைகள் அனைத்தும், சிறுவர்களின் திருடன் - போலீஸ் விளையாட்டு போல செம காமெடி. விவேக்கின் காமெடி ஓ.கே! குறிப்பாக சரவணபவன் சூப்பர்வைஸர் காமெடிக்கு செம க்ளாப்ஸ்!


லைலாவை ஏன் எல்லோருமே அரை லூஸ் போலக் காட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால், கதாநாயகியைவிட பத்தாம் பசலிகளாக இருக்கிறார்கள் தீவிரவாதிகள். படம் சீக்கிரம் முடிய வேண்டும் என்பதற்காக பாகிஸ்தான் தீவிரவாதிகளின் தலைவன் க்ளைமாக்ஸ் நெருங்கும் சமயத்தில் சென்னைக்கே வந்து திட்டம் போடுவதும், அதுதவிர தீவிரவாதிகள் எங்கு சென்றாலும் அங்குள்ள கம்ப்யூட்டர்களில் தங்களுடைய திட்டங்களை விலாவாரியாக புள்ளி விவரங்களோடும் டைப் செய்து அதன் சி.டியையும் அஜித் கண்படும் இடத்தில் வைத்து விட்டுப் போவது நம்பத்தகுந்த காட்சிகளே அல்ல.

கொஞ்சம் புதிய பின்னணியில், புதிய கதை தேர்வு செய்திருந்தால் ஸ்லிம் அஜித்துக்கு இன்னுமொரு 'வில்லன்' கிடைத்திருக்கக் கூடும்.

**- லஜ்ஜாவதி**



# கவுத்திட்டீங்களே





✉ பேட்டி எடுத்தவர், கூட்டணி கூட்டணி எனக் கேள்விக்கணைகளைத் தொடுக்க, கூட்டணியை உடைக்கும் நோக்கத்துடன் கேள்விகள் தொடுத்தீர்களோ என ஸ்டாலின் கேட்டுச் சிரித்தது நல்ல காமெடி! அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்!

**சென்னை, குவளை எழில்**

✉ பார்லிமெண்டே தொங்கு பார்லிமெண்ட் ஆகிக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் தடாலடியாக தமிழ் நாட்டில் கூட்டணி ஆட்சிக்கான வாய்ப்பே இல்லை என்று ஸ்டாலின் கூறியிருப்பது அவரது ஓவரான தன்னம்பிக்கையைக் காட்டுகிறது.

**திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியன்**

✉ நெஞ்சில் இனந்தெரியாத மகிழ்வை ஏற்படுத்திவிட்டார் (கள்) சுபா 'சிறப்பு விருந்தினர்' என்ற தங்கள் சிறந்த படைப்பின் மூலம். பாராட்டு!

**மதுரை, வஸந்தா பரமசிவம்**

✉ பசுமைப் புரட்சி வருது என்று சொன்ன பாரதப் பிரதமரை, குடுகுடுப்பாண்டியாகச் சித்திரித்துள்ள கார்ட்டூன் சிரிப்பை வரவழைத்தது.

**சென்னை, கே.வி.ராமன்**

✉ 'குறையொன்றுமில்லை' எட்டாம் பாகத்தின் ஆரம்பமே வெகு அற்புதம். நரஸிம்ஹ அவதாரத்தின் தாத்பரியத்தைக் கோடிட்டு லக்ஷ்மி நரஸிம்ஹனாகத் தான் உபாசிக்க வேண்டும் என்ற ஐதீகத்தை வலியுறுத்திய விதம் அருமை.

**அயன்புரம், த.சத்தியநாராயணன்**


✉ கள்ளான் தனுஷின் பதிலில் இருந்தது சுறுசுறுப்பு, விறுவிறுப்பு... அதுவும் ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவன் பற்றிய ஒப்பீடு சிம்ப்ளி சூப்பர்ப்.

**பொள்ளாச்சி, பி.ஜெயப்பிரகாஷ்**

✉ 'பரபரப்புத் தலைப்பா வெச்சுடாதீங்க' என்று கூறியிருந்தபோதும் 'ரஜினி சூப்பர் ஸ்டாரே இல்லை' என்று தலைப்பு வெச்சு, கவுத்திட்டீங்களே தலைவா.

**லால்குடி, இராஜேந்திரன்**

✉ கேம்பஸ் கலாட்டாவில் 'ஞாயிறு ரெஸ்ட்... திங்கள் நெக்ஸ்ட்' என்ற லவ்




மந்திரம் குபீர் சிரிப்பை வரவழைத்தது.
பொன்மலை, ஆர்.பிரகாஷ்

✉ நடிகர் சூர்யாவை பத்துக் கேள்விகள் கேட்டு டாரு... டாருன்னு கிழிச்சுட்டாரே பத்துக் கேள்வி பரமு!
கோவை, ராமு அர்விந்த்

✉ 'சினிமாவுக்குப் போகலாம் வாங்க' சிரிப்புப் பேரரசு குஞானசம்பந்தம் தொடர், ஆரம்பமே குளுகுளு சிரிப்பு மழை.
மதுரை, ஆர்.லட்சுமி

✉ 'வானவில் வயசு' டீனேஜ் டானிக் தொடர் பெருசுகளிடமும் இளமை பொங்கச் செய்கிறது.
நெல்லை, செ.சத்தியசீலன்





# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP. Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேஜைக்கு

# அரசிப்பட்டி ஆன... ஆண்டிப்பட்டி!

வருவார்... நிற்பார்... ஜெயித்து விடுவார்... கட்சிப் பிரமுகர் யாரேனும் ஒருவர் தொகுதி பொறுப்பாளராக இருந்து செயல்பட்டுக் கொண்டிருப்பார். இதுதான் நடக்குமென நினைத்துக் கொண்டிருந்த பொது மக்களுக்கு, ஜெயலலிதாவின் அடுக்குத் தொடரான ஆண்டிப்பட்டி வருகை இன்ப அதிர்ச்சி. வருகிற ஒவ்வொரு முறையும் ஜெ. பாஷையில் சொல்லப் போனால், 'வெறுங்கையை வீசிக் கொண்டு வருவதில்லை!' கோடிக்கணக்கான ரூபாய்க்கு நிறைய மக்கள் நலத்திட்டங்களைச் செய்திருக்கிறார்.

மாநில முதல்வரின் தனிக் கவனம், தொகுதி பொறுப்பாளர்களாக இயங்கி வரும் டி.டி.வி. தினகரன், தங்க. தமிழ்ச்செல்வன் ஆகியோரின் சிறப்புச் செயல்பாடுகள்-இவை போதாதென்று தேனி மாவட்டத்தின் மூன்று ராஜ்ய சபா உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினில் பெரும் பகுதி ஆண்டிப்பட்டி தொகுதிக்குத் தாரை வார்க்கப்பட்டதால் தொகுதி முழுவதும் ஜொலித்துக் கொண்டிருக்கிறது! (மூவரையும் தேனி பகுதியிலிருந்து நியமித்தது இதற்குத்தானோ?)

ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குள் ஆண்டிப்பட்டி ஒன்றியம், கடமலை மயிலை ஒன்றியம், பெரியகுளம் ஒன்றியத்தில் ஒரு பகுதியென அடங்கியுள்ளது. இரண்டு பேரூராட்சி, ஐம்பத்தி ஆறு ஊராட்சிகளில் சுமார் இருநூற்றைம்பது கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி இது மொத்த வாக்காளர்கள் சுமார் இரண்டு லட்சம். 2001 தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட முடியாத சூழலில், தி.மு.க வேட்பாளர் ஆசையனை இருபத்தைந்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தவர் அ.தி.மு.க.வின் தங்க தமிழ்ச்செல்வன். பின்னர் ஒரு வருடத்திற்குள்ளாக கட்சியின் தலைவி சட்டமன்ற உறுப்பினராக வேண்டி, அவரது பதவியைத் துறக்க வேண்டி வந்தது. (இதற்கென பரிசாக தங்க. தமிழ்ச்செல்வனுக்கு ராஜ்ய சபா எம்.பி. பதவி அளிக்கப்பட்டது!) 21.2.2002-ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் அ.தி.மு.க வேட்பாளர் ஜெயலலிதா. அப்போது அவரை எதிர்த்து நின்றவர் தி.மு.கவின் வைகை சேகர். தி.மு.க. வேட்பாளரை முப்பத்தியொன்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து சட்டமன்ற உறுப்பினர் ஆனார் ஜெயலலிதா.

தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் என்பது தினசரி செயல்பட்டு வருகிறது. தங்க. தமிழ்ச்செல்வனின் மைத்துனர் வெற்றி அதன் பணியாளராக இயங்கி வருகிறார். இங்கு தொடு திரை கணினி எந்திரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'குறை தீர்ப்போம்!' எனும் நோக்கில் தொகுதிவாசிகளின் கோரிக்கைகள் தொடு திரை கணினி எந்திரத்தில் பதிவு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே இந்த ஒரு வசதி இங்கு மட்டும்தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இங்கு பதிவாகும் கோரிக்கை மனுக்கள்

• மலர்க்கொடி



• காந்தியம்மாள்



• இரா. கருப்பசாமி



• க. துரைபாண்டிய



படம்: மீடியா ராஜு



விவரங்கள் அடங்கிய குறுந்தகடுகள், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத் துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கு பரிசீலனைக்குப் பின்னர் அவை சார்ந்த நடவடிக்கைகள், தீர்வுகள், நிறைவேற்ற முடியாத கோரிக்கையெனில் அதற்கான விளக்கங்கள் ஆகியன அவ்வப்போது மீண்டும் மீண்டும் குறுந்தகடுகளாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் வந் தடைகிறது. பொதுவாக கோரிக்கையைப் பதிவு செய்தவர், குறிப்பிட்ட தினங்கள் கழித்து மீண்டும் இங்கு வந்து தனது கோரிக்கை என்னவாயிற்று என அறிந்து கொள்ளலாம். இந்த வகையில் கடந்த நான் காண்டுகளில் இதுவரை சுமார் மூவாயிரம் மனுக்கள் மீதான நடவடிக்கைகள் பூர்த்தி ஆகியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

தெப்பம்பட்டி கிராமத்தில் ஊர் எல்லையிலேயே மகளிர் கழிப்பிட வளாகம் எதிர்கொண்டு அழைக்கிறது. அதற்கென ஊராட்சிப் பணியாளர் ஒருவரும் நியமிக்கப் பட்டிருக்கிறார். அதற்கு சற்றுத் தள்ளி தன் வீட்டு வாயிலில் மடியில் தன் பேரனைக் கிடத்தியபடி நம்மிடம் பேசுகிறார் காந்தி யம்மாள். வயது அறுபத்தைந்து. "அந்தம்மா இங்க நின்னு ஜெயிக்கவுட்டுத் தான் இந்த பொது பாம்பே கக்கூஸ் எல்லாம் எங்க ஊருக்கு எட்டிப் பார்த்தது. எங்க ஓட்டு எல்லாம் அம்மாவுக்குத்தான்!" எனக் கூறு கிறார் காந்தியம்மாள்.

"இந்தத் தொகுதியில் முக்கால்வாசி ஓட்டு அம்மாவுக்குத்தாங்க விழும். என்னா... இந்த நாலு வருசத்துல அம்புட்டு

• வைகை சேகர்



• பெ. ராமன்



• தங்க. தமிழ்ச்செல்வன்



தொகுதி விசிட் 1

செஞ்சுருக்காங்க. அந்த எலெக்ட்ரானிக் பொட்டியில கண்ணை மூடிக்கிட்டு விரலைக் கொண்டு போனா கூட எங்களோட விரலு இரட்டை இலை சின்னத்துலதாங்க பதியும்!'' என்கிறார் கடமலைக்குண்டு கிராமத்தில் வசிப்பவரான மலர்க்கொடி.

பாலக்கோம்பை கிராமம் ஆண்டிப்பட்டியில் இருந்து இருபது கி.மீ. தூரத்தில் உள்ளது. நான்கு வருடங்கள் முன்பு வரை அந்தக் கிராமப் பகுதி மக்கள் குடிநீருக்கு அத்தனை சிரமப்பட்டிருக்கின்றனர். இப்பொழுது அப்படியல்ல. கிராமத்திலிருந்து சற்றுத் தள்ளி மூக்கோடை என்னுமிடத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, அங்கிருந்து குடிநீர் பாலக்கோம்பை கிராமத்துக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் வாயிலாக விநியோகிக்கப்படுகிறது.

“எங்கள் குடும்பமே பரம்பரையாக காங்கிரஸ் கட்சிதான். அதனால் எங்கள் ஓட்டும் காங்கிரஸ் கூட்டணிக்குத்தான். இருந்த போதிலும் கடந்த நான்கு வருடங்களாகத் தொகுதிக்குள் நடைபெற்று இருக்கும் பணிகள் அடிப்படையில் இங்கே அ.தி.மு.க. தான் ஜெயிக்கும்!'' என உறுதியாகக் கூறுகிறார் மளிகை வியாபாரம் செய்து வரும் க. துரைபாண்டியன்.



• 'குறை தீர்ப்போம்!'

“நான் ஆரம்பத்துலேர்ந்து தி.மு.கவுல தான் இருந்தேன். கடந்த பத்து வருஷமாத்தான் அ.தி.மு.கவுல இருக்கேன். ஆண்டிப்பட்டி தொகுதியில ரொம்பவும் உள்ளடங்கிய சின்ன கிராமத்துல கூட இப்ப குடிநீர் வசதி நல்லாவே செஞ்சு தந்திருக்காங்க. நல்ல குடி தண்ணி. நல்ல ரோடு. தெருவுல லைட்டு, கிராமத்து ஜனங்களுக்கு இதைவிட வேறென்ன வேணும்? ஆண்டிப்பட்டியில அ.தி.மு.கவுல யாரு நின்னாலும் ஈசியா ஜெயிச்சுப்புடலாமுங்க!'' என்கிறார் பாலக்கோம்பை கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் பூசாரியான இரா. கருப்பசாமி.

ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை ஆண்டிப்பட்டியில் அமைத்துத் தருவதாக இடைத்தேர்தலின்போது ஜெயினால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்ததாம். ஆனால், இன்னமும் அந்தக் கோரிக்கை எழுத்துக் கூட்டி கூட வாசிக்கப்படவேயில்லையாம். காரணம், ஆண்டிப்பட்டியிலிருந்து தேனி பன்னிரண்டு கி.மீ. தூரம். மாவட்டத் தலைநகரில் ஒரு குளிரூட்டும் நிலையம் செயல்படும் வேளையில், அதன் அருகிலேயே இன்னொரு குளிரூட்டும் நிலையம் தேவையில்லை என்று கருதப்படுவதால் ஆண்டிப்பட்டியில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் கேள்விக் குறியாகி உள்ளது.

அதுபோல ஆண்டிப்பட்டி புற வழிச் சாலைத் திட்டமும் வார்த்தை வடிவத்தோடு நின்று போய் விட்டதாகக் கூறப்படுகிறது. நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது சதம் பணிகள் பூர்த்தியாகியும் நிறைவேறாத இன்னொரு திட்டம் தேனி மருத்துவக் கல்லூரி. இந்த மருத்துவக் கல்லூரி ஆண்டிப்பட்டி தொகுதியில் கண்டமனூர் விலக்கு என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தொகுதிக்கு வருகை தந்திருந்த முதல்வர் ஜெயலலிதா, “தேர்தலின் போது நான் தந்திருந்த வாக்குறுதிகள் அனைத்தையும் தொகுதி மக்கள் நலனுக்காக நிறைவேற்றித் தந்து விட்டேன். ஒரே ஒரு வாக்குறுதி மட்டும் இறுதி வடிவ செயல்பாட்டினை அடைய முடியாமல் முடங்கி நிற்கிறது. மத்திய அரசின் அனுமதி கிடைக்காததால் தேனி மருத்துவக் கல்லூரி இயங்கத் துவங்காமல் இருக்கிறது!'' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

“முல்லைப் பெரியாறு அணையினால் கம்பம் பள்ளத்தாக்கு, சின்னமனூர், தேனி சுற்றுவட்டாரப் பகுதிகள் நன்கு பாசன வசதிகள் பெற்று வருகின்றன. ஆனால், ஆண்டிப்பட்டி சுற்றுவட்டாரப் பகுதி மட்டும் பாசன வசதிகள் அற்றே இருந்து வருகிறது. அதனை மாற்றி அமைக்க 'தெப்பம்பட்டி - திப்பரேவு அணைத்திட்டம்' ஒன்று பல்லாண்டுகளாக இப்பகுதி மக்களிடையே கோரி வரப்படுகிறது. கடந்த சட்டமன்ற இடைத்தேர்தலின் போது கூட ஜெயலலிதா, தாம் வெற்றி பெற்று வந்தால்

தெப்பம்பட்டி - திப்பரேவு அணையினைக் கட்டித் தருவதாகக் கூறியிருந்தார். ஆனால், வெற்றி பெற்று வந்த பின்னர் அதனையே வெறும் கண்மாய்த் திட்டமாக நிறைவேற்றியுள்ளார். அதனால் எந்தப் பெரும் பயனும் ஆண்டிப்பட்டி சுற்று வட்டார விவசாயிகளுக்குக் கிடைத்து விடவில்லை" என்கிறார் கடந்த சட்டமன்ற இடைத்தேர்தலின்போது ஜெவை எதிர்த்து நின்ற தி.மு.க. வேட்பாளர் வைகை சேகர்.

"தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் வழங்கப்படும் என இடைத்தேர்தலின்போது அறிவித்தார். ஆலம் பண்ணைக்காடு பகுதியில் ஏழாயிரம் ஏக்கர் மற்றும் சந்தமலைக் காடு பகுதியில் நாலாயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் சும்மாவே கிடக்கின்றன. ஆனால் ஆண்டிப்பட்டி தொகுதிக்குள் ஏழை விவசாயி ஒருவருக்குக் கூட தரிசு நிலம் தரப்படவேயில்லை!" எனக் கூறுகிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிப்பட்டி ஒன்றியச் செயலாளர் பெ. ராமன்.

**க**டந்த பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான ஏழு கட்சிக் கூட்டணி எல்லா தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருந்தது. அப்பொழுது 234 சட்டமன்ற தொகுதிகளின் வாக்குகள் அடிப்படையில் பதினெட்டு சட்டமன்ற தொகுதிகளில் மட்டுமே தி.மு.கவை விட அ.தி.மு.க. அதிக வாக்குகள் பெற்றிருந்தது. அதிலும் அ.தி.மு.க. அதிக லீடிங் பெற்றிருந்தது ஆண்டிப்பட்டி தொகுதியில் மட்டும்தான். எதிர்த்து நின்று வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் ஹாரூனைக் காட்டிலும் ஆண்டிப்பட்டி தொகுதியில் பன்னிரண்டாயிரம் வாக்குகள் அதிகம் பெற்றிருந்தார் டி.டி.வி தினகரன்! அந்த வகையில் ஆண்டிப்பட்டி அ.தி.மு.கவின் கோட்டையாகவே இருந்து வந்துள்ளது.

"மீண்டும் எங்கள் அம்மா (பெயரைக் கூறுவதில்லை), ஆண்டிப்பட்டி தொகுதியில் தான் போட்டியிட வேண்டும் என்பது தொகுதி மக்களின் கோரிக்கை. வரவிருக்கிற சட்டமன்ற தேர்தலில், சென்ற இடைத் தேர்தலை விட மேலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் எங்கள் அம்மா ஆண்டிப்பட்டியிலிருந்து வெற்றி பெறுவார்" என்கிறார் தங்க. தமிழ்ச்செல்வன்.

ஆண்டிப்பட்டியிலிருந்து
கட்டுரை, படங்கள்:
**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**



# "இனி

''கடந்த 25 ஆண்டு கால தமிழக அரசியலில் புதிர் மனிதராக விளங்கிக் கொண்டிருப்பவர் (சசிகலா) நடராஜன். 'கட்சிப் பொறுப்பு கேட்டு என்னிடம் வராதீர்கள். என்னாலும் முடியாது; சசிகலாவாலும் முடியாது' என்று வீட்டு வாசலில் பலகையில் எழுதி வைத்துள்ளார். தேர்தல் சூழல் சூடு பிடித்துள்ள இந்த நிலையில் நடராஜன் என்ன செய்யப் போகிறார்?

*"தமிழ்நாட்டு அரசியலில் உங்களுக்கு உரிய இடம்தான் என்ன?"*


"தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கு அடிகோலிய 1965-ம் ஆண்டு மொழிப் போராட்டத்தில் நான் ஆற்றிய பணிகள் அப்போது களத்தில் இருந்த அனைவருக்கும் தெரியும். எனக்கு யாரிடமும் போய்க் கெஞ்சுவதோ, யாசகம் கேட்பதோ சிறிதும் பிடிக்காது. நான் மனத்தளவிலும், உடல் ரீதியாகவும் ஆரோக்கியமாகவே இருக்கிறேன். என் உழைப்பால், பிழைப்பு (பதவி) பெற்றவர்கள்தான் இப்போது கஷ்டத்தில் இருக்கிறார்கள். ஆனால் இது வரை எனக்கு அரசியல் ரீதியாக எந்த ஒரு பொறுப்பும் அதிமுகவில் கொடுக்கப்படவில்லை. எதுவுமே கேட்காமல் இருப்பது என் சுய மரியாதையைக் காட்டுகிறது. கொடுக்காமல் இருப்பது புரட்சித் தலைவியின் 'பெருந்தன்மையை'க் காட்டுகிறது''

*''இப்படி எந்தவித பொறுப்புமில்லாமல் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருப்பது சங்கடமாக இருக்கிறதா? சௌகரியமாக இருக்கிறதா?''*

''தனக்கென வாழாமல் மற்றவர்களுக்காக வாழும் பண்பில் வளர்ந்தவன் நான்.

ஆனால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சுற்றுப்பயணம் செய்யும்போது, பலர் என்னிடம் உதவி கேட்கிறார்கள். ஆலோசனை கேட்கிறார்கள். அவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொடுக்கிறேன்.

'உங்கள் மனைவி சசிகலாதான் முதல்வருடன் மிகவும் நெருக்கமாக இருக்கிறார்களே; எனவே எங்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெற்றுத் தருவீர்கள் அல்லவா!' என்று கேட்பார்கள். நான் மிகத் தெளிவாகவே 'என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன். மற்றபடி இந்த எதிர்பார்ப்புடன் வராதீர்கள்' என்று சொல்லிவிடுவேன்''



''2001-ல் ஜெயலலிதா மீண்டும் அதிரடியாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 'என் பணி முடிந்து விட்டது; இனி என்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்' என்று வீட்டின் முன் பலகையில் எழுதி வைத்தீர்கள். இப்போது வரும் தேர்தலில் உங்கள் பணி என்ன?''

''ஒவ்வொரு தேர்தல் வரும்போதும் என் உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்கள் 'தேர்தலில் நீங்களும் நில்லுங்கள்' என்று வற்புறுத்திக் கொண்டே இருப்பார்கள். 'பொடா' சட்டத்தை எதிர்த்து நான் நடைப்பயணம் வந்தபோது பொதுமக்கள் நிறைய பேர், 'நீங்க வருகிற சட்டமன்ற தேர்தலில் நிற்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். மேலும் தமிழக அரசியலில் ஒரு வெற்றிடம் இருக்கிறது. எனவே வருகிற சட்டமன்ற தேர்தலில் நான் நிற்கப் போகிறேன். இனி பொறுப்பதற்கு இல்லை. யார் ஆதரிக்கப் போகிறார்கள்; யார் எதிர்க்கப் போகிறார்கள் என்று கவலைப்படாமல் தேர்தலில் நிற்கப் போகிறேன். இந்தச் செய்தி சிலருக்குக் கசப்பாகவும் இருக்கலாம். நான் தேர்தலில் நிற்பதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. நான் நம்புவது மக்கள் சக்தி ஒன்றைத்தான். எந்தத் தொகுதியில் நிற்கப் போகிறேன்; எந்த அணி அல்லது கட்சியின் சார்பில் நிற்கப் போகிறேன் என்பதெல்லாம் தேர்தல் நெருங்க நெருங்க தெரிய வரும்''

''அ.இ.அ.தி.மு.கவை எதிர்த்து பலமான கூட்டணி இருக்கிறதே! ஜெ. வெல்வாரா?''

''தி.மு.க தலைமையிலான அணி மிகப் பலமான கூட்

# பொறுப்பில்லை!''





## —எரிமலையாகிறார் எம்.நடராஜன்

டணி என்பது மீடியாவின் கணிப்புதான். வெறும் பேப்பரில்தான் அது பலமான கூட்டணி; மக்கள் மத்தியில் அல்ல.

தமிழக அரசுடன் மத்திய அரசு கடைப் பிடிக்கும் மோதல் போக்கும் மாற்றாந்தாய் மனப்பான்மையும், தி.மு.க அணிக்குச் சரிவை உண்டாக்கும். கடல்நீரைக் குடி நீராக்கும் திட்டத்துக்கு நிதி உதவியைத் தாமதப்படுத்தும் மத்திய நிதி அமைச்சர் 'திட்டம் நிறைவேறும்; எந்த ஆட்சியில் என்று சொல்ல மாட்டேன்' என்று பேசி யிருக்கிறார். இந்தப் பேச்சு மூலம் 'மத்திய அரசு அரசியல் செய்கிறது' என்பது தெரிந்துவிட்டது. இது மட்டுமா? காவிரி ஆணையத்தின் தீர்ப்பு ஒரு வருடம் தள்ளி வைப்பு; நீதிபதிகள் நியமனத்தில் தாமதம், ரேஷன் அரிசி விலை உயர்வு என்று அர சியல் கலந்த மத்திய அரசின் செயல்பாட் டால் தி.மு.க அணி பாதிக்கப்படப் போவது நிச்சயம்.


மத்திய சென்னையில் வெற்றி பெற்ற தயாநிதி மாறன், 'என் முதல் முன்னுரிமை, சென்னைக்குத் தண்ணீர் கொடுக்கும் திட் டம்தான்' என்றார். இப்போது நோக்கி யாவுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு அலைகிறார். விஞ்ஞானபூர்வமாக ஊழல் செய்வதில் கில்லாடிகள் தி.மு.கவினர். இப்படித்தான் சென்னைக்கு வடக்கே ஒரு மோட்டார் தொழிற்சாலைக்கு விற்பனை வரிச்சலுகை கொடுத்து 'வாங்கி' சுருட் டிக்கொண்டார்கள். மத்திய அரசு ஒரு தலைப்பட்சமாகச் செயல்படுவது மக்களுக்குப் பளிச்சென்று தெரிகிறது. தொடர்ந்து மத்திய அரசில் இருந்து வரும் தி.மு.க முக்கிய அடிப்படை கட்டமைப் பான சாலை வசதிக்கு என்ன செய்தது? கூட்டு அமைப்பில் மாநில அரசு, பங் களிப்புடன்தான் திட்டங்களை நிறை வேற்ற வேண்டும். ஆனால் மாநில அரசு சம்பந்தப்படாமலேயே சேது சமுத்திர திட்டம் என்று துவக்கியிருக்கிறார்கள்.

அமெரிக்க தூதருடன் கலைஞர் தொழில் வளர்ச்சி குறித்துப் பேசியதாகச் செய்திகள் வருகின்றன. யார், யார் எதைக் குறித்துப் பேசுவது என்றே வரம்பில் லாமல் போய்க்கொண்டிருக்கிறது. 'டெலிவிஷன் சேனல்கள் ஏகபோகமாக இருக்கக் கூடாது' என்ற டெலிகாம் ஒழுங்குமுறை கமிஷன் அறிக்கை கொடுத்தது. அதை வாங்கி ஊறப் போட்டு விட்டார்கள். அந்த சிபாரிசு களை அமுல்படுத்தினால் யாருக்கு பாதிப்பு என்பது எல்லோருக்கும் தெரிந் ததுதானே! இப்படி தி.மு.க அணிக்குப் பாதகமான விவகாரங்கள் தேர்தலின் போது வெட்ட வெளிச்சமாகும். இது அந்த அணியின் வெற்றியை நிச்சயம் பாதிக்கும்''

**''எனவே ஜெயலலிதா வெற்றி பெறுவது உறுதி என்கிறீர்களா?''**


''மக்களிடையே பரவலாகவே ஜெயலலிதா மீது ஒரு நல்லெண்ணம் இருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம், நாடு முழுவதும் வன்முறையும் பயங் கரவாதமும் தலை தூக்கி நிற்க, தமிழகம் மட்டும் அமைதி மாநிலமாகத் திகழ்வது தான். 'தவறுகளைத் திருத்திக்கொண்டு விட்டார் ஜெ' என்று மக்கள் நம்பு கிறார்கள். 'துணிச்சலோடும் நல்லது செய்யப் பாடுபடுகிறார்' என்ற எண் ணமும் மக்களிடையே இருக்கிறது.

தமிழக மக்கள், கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட ஆதரவு தருவார்



'நான் அம்மாவுக்கு ஆதரவு' என்று அரசியலில் நுழையும் முன்னரே கார்த்திக் என்னிடம் கூறியிருக்கிறார்.

களே தவிர, கூட்டணி ஆட்சிக்கு ஒப்புக் கொள்ளமாட்டார்கள். தி.மு.க.வுக்குத் தனித்து மெஜாரிட்டி கிடைக்காவிட்டால் கூட்டணி ஆட்சிதானே! இது தவிர கலைஞர் முதுமையடைந்து விட்டதால், ஆட்சிப் பொறுப்பு ஸ்டாலின் கைக்குச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது. ஸ்டாலினை மக்கள் அங்கீகரிக்க இன்னும் தயாராகவில்லை. காங்கிரஸ் உட்பட கூட்டணி கட்சிகள் ஸ்டாலினை முதல்வராக்க ஒப்புக் கொள்ளாது. இப்படிப் பல பாதகமான அம்சங்கள் இருப்பதால் பலமாக தோற்றமுடைய தி.மு.க அணி படுதோல்வி அடையும் வாய்ப்புதான் இருக்கிறது"



**கலைஞர் முதுமையடைந்து விட்டதால், ஆட்சிப் பொறுப்பு ஸ்டாலின் கைக்குச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது.**

**"தொகுதிப் பங்கீட்டில் தி.மு.க அணி உடையுமா?"**

"நிச்சயமாக. கட்சிகள் விலகும். அல்லது கூட்டணி கட்சிகளுக்குள் பிளவு ஏற்படும். அதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன"

**"விஜயகாந்த் தாக்கம் எந்த அளவுக்கு இருக்கும்?"**

"அவர் ஓர் அணியாக வலம் வருவார். மற்றபடி வலுவான அடித்தளம் இல்லாத நிலையில், கொள்கைகள் சரியாக விதைக்கப்படாத சூழலில் இந்தத் தேர்தலில் அவர் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காது"

**"கார்த்திக்கின் அரசியல் பிரவேசம் அ.இ.அ.தி.மு.கவின் முக்குலத்தோர் வோட்டு வங்கியைப் பாதிக்குமா?"**

"திண்டுக்கல் இடைத்தேர்வில் (1973) இருந்தே முக்குலத்தோர் தொடர்ந்து அ.தி.மு.கவை ஆதரித்து வருகிறார்கள். என்னை விடுங்கள். நான் ஒரு ஏனோதானோ. ஆனால், சசிகலா, முதல்வருடன் நெருக்கமாக இருப்பது, அந்த முக்குலத்தோர் வோட்டு வங்கி அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகத் தொடர கூடுதல் சாதகமாக இருக்கிறது. 'நான் அம்மாவுக்கு ஆதரவு' என்று அரசியலில் நுழையும் முன்னரே கார்த்திக் என்னிடம் கூறியிருக்கிறார். அவர் சேர்ந்துள்ள ஃபார்வர்டு பிளாக்கும் அ.தி.மு.க தோழமைக் கட்சிதானே! எனவே அந்த வோட்டு வங்கியில் எந்த ஓட்டையும் இல்லை."

**"ஜெயலலிதா ஒரு ஜனநாயகவாதி அல்ல என்பது அவரைப் பற்றிச் சொல்லப்படும் பலமான விமர்சனம். இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?"**

கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம், வளர்ச்சிக்கான பாதை என்று அவர் நினைக்கிறார். அவரது கணிப்பு வெற்றியடைந்தும் வருகிறது. கூட இருக்கும் அமைச்சர்களை அவர் கருத்துச் சொல்ல வேண்டாம் என்று தடுக்கிறாரா? அவர்களே வாயை மூடிக் கொண்டிருந்தால் அவர் என்ன செய்வார்? என்னைப் பொறுத்தவரை கருத்துச் சொல்ல வாய்ப்புக் கிடைத்தபோது துணிந்து கசப்பான அம்சங்களையும் சொல்லியிருக்கிறேன்.

**- ப்ரியன்**

படங்கள்: **ஸ்ரீஹரி**

# “கேரமெல்லாம் விளையாட்டில்லையா?”

மெலிந்த உருவம். மில் வேலைக்கு ஏதேனும் செல்கிறாரோ என நினைக்க வைக்கும் சராசரி தோற்றம். சாலையில் இளவழகியைக் கடந்து செல்பவர்களுக்கு இதற்கு மேல் எண்ணத் தோன்றாது. ஆனால் இந்தப் பெண் தமிழ்நாட்டின் பெருமையை ஓசையில்லாமல் வெளி நாடுகளில் பதித்து, தங்கங்களாக அள்ளி வருபவர். இத்தனைக்கும் இவர் செல்வ சீமாட்டியோ அல்லது 'தக தக' தங்க வேட்டைக்காரியோ கிடையாது. இவர் தந்தை ஒரு ரிக்ஷா தொழிலாளி.

கேரம் விளையாட்டில் உலக அரங்கில் என்றைக்குமே தமிழ்நாட்டு வீரர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. தமிழ்நாட்டின் மரிய இருதயம் ஒரு முறை உலக சாம்பியனாக மகுடம் சூடியிருக்கிறார். அவர் வழித்தடத்தில் இன்று, வியாசர்பாடியைச் சேர்ந்த இருபத்தொரு வயது இளவழகி. சமீபத்தில் நடந்த சார்க் மற்றும் ஆசியப் போட்டிகளில் இந்தியா சார்பாகக் கலந்து கொண்டு ஆறு தங்கப் பதக்கங்கள் பெற்றிருக்கிறார்.




“அப்பா நல்லா கேரம் ஆடுவாரு. ஆனா அவரைத் தூக்கிவிட யாருமே இல்லை. அந்த ஆதங்கத்துலதான் எனக்கும் கேரமைக் கத்துக் கொடுத்தாரு. இன்னைக்கு என் வெற்றிகளை யெல்லாம் அவர் அடைஞ்ச வெற்றியா நினைச்சு அப்படி உருகறாரு. ரிக்ஷா இழுத்தாலும் வட்டிக்குக் கடன் வாங்கியாவது என்னை டோர்ணமெண்டுக்கு அனுப்பிடுவாரு. எனக்கும் கேரம் போர்டுல காயினைக் குறிவைக்கும்போது அந்த வட்டத்துல அப்பா முகம்தான் ஞாபகத்துக்கு வரும்” கனத்த மனதோடு பேசுகிறார் இளவழகி.

“அசோசியேஷனைச் சேர்ந்த பங்காரு பாபு பாதை போட்டுக் கொடுத்தார். யு.எஸ்., மாலத்தீவுல நடந்த போட்டிக்காக எண்பத்தையாயிரம் ரூபாயை மனமுவந்து கொடுத்தார் ஐ.ஏ.எஸ். கிறிஸ்துதாஸ் காந்தி. சில நல்ல இதயங்கள் எனக்காக துடிச்சதால தான் அடிமட்டத்திலிருந்து என்னாலயும் கிளம்பி வரமுடிஞ்சது.”

“இந்தியாவுக்காக ஆடினாலும் எங்க செலவை நாங்களேதான் பார்த்துக்கணும். தமிழ்நாடு அரசுகிட்ட உதவி கேட்டோம். 'கேரமெல்லாம் ஒரு விளையாட்டில்லை. இண்டோர் கேம்தான். இதுக்கெல்லாம் நிதி உதவி செய்ய முடியாது'ன்னு பட்டுனு சொல்லிட்டாங்க. கஷ்டமாப்போச்சு. இப்போ இந்தக் கவலையெல்லாம் ஒதுக்கிட்டு நவம்பர்ல நடக்குற உலகக் கோப்பைக்காகத் தயாராகிட்டிருக்கேன்” என்கிறவரின் சுத்த தமிழ்ப் பெயரை இதர மாநிலத்தவர், வெளிநாட்டவர் உச்சரிக்க முடியாமல் சுருக்கமாக 'இல்லு' 'இலம்' என்றெல்லாம் செல்லமாக அழைப்பார்களாம்.

**- ச.ந.கண்ணன்**




# தப்பிய குவாட்ரோச்சி குதிரை!

"லண்டன் வங்கிக் கணக்குகளிலிருந்து குவாட்ரோச்சி பணத்தை எடுத்துவிட்டாரா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை" என்று செய்தி வருகிறது.

அவர் எடுக்காமலிருந்திருந்தால்தான் உலகமகா அதிசயமாக இருக்கும். இந்திய அரசின் ஆசியோடும் ஆதரவோடும் அந்த வங்கிக் கணக்குகள் விடுவிக்கப்பட்டிருக்கையில் அது பற்றி முன்கூட்டியே தகவல் குவாட்ரோச்சிக்குக் கிடைத்திருக்காதா என்ன!

ஆகவே அவர் பணத்தை (ஒரு கணக்கில் மூன்று மில்லியன் யூரோக்கள்; மற்றொன்றில் ஒரு மில்லியன் டாலர்கள்) அந்த வங்கிக் கணக்குகளிலிருந்து திரும்பப் பெறவோ வேறு நாட்டிலுள்ள வேறு வங்கிகளுக்கு மாற்றவோ ஆயத்தமாகவே இருந்திருப்பார்.


பரமசிவன் கழுத்துப் பாம்பாக குவாட்ரோச்சி பேசியிருப்பதுதான் இந்திய இறையாண்மையின் முகத்தில் கரி பூசுவதைப் போல் அமைந்திருக்கிறது.

"என் பேரில் வழக்கு தொடர ஆதாரங்கள் இல்லாததால் இந்திய அரசு என் மீதுள்ள போஃபர்ஸ் வழக்கை வாபஸ் பெறுவதுதான் நல்லது" என்று குவாட்ரோச்சி இந்திய அரசிடம் கூறியிருக்கிறார்!

சுதந்திரத்துக்குப் பிறகு, நமது நாட்டில் வெடித்த ஊழல் வழக்குகளுள் மிகப் பயங்கரமானது போஃபர்ஸ். பிரதமர்




**கல்கி**



2006 ஜனவரி 29
பார்த்திப தை 16
மலர் : 64
இதழ் : 26

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ராஜீவ் காந்தி குற்றம் சாட்டப் பெற்றார். அவரது மனைவியும் இன்றைய காங்கிரஸ் தலைவியுமான சோனியா காந்தியின் குடும்பத்துக்கு மிக நெருக்கமான இத்தாலிய தொழிலதிபர் குவாட்ரோச்சியின் பேரிலும் வேறு பலர் மீதும் குற்றச்சாட்டுகள்.

வழக்கம்போல், அரசியல் தலையீடுகள் காரணமாக குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியவில்லை. வழக்கு சி.பி.ஐ வசம் ஒப்படைக்கப்பட்டு ஜவ்வு போல் வருடக் கணக்காக இழுத்தடிக்குமாறு கவனித்துக் கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் இவ்வழக்கு தொடர்பாக முடக்கப்பட்ட குவாட்ரோச்சியின் வங்கிக் கணக்குகளை விடுவிக்க இந்திய சட்ட அமைச்சர் பரத்வாஜ் ஆணையிடுகிறார். அவ்வாணையை பிரிட்டிஷ் அரசுக்குத் தெரிவிக்க கூடுதல் சொலிஸிடர் ஜெனரல் - அரசு ஊழியர் - ஓசைப்படாமல் அனுப்பி வைக்கப்படுகிறார்!


ஆனால், பத்திரிகைகளில் செய்தி அம்பலமானதும் அரசு தன்னைக் கலந்தாலோசியாமல் இயங்கிவிட்டதாக சி.பி.ஐ சொல்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே இந்நிலையிலிருந்து முற்றிலும் பல்டி அடித்து, குவாட்ரோச்சியின் வங்கிக் கணக்குகளை விடுவித்ததற்கு சி.பி.ஐ முழுப் பொறுப்பேற்கிறது!

"சி.பி.ஐயின் இயக்கத்தில் அரசு தலையிடுவதில்லை" என்று கூறி பிரதமர் கழன்று கொள்கிறார்.

சோனியா காந்தியைப் பாதுகாக்கவே இந்த நாடகம் ஆடப்படுகிறது என்று மக்கள் அனுமானித்தால் அதைக் குறை கூற முடியாது.

குவாட்ரோச்சி குற்றவாளி என்பதை இறுதிவரை நிரூபிக்கவே முடியாமல் போகலாம். ஆனால், செய்தித்தாள்களின் புலனாய்வுகள், ராஜீவ்காந்தி குடும்பத்ினரும் குவாட்ரோச்சியும் இன்னும் சிலரும் இந்த ஊழலில் ஈடுபட்டதற்கான ஆரம்ப ஆதாரங்களை மிக உறுதியாக, தெளிவாக வெளிப்படுத்திவிட்டன. ஊரறிந்த ரகசியமான போதிலும் சட்டபூர்வமாக நிரூபிக்க முடியவில்லை என்பதற்குக் காரணம் அரசியல் தலையீடும் வழக்கைத் தாமதப்படுத்தி இழுத்தடிக்கும் போக்கும்தான்.

இவ்வளவு வருடங்களுக்கு அதனை இழுத்தடித்தது போதாதென்று இப்போது




குவாட்ரோச்சியின் கணக்குகளை விடுவித்ததன் மூலம், கிட்டத்தட்ட அவரை நிரபராதியாகவே அறிவித்தாகிவிட்டது!

இது இந்திய மக்களுக்கு இந்த அரசு இழைத்துள்ள மிகப் பெரிய துரோகம்.

லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம். அதிலும் ராணுவ தளவாட பேரத்தில் லஞ்சம் கொடுப்பதோ பெறுவதோ தேசத்தின் பாதுகாப்பை அடகு வைக்கும் குற்றம். இந்திய மக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் அபகரிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமான ஒருவரை ஊரறிய, உலகறிய, படிப்படியாகத் தன் பிடியிலிருந்து அரசு விடுவிக்கத் துணிந்தது மிகக் கேவலம்.

குவாட்ரோச்சி கணக்குகளை விடுவிக்கக் கூடாது என்ற பொதுநல மனு உச்ச நீதி மன்றத்தில் தொடுக்கப்பட, அதனை விசாரித்த உச்சநீதிமன்றம், கணக்குகளை மீண்டும் முடக்க உத்தரவிட்டிருக்கிறது. இந்த உத்தரவு செயலாக்கம் பெறுவதற்கு முன் பிரிட்டிஷ் அரசு செயல்பட்டு கணக்குகளை விடுவித்துவிட்டது.

ஆனால், நடந்துவிட்டது மிகப் பெரிய குற்றம் என்பதை உச்சநீதிமன்ற ஆணை உறுதிப்படுத்தியுள்ளது. இதற்காகவே சட்ட அமைச்சர் பரத்வாஜ் உடனே ராஜினாமா செய்ய வேண்டும். இதற்காக எதிர்க்கட்சிகள் கூக்குரல் எழுப்பிப் போராட்டம் நடத்துகின்றன. கூட்டணி கட்சிகளோ அரசியல் நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு வாய் மூடி மௌனம் காக்கின்றன.

பரத்வாஜை வீட்டுக்கு அனுப்பும் நிலைக்கு பிரதமர் விரைவில் தள்ளப்படுவார். இருப்பினும் குதிரையைத் தப்பவிட்டுவிட்டு, லாயத்தின் கதவை மூடுவதாக நாடகம் ஆடி என்ன பயன்?

வருகிற தமிழக சட்டமன்ற தேர்தலில் குவாட்ரோச்சி விவகாரத்தை அ.தி.மு.கவின் பிரசார ஆயுதமாக்கி எதிர்க்கட்சிக் கூட்டணியை நிலைகுலையச் செய்ய பாதை போட்டுத் தந்திருக்கிறது காங்கிரஸ் தலைமையில் இயங்கும் மத்திய அரசு.

காங்கிரஸ் கட்சியும் நாடும் எக்கேடு கெட்டால் என்ன...? குவாட்ரோச்சி தப்பினால் போதாதா!? O



சின்ன ஜோக், பெரிய பரிசு!

# போட்டி முடிவு-1

'**கா**தலர் ஜோக்ஸ்' என்றதுமே, லவ்வும் ஜிவ்வுமாக சிரிப்புத் துணுக்குகள் எழுதித் தள்ளி விட்டீர்கள். நன்றி... நன்றி..

வாய் விட்டுச் சிரிக்க வைக்கும்
ஜோக்கை எழுதி திருவொற்றியூர்
தூத்துக்குடி மெட்டல்ஸ் வழங்கும்
'ப்ரீத்தி மிக்ஸி'யை
முதல் பரிசாகப் பெறுகிறார்
**தஞ்சை பா.து. பிரகாஷ்**

"சுதா நம்ம காதலுக்கு நீ ஒரு மெழுகுவத்தி மாதிரி..."

"அட.... அந்தளவுக்கா வெளிச்சம் தரேன்?"

"ம்ஹூக்கும்... அந்தளவுக்கு எரிஞ்சு விழுறே!"

**பா.து. பிரகாஷ்,**
மானம்புச்சாவடி,
தஞ்சை 613 001.

**பி**ரசுரத்துக்குத் தேர்வாகி சன்மானம் பெறும் அரை டஜன் சிரிப்புகள் இதோ...!

"இதோ பாரு டியர்... எனக்குன்னு ஒரு பாலிஸி வச்சிருக்கேன்... அதை யாராலும் இலேசுல மாத்த முடியாது...!"

"எத்தனை லட்ச ரூபாய்க் கூடா செல்லம்?"

**- கே.ஜி.எஸ்**

"கண்ணே என் சம்பளம் உனக்குப் போதுமா?"

"எனக்குப் போதும்... உன் செலவுக்கு என்ன பண்ணப் போறே"

**- நா. நாகராஜன்**

"டியர்! நான் எழுதின கவிதைகள்ல உனக்கு ரொம்பப் பிடிச்சது எது?"

"பைத்தியம்!"

**- தமிழ்நாயகி**

"தம்பி... என் பெண்ணை மறந்துடு. இந்தா ஐம்பதாயிரம் ரூபாய்."

"சார்... எங்க காதலை ரொம்ப குறைச்சு மதிப்பிட்டுட்டீங்க!"

"சரி... இந்தா ஒரு லட்சம்..."

"ரொம்ப தேங்க்ஸ் சார்."

**- சென்னிமலை சி.பி. செந்தில்குமார்**

"நமக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் ஆகாது."

"உங்களுக்குன்னு சொல்லுங்க. என்னை ஏன் சேர்த்துக்கிறீங்க?"

**- ஜீ. விஷ்ணுகிரி**

"பொங்கலுக்கு நான் அனுப்பிய 'பொக்கே' நல்லா இருந்ததா பானு?"

"நீங்க அனுப்பியதா அது! யார் அனுப்பியதுன்னு தெரியாம குழம்பிப் போயிட்டேன்."

"'அன்புக்காதலன் சுரேஷ்'னு போட்டிருந்தேனே!"

"இனிஷியல் போடலையே!"

**- க. செல்வகுமார்**

# சினிமா நடிகைகளால் முடியுமா?

## – காவேரி சவால்!



சின்னத்திரை கர்சீஃப் ரசிகைகளால் மறக்க முடியாத தொடர் - மெட்டி ஒலி; அதிலும் அவர்கள் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் குரல், தனத்தின் வாஞ்சையான "போஸ் மாமாாாாாாாா".

"சீரியல் முடிஞ்சு இத்தனை நாள் ஆகியும் இன்னைக்கும் 'தனம்'னுதான் அடையாளம் காட்டறாங்க. திருமுருகன் கிட்ட நாம கல்லாகப் போய் நின்னா போதும். அவர் கற்சிலையாகச் செதுக்கிடுவார். இன்னைக்கும் மெட்டி ஒலி கதாபாத்திரங்கள் நினைக்கப்படுது; பேசப்படுது. எனக்கு மட்டுமில்லை ரசிகர்களுக்கும் இன்னொரு மெட்டி ஒலி கிடைக்குமாங்கிறது சந்தேகம்தான்" தனம் மாதிரி மெட்டி ஒலி பற்றி ஓயாமல் பேசுகிறார் காவேரி.

தமிழ் மணக்கும் காவேரி என பெயர் வைத்திருந்தாலும் மேடம், ஆங்கிலோ இந்தியன். 89-ம் வருடம் 'வைகாசி பொறந்தாச்சு' மூலமாகத் தமிழ் சினிமாவில் அறிமுகம். அதன் பிறகு சொல்லிக் கொள்ளும் படியான படங்கள் எதுவுமே இவருக்கு அமையவில்லை. பார்த்தார். மடாரென டீ.வி. பொட்டிக்குள் நுழைந்து விட்டார்.

"91-ல் டி.டி.2ல ஆரம்பிச்ச வண்டி இன்னைக்கு வரைக்கும் பிரச்னை இல்லாமல் போயிட்டிருக்குங்க. ஆனா இந்த சினிமா நடிகைகள் ஏன் டீ.வி.யை ஏதோ கொடூர வில்லனைப் பார்க்கிறதுபோல பார்க்கிறாங்கனு புரியவே இல்லை. டீ.வி. மாதிரி விதவிதமான பாத்திரங்களை சினிமாவுல பண்ணவே முடியாது. பாட்டுக்கும் கவர்ச்சிக்கும் மட்டுமே நடிகைகளை விரட்டிக்கற சங்கதியெல்லாம் இங்கே இல்லை. ரீச்சும் அதிகம். நான் பதினாறு வருஷமா டீ.வி.யில தாக்குப் பிடிச்சிட்டு இருக்கேன். இதுமாதிரி சினிமா நடிகைகளால முடியுமா? காலம் கடந்து வந்தா டீ.வி.யில நிலைக்கறது கஷ்டங்க. ஒரே சீரியல்ல காணாமப் போன எத்தனை நடிகைகளைப் பார்த்திருக்கோம்" அனுபவம் உரக்கப் பேசுகிறது.

"முன்னெல்லாம் நம்ம பெண்கள் நாவல்களைக் கரைச்சு குடிச்சுட்டு இருந்தாங்க. இப்போ, அதே நாவல்களை சீரியலா விழுந்து விழுந்து பார்க்கறாங்க. ஆயிரம் பேர் ஆயிரம் குறைகள் சொல்லலாம். சீரியல்களுக்கிருக்கும் மவுசு என்னைக்கும் குறையாது. எங்க வண்டியும் நிக்காது."

- பப்பி

படம் : ஸ்ரீஹரி

சேனல்-2

பிட்டா பிடிங்க







# புது மார்க்கெட்டிங்!

**வி**ஜய் டீ.வி.யில் முன்னொரு காலத்தில் சிம்ரனை வைத்து சிறப்பு நிகழ்ச்சி செய்தது வாஸ்தவம்தான். அதற்காக அரதப்பழசையே இவ்வருட புத்தாண்டுக்கும் பொங்கலுக்கும் பரிமாறியிருக்க வேண்டுமா? ஜீரணிக்க முடியவில்லை.

**ர**ம்ஜான் சமயங்களில் அரசியல் தலைவர்கள் மசூதிக்குச் சென்று, கூழ் அருந்தி மதசார்பின்மை வோட்டைச் சேகரிப்பார்கள். அதுபோல விஜய், சூர்யா, சிம்பு, ஜெயம் ரவி போன்ற இளம் நடிகர்கள், தாங்களும் மக்களோடு மக்களாக இணைந்து பொங்கல் கொண்டாடுவதாகக் கூறிக் கொண்டு, அவரவருக்கு தோதுபட்ட கிராமங்களுக்குச் சென்று, வயல் வரப்பில் இறங்கி ஏர் பிடித்து, டிராக்டர் ஓட்டி... எல்லாம் புதுமையான மார்க்கெட்டிங்தான். அடுத்து இதேபோல் காதலர் தினம், சுதந்திர தினம், விநாயகர் சதுர்த்திக்கெல்லாம் என்னென்ன செய்வார்களோ?

**ந**டு நிலைமையோடு ஒரு செய்தியைத் தமிழ் சேனல்களில் காண முடியாதா என்கிற ஏக்கம் தீர வழி பிறந்துள்ளது. ராஜ் டீ.வி. மீண்டும் தனது செய்தி ஒளிபரப்பை சமீபத்தில் ஆரம்பித்துள்ளது. அப்பாடா!

**இ**ந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் மேட்ச் நேரடி ஒளிபரப்பு இம்முறை தூர்தர்ஷனில் கிடையாது. இதில் பெரிதும் பாதிப்படையக் கூடியவர்கள் சென்னை மக்கள்தான். சடந்த இரண்டு வருடங்களாக சென்னையில் மட்டும் புழக்கத்திலுள்ள செட்-அப் பாக்ஸுக்கு கெட் அவுட் சொல்ல அரசோ சட்டமோ முன் வராதது ஏனோ?

**ச**ன் மியூசிக்கில் காலை ஏழு மணி நிகழ்ச்சியின் தொகுப்பாளர்கள் தொடர்ந்து சொதப்புகிறார்கள். பார்க்கவே இம்சையாக உள்ளது.

**வி**ன் டீ.வி.யில் காலை 8 மணிக்கு அரசியல், நாட்டு நடப்புச் செய்திகளை மூன்று பேர் அக்கு வேறாக ஆணி வேறாக அலசுவதும் இரவு 9 மணிக்கு அரசியல் வி.ஐ.பி. ஒருவரை நிஜந்தன் பேட்டி காண்பதும் பாராட்டக்கூடிய முயற்சிகள்.

- செந்தில்

படங்கள் : ஸ்ரீஹரி

# அந்த ஆசை!

நாடகக் காவலர் ஆர்.எஸ்.மனோகருக்கு ஓர் ஆசை. அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில் இடம்பெறும் முக்கிய கதாபாத்திரமான பெரிய பழுவேட்டரையர் சம்பந்தப்பட்ட பகுதிகளை மட்டும் நாடகமாக்கி, பழுவேட்டரையராக தானே நடிக்க வேண்டும் என்பதுதான் அது.

பொன்னியின் செல்வனைத் திரைப் படமாக எடுப்பதற்கான உரிமையைப் பெற்றிருந்த எம்.ஜி.ஆரிடம் தமது விருப்பத்தைச் சொல்லி அனுமதி கேட்டார். ஆனால் எம்.ஜி.ஆரோ, "நான் சினிமாவாக எடுக்கிற வரை நீங்கள் அந்த நாடகத்தை மேடை ஏற்ற வேண்டாம். அதன்பிறகு அரங்கேற்றுங்கள்" என்று கூறிவிட்டார்.

மனோகரின் அன்று நிறைவேறாத அந்த ஆசை, சமீபத்தில் வேறு விதமாக நனவானது. கடந்த ஓராண்டு காலமாக சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பிய 'பொன்னியின் செல்வன்' வானொலி நாடகத்தில் பெரிய பழுவேட்டரையர் பாத்திரத்தில் கம்பீரமாகப் பேசி நடித்தவர் ஆர்.எஸ்.மனோகர்.

தனது ஒவ்வொரு நாடகத்திலும் என்னென்ன தந்திரக் காட்சிகளை இடம் பெறச் செய்யலாம் என்று சிந்தித்து, அவற்றைத் தகுந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தத்ரூபமாக மேடையில் காட்சிகளை அமைத்து, பார்ப்புவர்களை பிரமிப்பில் ஆழ்த்தியவர் மனோகர். பரசுராமர் நாடகத்தில் பரசுராமர் தன் தாயின் தலையைக் கொய்கிற காட்சியிலும் சரி, மறுபடி தலைகள் (மாறி) ஒட்டிக் கொள்ளும் காட்சியிலும் சரி, அரங்கில் அமர்ந்திருப்பவர்களுக்கு த்ரில்லை ஏற்படுத்துமே தவிர திகிலையோ, அருவருப்பையோ ஏற்படுத்தாது.

கடந்த ஆண்டு மிக எளிமையான முறையில் தமது எண்பதாவது வயதைக் கொண்டாடினார். அதனையொட்டி, கல்கி தீபாவளி மலருக்கு ஒரு கட்டுரை எழுதுவதற்காக அவரைச் சந்தித்தேன். சுமார் இரண்டு மணி நேரம் தமது பல்லாண்டுகால நாடக, திரையுலக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.


அவரது வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து எழுதும் எனது ஆசையை வெளியிட்டபோது, "ஓ! கண்டிப்பாய் எழுதுங்கள். ஒத்துழைப்புத் தருகிறேன்" என்று சந்தோஷப்பட்டார்.

தீபாவளி மலர் கட்டுரையைப் படித்து விட்டு, போன் மூலம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துச் சொன்னார்.

டிசம்பர் மத்தியில் அவருடன் பேசி, ஜனவரியில் 'தொடரை ஆரம்பிக்கலாம்' என்றபோது "ஓ! நிச்சயம்!" என்றார்.

எனது துரதிருஷ்டம்! காலன் முந்திக் கொண்டு விட்டான்.

**- எஸ்.சந்திரமௌலி**





## எங்கள் எம்.எஸ்.

எனக்கு அப்போ பத்து வயசிருக்கும். எங்க அம்மா, அப்பா இரண்டு பேரும் 'கல்கி' கார்டன்ஸ்ல வேலை செஞ்சுக்கிட்டிருந்தாங்க. அரண்மனை மாதிரி வீடு, பெரிய தோட்டம், விளையாட ராதா, விஜயா, தங்கம், ஆனந்தினு என் வயசுக் குழந்தைகள்னு எனக்கே பிடிச்ச விஷயங்கள் நிறைய இருந்ததால நான் அடிக்கடி போய் விளையாடிக்கிட்டிருப்பேன்.

அங்கேதான் எம்.எஸ். அம்மாவைப் பார்த்தேன். மலர்ந்த முகம், அழகான கூந்தல், மென்மையான பேச்சுடன் அவர் வளைய வரும் அழகைப் பார்த்து பலமுறை பிரமித்துப் போயிருக்கிறேன்.

# தாயே... சேயாகி!



* விசாலம் அம்மாள்

நான் துறுதுறு என இருப்பதைக் கவனித்த எம்.எஸ். அம்மா, என் பெற்றோரிடம், "இந்தக் குட்டி கொஞ்ச நாளைக்கு இங்கியே இருக்கட்டுமே" என்று கேட்டிருக்கிறார். 'கொஞ்ச நாளைக்கு' என்பது இறைவன் கணக்கில் கிட்டத்தட்ட அறுபத்து மூன்று வருஷம் என்று அப்போது யாருக்குத் தெரியும்?

அன்றிலிருந்து அம்மா கூடவே இருந்து, அவர் காலமாகும்வரை, அவருக்கு வேண்டிய எல்லா தொண்டுகளையும் செய்யும் பாக்கியம் கிடைச்சுது.

சதாசிவம் அய்யாவே அம்மாவைக் கிண்டல் பண்ணுவார்.

"குஞ்சம்மா... உன்னோட லைஃப் டைம்ல நீ அதிகமாகக் கூப்பிட்ட பேர் விசாலமாகத்தான் இருக்கும்" என்பார்.

அதென்னவோ அம்மாவுக்கு அப்படி ஒரு ப்ரியம். எப்பவும் நான் கூடவே இருக்கணும்.

"விசாலத்துக்கு மாப்பிள்ளை பார்த்தாச்சு. செஞ்சியில கல்யாணம்"னு எங்கப்பா போய் தகவல் சொன்னதும், நான் அவங்களை விட்டு நிரந்தரமா பிரிஞ்சுடுவேன்னு நினைச்சாங்களோ என்னவோ, படுக்கை அறைக்கு ஓடிப்போய் கட்டிலிலே விழுந்து குப்புறப் படுத்துக் கொண்டு கேவி கேவி அழ ஆரம்பிச்சுட்டாங்க.

"அவளுக்கும் பதினாறு வயசாறதே! கல்யாணம் பண்ண வேண்டாமா? திரும்பவும் இங்கே வந்துடுவா"னு சதாசிவம் அய்யா சமாதானப்படுத்தினாரு.

அம்மாவுக்குத் தினமும் கச்சேரி,

ரிக்கார்டிங்னு ஏதாவது இருக்கும். அதனால, அவங்க உடம்புக்குச் சின்னதா கூட அசௌகரியம் எதுவும் வந்துடக் கூடாதுன்னு நான் கவனமா இருப்பேன். ஆனால், அவங்க என்னோட ஆரோக்கியத்துல ரொம்ப கண்டிப்பா இருப்பாங்க.

"கிருத்திகை, சோமவாரம், வெள்ளிக் கிழமைனு நினைச்சு நினைச்சு தலைக் குத் தண்ணி விட்டுக்கறே. ஆனா தலையைச் சரியா துடைக்கக் கூட செய்யாம, வேலை வேலைனு போயிடறே''னு சத்தம் போடுவாங்க.

அவங்க எதிர்ல ஒத்தைத் தும்மல் போட்டுட்டாகூட டென்ஷன் ஆயிடுவாங்க.

'டக்'குன்னு பக்கத்துல வந்து தலையைத் தொட்டுப் பார்ப்பாங்க. அது ஈரமா இருந்ததோ, நான் தொலைஞ்சேன்.

''போ... தலையைத் துவட்டு. சாம்பிராணி போடுனு" கை வேலையை விட்டுட்டு விரட்டுவாங்க.

சாப்பிட என்ன கொண்டு போனாலும், கையில வாங்குறதுக்கு முன்னால,



• எம்.எஸ்.ஸுடன்

"போன்ல யாருய்யா?!"

"நம்ம படத்துல வக்கீலாய் நடிக்கிறவர், சார். இன்னிக்கு நடிக்க வரமுடியாத சூழ்நிலையாம். வாய்தா கேட்கறார்!"

- யமுனா ரெங்கநாதன்

செஞ்சு கொடுப்பேன். "பக்கத்துலேயே இருந்து இன்ஸ்பெக்ஷன் பண்றியே"னு செல்லமா கோவிச்சுப்பாங்க.

"அவளைக் கோவிச்சுக்காதே குஞ்சம்மா. அவ நம்மோட தாயார்"னு



"நீ சாப்பிட்டியா?"னு கேட்பாங்க.

"நான் சாப்பிட்டுட்டு தானேம்மா உங்களுக்குக் கொண்டு வர்றேன்" என்பேன்.

"பொய் சொல்லாதே. கொன்னுருவேன்"னு ஆள் காட்டி விரலை, மூக்குக்கு நேராக வைத்து குழந்தை போல மிரட்டுவார். அந்த அழகைப் பார்க்கவே, அதுபோன்ற நிறைய பொய் சொல்லத் தோணும்.

உணவு விஷயத்தில் அய்யா எப்போதுமே கரெக்டா இருப்பார். ருசிச்சு சாப்பிடுவார். அளவாச் சாப்பிடுவார். கத்திரி, பிடி கருணை, பீர்க்கங்காய் போன்றவற்றில் ஒரு துவையல் அரைத்து, மோர் சாதம் பிசைஞ்சு வைத்தால்கூட, ரொம்ப ரசனையா சாப்பிடுவார். இரண்டு ஸ்பூன் சாதம் அதிகமாயிட்டாலும், தனியே எடுத்து வைச்சுடுவார்.

ஆனால் அம்மா அப்படியில்லை. அவங்களைச் சாப்பிட வைக்கிறதுக்குள்ளே பெரும்பாடாயிடும். பெரிய விருந்துக்குப் போனால் கூட ஏதோ பேருக்குக் கொறிச்சு வைப்பாங்க. அதுவும் அம்மாவுக்கு வயசான பிறகு குழந்தைக்குப் பண்ற மாதிரி, ஏதேதோ தாஜா செஞ்சு சாப்பிட வைக்க வேண்டியதா போச்சு.

கோதுமைக்களி, கோதுமை தோசை

சொல்லிட்டு, என் பக்கமா திரும்பி, "நாங்க மேலே போனால் கூடவே நீயும் வந்துரு விசாலம். வேளா வேளைக்கு ஆகாரம், மருந்து தர அங்கே ஆள் இருக்காளோ என்னவோ!"னு ஜோக் கடிச்சு, அம்மாவைச் சாப்பிட வைச்சுடுவார் அய்யா.

அம்மா எப்பவும் சிம்பிளா, அழகா டிரஸ் பண்ணிப்பாங்க. கஸ்தூரி மஞ்சள், ஐதராபாத் குங்குமம், கரிசலாங்கண்ணி மை, சீயக்காய் தூள் என கடைசிவரை இயற்கையான அழகுப் பொருள்களைதான் பயன்படுத்தினாங்க.

சின்ன வயசுல, அவங்க கூந்தலைப் பிரிச்சு விட்டா, மயில் தோகை போல, அவ்வளவு அழகா இருக்கும்.

"எம்.எஸ். என்ன ஷாம்பூ பயன்படுத்தறாங்க"னு நிறையப் பெண்கள் என்கிட்ட கேட்டதுண்டு.

"பயத்தமாவு கலந்த சீயக்காய் தூள் தான்"னு சொன்னா, நம்பவேமாட்டாங்க.

அம்மாவுக்கு தங்க நகைகளில் பெரிய ஆர்வம் இருந்ததில்லை. கண்ணாடி வளையல்கள்னா ரொம்ப ஆசையா போட்டுக்குவாங்க. இரண்டு பெட்டி நிறைய சேர்த்து வைச்சருந்தாங்க.

எப்பவாவது சதாசிவம் அய்யா பார்க்க நேர்ந்தால், "எதுக்கு இவ்வளவு? பர்டனா?"ம்பார். உடனே அம்மா அதையும் நாலு நாலு வளையா எடுத்து வேண்டியவங்களுக்குக் கொடுத்துடுவாங்க! கண்ணாடி வளையலையே பெருஞ்சுமையா நினைச்ச எளிய மனசுக்காரங்க அவங்க.

அம்மாவுக்கு ரொம்ப உடம்புக்கு முடியாமல், 'இஸபெல்லா'வுல சேர்த்துருந்தாங்க. நான் அவங்களைப் பார்க்கப் போயிருந்தேன். ரொம்ப பலவீனமா இருந்ததால, எல்லார்கிட்டேயும் ஜாடையில பேசிக்கிட்டிருந்தாங்க. நான் அவங்களுக்கு நமஸ்காரம் பண்ணிட்டு, 'நான் போயிட்டு வர்றேன்'னு ஜாடை காட்டினேன். உடனே அவங்க மெல்லிய குரலில், "எங்கே போறே? ஏன் போறே... சீக்கிரம் வந்துரு"னு சொன்னாங்க.

அதுதான் நான் கடைசியா பார்த்ததும், பேசியதும்.

"சீக்கிரம் வந்துரு"னு சொன்னாங்க. அம்மா போய் ஒரு வருஷம் ஆச்சு. இன்னும் அவங்களைப் போய் பார்க்க எனக்கு நேரம்தான் வரலை.

நான் அவங்க வயித்துல பிறக்கலையே தவிர, நானும் அவங்களுக்கு ஒரு மகள் மாதிரிதான். ராதாவும் விஜயாவும் என்னைச் சகோதரி போலதான் இப்பவும் நடத்தறாங்க. உலகம் போற்றும் இசைப் பேரரசிக்கு சிறு தொண்டு செய்ய எழுதப் படிக்கத் தெரியாத இந்த சாமானியளுக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்ததே.. அதை என் பூர்வ ஜென்ம புண்ணியமாகவே நினைக்கிறேன்.

# டி.வி.ராணி M.B.B.S.

**புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறது ஹெல்த் சானல். ஒவ்வொரு சீரியலிலும் ஒவ்வொரு வியாதியை விலாவாரியாக அலசி ஆராய்கிறார்கள்.**

**சில நாட்களுக்கு முன்னால் 'முட்டி வலி' என்ற சீரியல் படு பாப்புலராக ஆனதில் வந்த ஆர்வக் கோளாறு. இனி டீ.வி.ராணி எம்.பி.பி.எஸ். வழங்கும் தமிழ் சீரியல்கள் பற்றி...**

**ஜலதோஷங்கள்** : 'கோலங்கள்' போடுகிற பெண்களுக்கு ஜலதோஷங்கள் வருவதைப் பற்றித் தான் கதையே. ஆண்டவன் எப்படி ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு விதமான ஜலதோஷத்தைத் தருகிறான் என்பதுதான் கதைக்கரு. இதைக் கண்ணில், மூக்கில் நீர் வழியச் சொல்கிறார்கள். மிடில் கிளாஸ் பெண் அபி. இவளுக்கு நிறைய தம்பி, தங்கைகள். இரண்டுங்கெட்டான் மாமா வேற. அம்மாவுக்குத் தீவிர சைனஸ். எப்போதும் மூக்கை உறிஞ்சிக் கொண்டேயிருக்கிறார்.

அபியின் திருமணத்தின்போது விக்ஸ், அமிர்தாஞ்சன், கற்பூரம்... இதெல்லாம் ஏகமாகச் சீர் வைக்கவில்லை என மாமியார் நனினமேயில்லாமல் ஆர்ப்பாட்டம் பண்ணித் தள்ளுகிறார். அபியின் அப்பாவுக்கு கபம் ஜாஸ்தியாகி மறந்து வேறு வீட்டுக்குப் போய் விடுகிறார். இவருக்கு ஒரு மகன். அவனுக்குக் கடுமையான ஈஸ்னோஃபீலியா..

அபி எப்படி பனி, புகை, தூசு, ஒட்டடையினால் கஷ்டப்பட்டுக் கொண்டே ஆடாதொடை இலை, கற்பூரவல்லி, கீழா நெல்லின்னு... மாத்தி மாத்தி பிஸினஸ் பண்ணுகிறார்னு சீரியலில் காண்பிக்கிறார்கள். கஷாயத்தைக் குடித்துக் கொண்டே தவறாமல் பெண்கள் பார்க்கும் சீரியலில் டாப் இது.

**சுளுக்கை எடுப்போம்** : நிச்சயம் ஒரு நாள் அந்த சுளுக்கை எடுப்போம் என பெண்கள் சவால் விடுகிறார்கள். ஏகப்பட்ட கதாபாத்திரங்கள். ஒவ்வொருத்தருக்கும் ஒருவித சுளுக்கு. ஆனால் 'அண்ணி' தேன்மொழி அசராது மளுக் மளுக்கென சுளுக்கை எடுத்து தினமும் நல்ல பெயரைத் தட்டி விடுகிறார். சுளுக்கில் இத்தனை வலியா எனத் துடிக்க வைத்து விடுகிறார்கள். அண்ணி, ஒரு கையில் மூவ் இன்னொரு கையில் அயோடெக் ஸ்மாக அலைகிறார். ஆனால் அவர் மாமியாரோ 'கை வைத்தியம் பாத்துக்கறேன். சூடு பறக்க எண்ணெய்த் தேய்ச்சு சுளுக்கை எடுத்துக்கறே'ன்னு தேன்மொழியை நோக அடிக்கிறார். வீட்டில் ஆசார பாட்டி ஒருவர் இருக்கிறார். அவருக்குத் தேன்மொழியின் இங்கிலீஷ் வைத்தியம் பிடித்துப் போக தன் பேரனை ஒப்படைத்துவிடுகிறார். கிச்சா ஏக உயரம். அண்ணாந்து பார்த்துப் பார்த்து தேன்மொழிக்குக் கழுத்தில் சுளுக்கு...


**புதல்வி** : ராடன் தயாரிப்பில் இரு புதல்விகளைப் பற்றிய கதை. இப்போதைக்கு அதிக பரபரப்புள்ள சீரியல். ஒபிசிடி, கோமா என்ற இரு வியாதிகளைப் பற்றிய கதை. தன் தோழி இப்படி நாளுக்கு நாள் புல்டோஸர் கணக்காக வெயிட் ஏறிக் கொண்டே போவதில் ராதிகாவுக்கு ஏகக் கவலை.

மரோசரித்ராவில் கமலுடன் கலக்கிய தோழி இப்படித் தூணாக மாறிப் போனதில் ராதிகாவுக்கு ஒரே அழுகை. ஒபிசிடி மாத்திரம் அல்ல மறதி வேற. சாப்பிட்டு விட்டு கையை அலம்பி திரும்ப சாப்பிட உட்கார்ந்துவிடுகிறார். கேட்டால் கோமா மயக்கம் என்கிறார் சரிதா. "இப்படி ஊதிக் கொண்டே போனால் புத்துணர்ச்சி மூகா முக்கு அள்ளிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?" என பரிதவித்து ராதிகா படும்பாடு இருக்கிறதே... சூப்பர்!

**பொன்னுக்கு வீங்கி** : சனி ஞாயிறு வந்தாலே சினிமாவில் சான்ஸ் காலியான நடிகைகளின் அட்டகாசம்... உடல் எடை

போட்டுவிட்ட சில மாஜி கதாநாயகிகள் அடைஜரிகைப் புடைவை, மாடிப்படி, பால்கனி, பலகணி, சாளரம் வைத்த ப்ளவுஸ் என காபரா படுத்துகிறார்கள். அதில் சமீபத்திய வரவு காம்யா க்ருஷ்ணன். இதில் ஜாடியில் வடுமாங்கா, ஆவக்காய் போல அவ்வப்போது பொற்காசுகளை ஊறப் போடுகிறார். போட்டியாளர்களுக்கு ஒரே கண்டிஷன். பொன்னுக்கு வீங்கி வந்திருக்கணும். எஸ்.எம்.எஸ். அனுப்பினால் ஆம்புலன்ஸில் அள்ளிக் கொண்டு ஸ்டுடியோவுக்குப் பறக்கிறார்கள்.

- லதா சேகர்






# வீடியோ ரிங்டோன்ஸ்!

## ஆல்-இன்-ஆல் கூகுள் பேக்!

பில்கேட்ஸுக்கு அடிக்கடி பீதி ஏற்படுத்தி வரும் கூகுளின் லேட்டஸ்ட் கலக்கல், அது அறிமுகப் படுத்தியுள்ள கூகுள் பேக். இந்த பேக்கில் ஒருவருக்குத் தேவையான எல்லாவிதமான சாஃப்ட்வேர்களையும் இலவசமாக அள்ளித் தருகிறது கூகுள்.

தற்போதைய நெம்பர் ஒன் ப்ரௌஸரான மொஸில்லா பயர் ஃபாக்ஸ், வைரஸைத் தடுக்க நார்ட்டான் ஆண்ட்டி - வைரஸ், அட்-அவேர் எனும் ஸ்பைவேர், pdf பைல்களை வாசிக்க அடோப் ரீடர் 7, சாட் செய்ய கூகுள் டாக், டிரில்லியான் இன்ஸ்டண்ட் மெஸெஞ்சர், உலகத்தைச் சுற்றிவர கூகுள் எர்த், வீடியோ & ஆடியோவுக்கு ரியல் ப்ளேயர், இமேஜ்வொர்க்குக்கு கேலர் ப்ளேயர், கூகுள் டெஸ்க்டாப் சர்ச், கூகுள் ஸ்க்ரீன்சேவர், கூகுள் டூல்பார், பிகாஸா எனும் போட்டோக்களைக் காண உதவும் மென்பொருள் என இத்தனையையும் ஒரே பொட்டலத்தில் கட்டி இலவசமாகத் தருகிறது. ஒவ்வொன்றையும் தனித்தனியாக தேடிச் சென்று டௌன்லோட் செய்ய வேண்டாம்.

எல்லாமே மைக்ரோசாஃப்டுக்கு போட்டியான மென்பொருள்கள் என்பது குறிப்பிடத் தக்கது. ஆண்ட்டி - மைக்ரோசாஃப்ட் புராடக்டாக இருந்தாலும் கூகுள் பேக் பீட்டா வெர்ஷன் விண்டோஸ் XPல் மட்டுமே செயல்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

## கொஞ்சிக் கொஞ்சி...


ஒவ்வொன்றுக்கும் பரிணாம வளர்ச்சி என்று ஒன்று உண்டல்லவா! அதற்கேற்ப ரிங்டோன்ஸ் தற்போது தனது அடுத்த கட்டத்தை எட்டிப் பிடித்துள்ளது. டிரிங்... டிரிங்கிலிருந்து சினிமா, பாப் என பலதரப்பட்ட பாடல்களின் ஓசைகளாக உருமாற்றமடைந்து ஆடியோவாக உலவிக் கொண்டிருக்கும் ரிங்டோன்ஸ், தற்போது வீடியோவாகவும் உருப் பெற்றுள்ளது. இனி யாராவது உங்களை செல்லில் அழைத்தால், அஸின் வந்து 'சிச்சிச்சி' என கொஞ்சிப் பாடி ஆடும் வசதி உங்கள் செல்போனிலேயே வரும் நாள் வெகு தூரத்திலில்லை. மகாயமா இண்டராக்டிவ் எனும் நிறுவனம் செல்போன்களில் வீடியோ ரிங்டோன் வசதியை ஏற்படுத்தும் 'வாட்ச் டோன்' எனும் மென்



பொருளைத் தயாரித்துள்ளது. இந்த மென்பொருள் தற்போது சர்வதேச சந்தையில் புழக்கத்திலிருக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் செல்போன்களுக்குப் பொருந்தக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## வலையோடி

இணைய உலகில் தமிழின் வளர்ச்சியைப் பெருக்கும் விதத்தில் வருகிறது ஓர் இணைய உலாவி, அதான் ப்ரௌஸர். Panacea நிறுவனம் அறிமுகப்படுத்தும் வலையோடி (Valaiyodi) என்ற தமிழ் ப்ரௌஸர்தான் அது. எல்லா மக்களும் பயன்படுத்தும் விதத்தில் இணையத்தில் இலவசமாக டௌன்லோட் செய்துகொள்ளலாம். (www.periyar.org/html/dl_tfw_Valaiyodi.asp) 'ஆங்கிலத்தில் இருக்கும் தகவல்களைத் தமிழில் மாற்றம் செய்து தருவதே இந்த ப்ரௌஸரின் சிறப்பம்சம். இணைய அறிவு இல்லாதவர்களும் இணையம் பற்றி நன்கு அறிந்துகொள்ள உதவும், இந்தத் தமிழ்



ப்ரௌஸர்' என்கிறார் இதன் வடிவமைப்பாளர் ஆர். துரைப்பாண்டியன். (இன்னும் முழு அளவில் வடிவமைக்கப்படவில்லை) 'செல்வம்' எனும் அக்கௌண்டிங் மென்பொருள், 'வள்ளுவன்' எனும் தமிழ் டாக்குமெண்டேசன் மென்பொருள், 'முகவரி' எனும் தமிழ் அட்ரஸ் புக் இவையெல்லாம் இந்நிறுவனத்தின் பிற தமிழ் மென்பொருள்கள். வலையோடி மட்டும் சரியான முறையில் வெற்றி பெற்றால் தமிழின் வளர்ச்சியில் அது ஒரு மைல்கல்.

- முகில்



## முள் நீக்கிய மலர்ப் பாதை!

✉ சுனந்தாஜியின் ஆன்மிக விளக்கங்கள் யாவும் மனச்சுமையை அகற்றி மனநிறைவைத் தந்தன.

**கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.**

✉ சிலர் பேசினால் கேட்டுக்கொண்டே இருக்கலாம். சிலர் எழுதினால் படித்துக்கொண்டே இருக்கலாம். இன்னும் சிலரோ பேசியபடியே எழுதினாலும் கேட்டபடியே படித்துக் கொண்டும் இருக்கலாம்! 'சுனந்தாஜீ' இந்த வகைதான். பகவத் (கீதை) கிருபையினால் எங்களுக்கு வாரம்தோறும் அட்சயபாத்திர பிரசாதம் கிடைத்தது.

**சென்னை, விஜயாமுரளி**

✉ சுனந்தாஜி காட்டியது முள் நீக்கிய மலர்ப்பாதை. அதன் வழி நடந்தால் மகிழ்ச்சியான, அமைதியான, வாழ்வை நிச்சயம் எட்டலாம்!

**சென்னை, வல்லி டி. அழகு**

✉ ஒவ்வொருவரும் தத்தம் கடமையை உணர்ந்து முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டால் நிறைவான வெற்றி கிடைக்குமென நிறைவு செய்தது மிக அருமை.

**மதுரை - 7, இரா. சக்கரபாணி**

✉ 'வெற்றி உங்கள் சாய்ஸ்' தொடரில் பகவத்கீதையின் சாராம்சத்தைப் பிழிந்தெடுத்து, எந்தவித அலங்கார, ஆர்ப்பரிப்பு வார்த்தைகளில்லாமல் மிக மிக எளிமையான சொற்களால் கூறி வந்ததே மன அமைதியைத் தந்தது.

**ஆடுதுறை, ஜி. ராமதாஸ்**

# தினம் தினம் கொண்டாட்டம்!

**வா**னவில் வயசு' தொடர் பற்றி, குறும்பான ஒரு குறுஞ்செய்தி, என் செல்விடப் பேசிக்குள் வந்து சப்தமெழுப்பியது. தஞ்சாவூரிலிருந்து ராகவ் மகேஷ் என்கிற இளங்கவிஞர் அனுப்பியிருந்தார். "டானிக் தொடர்னு போட்டிருக்காங்க! எப்படிப் படிக்கணும்? சாப்பாட்டுக்கு முன்பா? பின்பா?" என்று கேட்டிருந்தார். "சாப்பாட்டுக்குப் பதிலா" என்று பதில் அனுப்பினேன்.

இது குறுஞ்செய்திகளின் காலம். இளசுகளின் இனிய தோழன் எஸ்.எம்.எஸ்.தான். குறுஞ்செய்திகளில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொன்று கோலோச்சும். இப்போது அதிகம் அனுப்பப்படுபவை 'தத்துவம் 2006' என்று தலைப்பிடப்பட்ட குறுஞ்செய்திகள்தான். "ரயில் எவ்வளவுதான் வேகமா வந்தாலும் கடைசிப் பெட்டி கடைசியாத்தான் வரும்" என்று ஆரம்பித்து, "நாய்க்கு நாலு கால் இருந்தாலும் அதாலே கால்மேலே கால் போட்டு உட்கார முடியாது", "டீ கோப்பையிலே டீ இருக்கும். உலகக் கோப்பையிலே உலகம் இருக்காது" என்பது போன்ற உச்சகட்ட உளறல் உற்சாகங்களை இள வட்டங்கள் தங்களுக்குள் தட்டி விட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

**நீ**ளக் கதை பேசும் கடிதங்களை, ஈ மெயில்களை விட்டுவிட்டு குறுஞ்செய்திக்குள் எல்லாவற்றையும் முடித்துக் கொள்வது எதைக் காட்டுகிறது? உறவு வட்டம் குறுகி வருவதைக் காட்டுகிறது. "ஹாய் குட்மார்னிங்" என்ற நண்பனின் உற்சாகக் குரல் கேட்கும்போது மழையில் நனைந்த ரோஜாவாய் மனது சிலிர்த்துக் கொள்கிறது. அதுவே எஸ்.எம்.எஸ்.சில் வந்து சேர்கிறபோது சடங்காய், சம்பிரதாயமாய் மாறிவிடுகிறது.

சிண்டை உலுக்கும் சிலபஸ், ஆளை விழுங்கும் அஸைன்மெண்ட், பதற்றமாய்ச் செய்கிற ப்ராஜக்ட், இவற்றுக்கு மத்தியில் மனித உறவுகள் சாய்ஸில் விடப்பட்ட கேள்விகளாகிவிட்டன.

நான் கூட, முன்னர் ஒரு கவிதையில் குறிப்பிட்டிருந்தேன்.

"தொலை தூரம் வரை தொடர்புகள் உண்டு
தொடும் தூரத்தில் உறவுகள் இல்லை"

என்று.

அறிவு வட்டம் விரிவது அவசியம்தான். அதற்காக உறவு வட்டம் சுருங்க வேண்டுமா என்ன? கனமாய்க் கனக்கிற கடமைகளுக்கு மத்தியில் ஆசுவாசம் கொள்ளவாவது அன்பான உறவுகள் தேவை. நெருக்கமான நண்பர்கள் தேவை.

பள்ளிப் பருவத்தில் இருக்கும் அளவு, கல்லூரிப் பருவத்தின் நட்பு நெருக்கமாக இல்லை என்பது கால காலமாகவே இருக்கிற பாலபாடம். இன்று உறவுகளிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் விலகி நிற்கிற பல இளைஞர்கள் 'டவர்' கிடைக்காத செல்விடப்

மரபின்மைந்தன்
முத்தையா



வானவில் வயசு 3



படம் : ஸ்ரீஹரி

பேசி போல் தொடர்பு எல்லைக்கு வெளியிலேயே இருக்கிறார்கள்.

தகவல் தொடர்பியல் படிக்கிறோம். கணினி அறிவியல் கற்கிறோம். தொழில் நுட்பத்தின் புதிய புதிய அம்சங்களில் எல்லாம் புகுந்து புறப்படுகிறோம். இந்தத் தொழில் நுட்பங்கள், புதிய கண்டு பிடிப்புகள், எல்லாம் எதற்காக?

வாழ்க்கையை இன்னும் எளிமை செய்வதற்காக. வாழ்க்கையை இன்னும் இனிமை செய்வதற்காக. அந்த எளிமையும் இனிமையும், கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளிலிருந்து வருவதில்லை. கண்டு பிடித்த மனங்களின் கனிவிலிருந்தே வருகின்றன.

புத்தம் புதிய வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் வாழ்க்கை, மனிதர்களால் ஆனது. உலகெங்கும் பாருங்கள். பணத்துக்கு ஒரே நிறம். குணத்துக்குத் தான் வெவ்வேறு நிறங்கள். வெவ்வேறு ரகங்கள். ஏழு சுரம்கொண்ட சங்கீதமாய் ஏழு நிறம் கொண்ட வானவில்லாய் வாழ்க்கை மலர்வது மனிதர்களால்தான்.

மற்றவர்களைக் காட்டிலும் முன்னேற விரும்புவது, கல்வியின் முதல் அம்சம். முன்னேறி வந்து மற்றவர்களையும் முன்னேற்ற விரும்புவது கல்வியின் முக்கிய அம்சம்.

"எதிர்காலம் எப்படி இருக்கும் என்று தெரியாதபோது இந்த சமூகப் பார்வை சாத்தியமா?" என்று சில இளைஞர்கள் கேட்கக் கூடும்.

**நா**ன்கு இளைஞர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் மனத்திலும் வாழ்க்கை குறித்த அச்சம். கண்களில் கலக்கம். நடையில் நடுக்கம். எதிரே ஒரு மனிதர், கையில் கத்தியலையும் உளியையும் வைத்துக் கொண்டு காற்றை அளந்து கொண்டிருந்தார்.

வெட்டவெளியில் சுத்தியல் கொண்டு தட்டிக் கொண்டிருந்தார். இந்த இளைஞர்கள் அருகே சென்று "அய்யா! என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

கண்களில் நம்பிக்கை கனல்



வீச, அவர் சொன்னார், "என் எதிர்காலத்தைச் செதுக்கிக் கொண்டிருக்கிறேன்" என்று. இப்படித்தான் என்று வரையறை செய்யும் விதமாக எதிர்காலம் எல்லோருக்கும் இருந்து விடாது.

கண்ணுக்குத் தெரியாத வாய்ப்புகளைக் கைப்பற்றுவதும், கைப்பற்றிய வாய்ப்புகளைத் தாம் விரும்பும் விதமாகச் செதுக்கிக் கொள்வதும்தான் வெளிச்சமான எதிர்காலத்துக்கு வழி. அதற்கான உற்சாகத்தையும் உந்து சக்தியையும் நமக்கு உறவுகளே தரும்.

முன்பெல்லாம், தலைமுறை இடைவெளி ஏற்படுவதற்கு முப்பது வருட வயது வித்தியாசம் வேண்டியிருந்தது. இப்போதெல்லாம் மூன்று நான்கு வயது மூத்தவர்களாக இருந்தாலே அவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நடுவே தலைமுறை இடைவெளி தலைதூக்கி விடுகிறது. தம்பிக்குத் தெரிந்த விவரங்கள் அண்ணனுக்குத் தெரிவதில்லை. தம்பி, அண்ணனின் உலகம் அப்பா அம்மாவுக்குப் புரிவதில்லை. குறிப்பாக கிராமப்புறங்களில் இந்த இடைவெளி அதிகம்.

''வேறு ஒன்றும் இல்லை. மன்னர் அரசவையை உள்வாடகைக்கு விட்டுவிட்டார்...!''

- இடைப்பாடி
ஜெ. மாணிக்கவாசகம்

சில வருடங்களுக்கு முன்பு, +2 படிக்கும்போது கால்குலேட்டர் கேட்ட அண்ணனை விசாரணைக் கமிஷன் போட்டு வறுத்தெடுத்த அப்பா, கம்ப்யூட்டர் கேட்கும் தம்பியிடம் மறு பேச்சுப் பேசாமல் முப்பதாயிரத்தை எடுத்து நீட்டுகிறார்.

"நாங்கள் புதிய அறிவுலகத்தின் பிரதிநிதிகள்" என்கிற பிரகடனம் இன்று நிறைய இளைஞர்களின் நெற்றியில் எழுதி ஒட்டப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்து சிலநேரங்களில் அவர்களின் குடும்பமே கூட மிரண்டு பின் வாங்குகிறது. இந்த மிரட்சி, சில இளைஞர்களுக்கு சாதகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது.

கம்ப்யூட்டர் தெரியாத அம்மா, அப்பா, கற்கால மனிதர்களாய்த் தோற்றமளிக்கிறார்கள். சாஃப்ட்வேர் தெரியாத மாமா, சாம்பார்சாதம் சாப்பிடத்தான் லாயக்கு என்கிற இளக்காரம் பிறக்கிறது. கூடப் படிக்கிற நண்பன் குறைந்த மதிப்பெண் வாங்கினால் அவனிடமிருந்து விலகி நிற்கத் தோன்றுகிறது. இப்படி வளர்கிற இளைஞர்கள் தனித் தனித் தீவுகளாகத்தான் தெரிவார்கள். உறவு நீரோட்டத்தில் இருந்து விலகி நிற்பது வளர்ச்சியல்ல; வறட்சி.

அசுரகதியில் முன்னேறுகிற அயல் நாடுகள் கூட ஒவ்வொரு உறவுக்கும் 'ஒரு தினம்' என்று அறிவித்துக் கொண்டாடி விடுகின்றன. தினம் நிர்ணயித்துக் கொண்டாடுவதற்கல்ல உறவுகள்; தினம் தினம் கொண்டாடத்தான் உறவுகள்.

(தொடரும்)

# தெய்வ நினைவோடு...

**ம**னோ, வாக், காயம் என்கிறபடி மனஸால் பகவத் ஸ்மரணம், வாக்கினால் மந்திரம், காயத்தால் காரியம் மூன்றையும் சேர்த்துத்தான் ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மந்திரம் அல்லது பகவத் நாமம் இல்லாமல் காரியத்தைப் பண்ணுவதில் பிரயோஜனம் இல்லை. மநுஷ்யன் செய்கிற காரியத்தில் அநேகம் எல்லா ஜீவஜந்துக்களுந்தான் செய்கின்றன. ஒரு கிருமியிலிருந்து ஆரம்பித்து எந்த ஜீவ ராசியும் சாப்பிடத்தான் செய்கிறது. அப்படியே மநுஷ்யனும் செய்தால் மநுஷ்ய ஜன்மா எடுத்து என்ன பிரயோஜனம்? அதனால்தான் இவன் பிராணாஹுதி செய்து, கோவிந்த நாமாவைச் சொன்னபடிச் சாப்பிட வேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. மீன் கூடத்தான் ஸதாவும் ஜலத்திலேயே முழுகியிருக்கிறது. அதனால் அது ஸ்நானம் பண்ணி மடியாயிருக்கிறதாகி விடுமா? மந்திரவத்தாகக் குளித்தால்தான் அது ஸ்நானமாகும். அல்லது கோவிந்தா, கோவிந்தா என்றோ, இஷ்ட தெய்வத்தின் நாமத்தைச் சொல்லிக் கொண்டோ ஸநானம் செய்ய வேண்டும். இப்படி எல்லாமே காரியமாக மட்டுமில்லாமல் மனஸும் வாக்கும் ஈச்வரனிடம் செலுத்தப்பட்டுச் செய்யப்படுவதுதான் ஆசாரம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



அருள்வாக்கு





## அமர்சிங்கிடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகள் :

1. ஏங்க, உங்க போனை ஒட்டுக் கேட்க எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு; 'லௌட் ஸ்பீக்கர்'ல பேசினா என்ன?

2.உங்க தோஸ்த் அமிதாப் பச்சன் நடத்துற நிகழ்ச்சியில 'போன் அ ப்ரெண்ட்'-ஆ யாராவது கூப்பிட்டா லைன்ல வருவீங்களா?

3. போனை ஒட்டுக் கேட்கும் பிரச்னைக்கெல்லாம் சோனியாதான் காரணம்னு யாரோட போனை ஒட்டுக் கேட்டு கண்டுபிடிச்சீங்க?

4. சந்திரபாபு நாயுடு, ஜெ - இப்படி நிறைய பேரைச் சந்திச்சு, நான் சொல்லுற மாதிரியே திருப்பிச் சொல்லுங்கன்னுதானே கேட்டீங்க? அதை போன்லயே கேட்டிருக்கலாம்ல?

5. எத்தனையோ பேரை விலை கொடுத்து வாங்குன நீங்க, உங்க தம்பியை காங்கிரஸ் வாங்குனப்போ எப்படி ஃபீல் பண்ணுனீங்க?

6. ரிலையன்ஸ் போன் மூலமாத்தான் உங்க போனை ஒட்டுக் கேட்டாங்களாமே. அதுக்காக அம்பானி பிரதர்ஸ்கிட்ட 'கா' போட்டீங்களா?

7. இந்த சன் மியூசிக்லதான் எப்பப் பார்த்தாலும் யார் கூட பேசுறோம்னு கூட தெரியாம போன்ல பேசிக்கிட்டே இருக்காங்க. கலாநிதிகிட்ட சொல்லி விசாரிக்கச் சொல்லலாம்ல?

8. இப்பல்லாம் நீங்க போனை ஸ்விச் ஆஃப் செஞ்சுட்டு, போஸ்ட் கார்டைத் தான் உபயோகிக்கிறீங்களாமே?

9. சோனியாவைச் சண்டைக்கு இழுத்த மாதிரி, ராகுலைச் சண்டைக்கு இழுக்க 'ராகுல் எனக்கு வர்ற எஸ்.எம்.எஸ்ஸை எட்டிப் பார்க்குறாரு'ன்னு ஏதாவது கிளப்பிவிட வேண்டியதுதானே?

10. 'முலாயமை நான் முதல்வராக்கியது எப்படி'ன்னு உங்க செப்படி வித்தையை எல்லாம் அப்படி இப்படி எழுதி விட்டீங்கன்னா புக் செம சேல்ஸ் ஆகும்ல?

—பரமு

# போட்டுத் தாக்கு!

# நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்



**22.1.2006 முதல்**
**28.1.2006 வரை**



**மேஷம்:** குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். திருமண காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வீடு/வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். சிலருக்கு வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்பு வந்து சேரும். குழந்தைப்பேறு ஏற்படும். உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும். புதிய வேலை கிடைக்கும். வியாபாரிகள் தொழிலில் மேன்மையான பலனை அடைவார்கள்.

**ரிஷபம்:** நெருங்கிய உறவினர்கள்/நண்பர்கள் விலகிச் செல்வார்கள். வேலையில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிதேசம் செல்லும் வாய்ப்பு ஏற்படும். எதிர்ப்பு இருக்கும். உடல்நிலையில் போதிய முன்னேற்றம் தெரியும். கணவன்/மனைவி விட்டுக் கொடுத்துப் போகவும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் நிதானமாக நடந்து கொள்ளவும். குரு, சனி, ராகு, கேதுவை வழிபட்டு வரவும்.

**மிதுனம்:** சுபகாரியம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் உண்டு. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். உத்தியோக வேலை வாய்ப்பு வரும். மாணவ/மாணவியர் படிப்பில் மேன்மை பெறுவார்கள். வியாபாரிகள் நல்ல வளர்ச்சி பெறுவார்கள். மனத்தில் நினைத்த காரியம் ஈடேறும். உடல்நிலை பாதிக்காது. சிலருக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும். ராகு/கேது வழிபட்டு வரவும்.

**கடகம்:** வீடு, வாகனம் வாங்க நல்ல நேரம். உத்தியோகத்தில் உயர்வு, இடமாற்றம் ஏற்படும். புதிய முதலீடுகள் செய்யலாம். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சத்ரு தொல்லை விலகும். கணவன்/ மனைவி உறவு நன்றாக இருக்கும். குடும்பத்தில் மங்களகரமான காரியம் நடக்கும். சுபப்பேச்சு வார்த்தைகள் நன்மை அளிக்கும். வேலையில் நல்ல பெயர் ஏற்படும். நண்

பாக்யஜி

**என் கணவருக்கும் எனக்கும் நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்குமா? கணவருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்க வாய்ப்புள்ளதா?**

**- ஆர். மகாலட்சுமி, சென்னை - 33.**

உங்கள் கணவருக்கு ராகுதசை நடைபெற்று வருவதால் வெளிநாட்டில் சென்று பணியாற்றுவதற்கு நல்ல நேரம்தான். முயற்சி செய்யவும். 2006-ல் நல்ல வேலை கிடைக்கும். தங்களுக்கு நேரம், காலம் நன்றாக உள்ளது. 2006-ல் வேலை கிடைத்துவிடும்.

**என் பையனுக்கு எப்பொழுது திருமணம் நடக்கும்?**

**- பார்வதி, பெங்களூர்.**

உங்களுடைய பையனுக்கு சர்ப்பதோஷம் உள்ளது. சர்ப்பதோஷம் உள்ள பெண்ணைப் பார்க்கவும். உடன் திருமணம் முடியும். படித்த பண்புள்ள பெண் அமைவாள்.

**எனது மகனின் எதிர்காலம் பற்றிக் கூறவும்...**

**- எஸ். ராமச்சந்திரன், மும்பை.**

உங்கள் மகனுக்கு சொந்தத் தொழில் பார்க்கும் யோகம்

பர், உறவினர்களால் ஆதாயம் இருக்கும். குரு/சனி வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:** எதிலும் தாமதித்து பிறகு வெற்றி கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். தன வரவு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்ப வழியில் விட்டுக் கொடுத்துப் போகவும். யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். கைப் பொருள் மீது கவனம் அவசியம். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம். வியாபாரிகளுக்குத் தொழிலில் வளர்ச்சி ஏற்படும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். குரு/சனி/ராகு/கேது வழிபட்டு வருதல் பலன் தரும்.

**கன்னி:** மன உளைச்சல் மாறும். குழந்தைகள் வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். தனவிருத்தி ஏற்படும். வாக்கு மேன்மை ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். வியாபாரிகளுக்கு மேன்மையான பலனை அளிக்கும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை உடன் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்க நல்ல நேரம். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. ராகு/கேது வழிபட்டு வருதல் நலம்.

**துலாம்:** பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. குடும்பப் பெண்களுக்கு நல்ல பெயர் கிட்டும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். சுபகாரியம் கைகூடும். சிலர் வீடு/வாசல்/ இடம் மாறுவார்கள். வியாபாரிகள் தொழில் வளர்ச்சி அடைவார்கள். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். சத்ருதொல்லை விலகும். ஆடை, ஆபரணப் பொருள்கள் வாங்குவீர்கள். குரு/சனி வழிபாடு செய்து வருவது நற்பலனை அளிக்கும்.

**விருச்சிகம்:** குழந்தைகள் பற்றிய கவலை தீரும். சுபகாரியம் கைகூடும். நெருங்கிய உறவினர்/நண்பர்கள் விலகிச் செல்வார்கள். செலவுகள் நியாயமானதாக இருக்கும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். உடல்நிலை பாதிக்காது. ஆடை அலங்காரப் பொருள்கள் வாங்குவார்கள். பத்திரிகைகளில் பெயர் வரும். வெளிநாட்டு மனிதர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். வீடு வாங்க நல்ல நேரம். ராகு/கேது/குரு/வழிபாடு செய்து வரவும்.

இல்லை. வேலைக்குப் போவது நல்லது. ஆபத்துக் காலத்தில் உதவுவதற்கு ஆள் இருந்துகொண்டிருப்பதால் கவலை இல்லை. தூரதேசம் போய் சம்பாதிக்கும் அமைப்பும் உள்ளது. கடன் தொல்லை படிப்படியாகக் குறையும். சனி தசை, புதன் புத்தி நடக்கிறது. விடிவு காலம் பிறக்கும்.

**எ**னது மகளுக்குத் திருமணம் எப்போது நடக்கும்?

- ஆர். விஜயராகவன், பெங்களூர்

உங்கள் மகளுக்கு உடன்பிறந்த இருவர் உள்ள இடத்தில் படித்த, பண்புள்ள, உறவில்லாத வரன் அமையும். 2006-ல் திருமணம் நடக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும்.

**எ**னது மகன் வெளிநாட்டில் வேலையிலிருக்கிறான். அவனுக்கு அங்கே வேறு வேலை கிடைக்குமா? திருமணம் எப்போது?

- என். சுப்ரமணியன், பெங்களூர் - 92

உங்கள் பையனுக்கு வெளிநாட்டில் நிரந்தர, நல்ல வேலை கிடைக்கும். பெற்றோரை விட்டு தூரதேசம் போய் வாழ்கிற ஜாதகம். 2006-ல் படித்த, பண்புள்ள பெண் அமைந்து திருமணம் முடியும்.

**பதில்கள்**

**தனுசு:** சுபகாரியம் கைகூடும். எதிர்பாராத பண வரவுகள் ஏற்படும். உடல்நிலை பாதிப்பு இருக்கும். வாக்கு வன்மை மேலோங்கும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். மாணவ/மாணவியர் படிப்பில் முன்னேற்றம் அடைவார்கள். வியாபாரிகள் நற்பயனை அடைவார்கள். நாணயம் காப்பாற்றப்படும். சத்ரு தொல்லை விலகும். கணவன்/மனைவி உறவு நன்றாக இருக்கும். சனிக்கிழமை தோறும் சனீஸ்வரனுக்கு விளக்கு ஏற்றி 9 முறை சுற்றி வரவும். ராகு/கேது வழிபட்டு வருதல் நலம்.

**மகரம்:** பொருளாதாரக் கஷ்டம் விலகும். சிலருக்கு உத்தியோக இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வெளியூர் பிரயாணம் ஏற்படும். மனைவி மூலம் ஆதாயம் கிட்டும். வீடு வாங்க நல்ல காலம். புதிய தொழிலில் ஈடுபடலாம். செலவுகள் சுபமானதாக இருக்கும். வியாபாரிகள் நன்கு முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு ஏற்றம் ஏற்படும். சனி/குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

**கும்பம்:** பகைமை விலகி எதிரிகள் நண்பர்களாக மாறும் வாரம். சுபச் செலவு ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையுடன் செயல்படவும். திருமண காரியம் கைகூடும். வீடு வாங்க நல்ல நேரம். வியாபாரிகளுக்குத் தொழில் துறையில் நற்பலன் கிடைக்கும். வாக்குவாதம் தவிர்க்கவும். ராகு/கேது வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும்.

**மீனம்:** எதிலும் வெற்றிக் கொடி நாட்டுவார்கள். கணவன்/மனைவி உறவு நன்றாக இருக்கும். புதிய முயற்சி கைகூடும். வியாபாரிகளுக்கு நற்பலனை அளிக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வெளிநாட்டுப் பயணம் கிட்டும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். நல்ல திருப்பங்கள் ஏற்படும். குழந்தைகளுக்கு சந்தோஷம் கிட்டும். புதிய வீடு வாங்க நல்ல காலம். உடல் நிலை பாதிக்காது. பகை விலகும். பணக்கஷ்டம் இருக்காது. ராகு/கேது/குரு வழிபட்டு வரவும். ○

"மே ஐ கம் இன் ஸர்" என்றபடி கதவைத் திறந்து புன்னகை செய்த முகத்தைப் பார்க்கிறேன்.

விஷ்வா!

"ஹை... கம் இன்..." என்கிறேன் மலர்ச்சியுடன். விஷ்வா என்று இன்று எல்லோராலும் நாகரிகமாக அழைக்கப்படும் விஸ்வநாதன் என் முன்னாள் மாணவன். பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் இன்னும் அவ்வளவாக மக்கள் மத்தியில் பிரபலமாகாத 'லெதர் டெக்னாலஜி' படித்தவன்.

தினம் தினம் பார்ப்பதாலும், பெரும்பாலும் பரிசோதனை சாலைகளிலேயே மாணவர்களின் நேரம் கழிந்ததாலும், எல்லோரையுமே எனக்கு நன்றாகப் பழக்கமாகி விடும்.

ஒரு சில மாணவர்கள் நெருங்கி வருவார்கள்; சிலர் விலகியிருப்பார்கள்; சிலர் பிடிவாதமாக விலகியிருப்பார்கள்; சிலர் மிக அதிகமாக உறவு கொள்வார்கள். விஸ்வநாதன் சற்றுத் தயக்கத்துக்குப் பின்னர் நெருங்கி வந்தவன். எனக்கு அவன் மீது அதிகமாகப் பரிவு ஏற்படக் காரணங்கள் இருந்தன.

திண்டிவனத்துக்கு அருகேயிருந்த ஒரு சிறிய கிராமத்து விவசாயியின் மகன் அவன். படித்ததெல்லாம் தமிழ் மீடியத்தில். ஆங்கிலம் சரியாகப் பழக்கம் ஆகவில்லை. படிப்பிலும் ரொம்பக் கெட்டிக்காரன் என்று சொல்ல முடியாது. அந்தக் கிராமத்துக்கு அருகிலிருந்த பள்ளியில் இலுப்பைப் பூ சர்க்கரையாக முதல் மாணவனாகத் தேறி வந்திருந்தானே தவிர, மற்ற மிக புத்திசாலி மாணவர்களுக்கு முன்னால் அவன் நடுத்தரத்தில்தான் இருந்தான். ஆனால், நல்ல உழைப்பாளி. முன்னேற வேண்டுமென்ற ஆசை ஏராளமாகவேயிருந்தது. படிக்கும் நாளில் அவனிடமிருந்த ஒரே ஒரு ஆடம்பரம், ஒரு பழைய சைக்கிள்தான். பாங்கில் லோன் எடுத்துப் படித்துக்கொண்டிருந்தான்.


ஆனால் படிப்பு முடிந்ததும் அவனுக்கு வட இந்தியாவில் இந்தூரில் ஒரு நல்ல கம்பெனியில் வேலை கிடைத்தது. அவன் பெற்றோருக்கு அவன் ஒரே மகனாக இருந்ததால் அவ்வளவு தூரம் அனுப்ப வேண்டுமா என்று யோசித்தனர்.

"ஏன் சார்... அவ்வளவு தூரம் போகத்தான் வேணுமா... இந்த ஊர்லேயே ஏதாவது ஒரு வேலை பார்க்கக்கூடாதா?" என்றார் விஷ்வாவின் அப்பா.

"நீங்க கவலைப்படாதீங்க ஐயா... உங்க மகன் வாழ்க்கையில் உயரணும்னு உங்களுக்கு ஆசை இருக்கில்ல...?" என்றேன்.

"கட்டாயமாக..."

"அப்படின்னா அவன் அங்குதான் போகணும்... அவன் அங்கே போய் ஒரு இரண்டு வருஷம் வேலை கத்துக்கட்டும்... அப்புறமா இங்கு வரட்டும்... அதான்



**தேவவிரதன்**

# கண்ணாடி

அவனுக்கு நல்லது...'' என்றேன்.

''உங்க பேச்சுக்காக பையனை அனுப்புகிறோம் ஸார்'' என்று அவன் தாயும் தந்தையும் அன்று கண்ணீர் விட்டனர்.

என் வார்த்தை பொய்க்கவில்லை; விஸ்வநாதனும் ஏமாற்றவில்லை.

அதன் பின்னர் அவனுக்கு வந்தது யாவுமே ஏற்றம்தான்.

**நா**ன்காண்டுகளுக்குப் பின்னர் சென்னைக்கு அவன் வந்தபோது நான் இடம் மாறியிருந்தேன்.

ஆபீஸில் என் அறைக்கு வந்தவன் என்னை



வெளியே வரச் சொன்னான்.

"என்ன விஷ்வா... எதற்காக என்னைக் கூப்பிடுகிறாய்...?" என்றேன்.

"வாங்களேன்..." என்று கையைப் பிடித்து வெளியே அழைத்துச் சென்றான்.

ஒரு புதிய மாருதி கார் என்னுடைய டிபார்ட்மெண்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்தது.

"ஆபீஸ்ல எனக்குக் கொடுத்திருக்காங்க ஸார்..."

என் கண்கள், வியப்பிலும் சந்தோஷத்திலும் மலர்ந்தன.

"வாங்க ஸார்... உங்களை ஏற்றிக் கொண்டு ஒரு ரவுண்ட் போகிறேன்..." என்றான்.

என்னைப் பக்கத்தில் உட்கார வைத்து அழகாக எங்களுடைய மிகப் பெரிய காம்பஸில் ஒரு சுற்று வந்தான்.

"ஸார்... உங்களுக்குத் தெரியும். ஒரு ஓட்டை சைக்கிள்தான் என்னிடம் இருந்த சொத்து என்று. இன்னிக்குப் பாருங்க ஸார்... கார்... நானே ஓட்டுகிறேன்..." என்றான் உணர்ச்சியுடன்.

"ரொம்ப மகிழ்ச்சி விஷ்வா... உன்னைப் போன்றவர்களைப் பார்க்கும் போதுதான் உழைப்பும், விடா முயற்சியும் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்று புரிகிறது" என்றேன்.

விஷ்வாவின் கல்யாணம் நிச்சயமானதும் ஒரு நல்ல வசதியான இடத்தில்தான். அவன் பெற்றோருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. ஆனால் அவன் தந்தை மட்டும் பழைய நாட்களை மறக்காமல், 'ஸார்... அன்னிக்கு நீங்க சொல்லி அவனை வேலைக்கு அனுப்பிச்சது நல்லதா போச்சு...' என்றார் நெகிழ்ச்சியுடன்.

அதற்குப் பின்னர் நான் விஷ்வாவை அதிகம் பார்க்கவில்லை. அவனும் வேலை நிமித்தம் பல வெளிநாடுகளுக்குச் சென்ற வண்ணமிருந்தான்.

ஏதோவொரு கல்யாணத்தில் சந்தித்த போது குழந்தை பிறந்த செய்தி தெரிந்தது. மற்றொரு அலுவலக விழாவில் பார்த்த போது வீடு கட்டி விட்டான் என்று தெரிந்துகொண்டேன்.

அவன் அப்பா - அம்மாவைப் பற்றி மறக்காமல் விசாரிப்பேன்.

"உங்களைப் பார்க்கணும்னுதான் அப்பா - அம்மா ரெண்டு பேரும் சொல்வாங்க... உங்களை ஒருநாள் வந்து நானே அழைத்துப் போகிறேன்" என்றான் ஒரு முறை.

ஆனால் வரத்தான் இல்லை. மறுபடியும் வேறொரு பொதுவிழாவில்தான் சந்தித்தோம்.


அந்த விஷ்வாதான் இன்று உள்ளே வந்திருக்கிறான்.

"தூக்க மாத்திரையை ஏழு மணிக்கே கொடுத்துட்டுப் போயிடுங்க சிஸ்டர்..."

"ஏன்?"

"அப்புறம் உங்களை எழுப்ப முடியாது..."

- பம்மல் நாகராஜன்



கடைசி முறை பார்த்ததற்கு இப்போது சற்று பூசினாற்போல் இருந்தான். முகத்தில் நல்ல களை வந்திருந்தது.

"உட்கார் விஷ்வா... எப்படி இருக்கிறாய்?"

"நல்லாயிருக்கேன் ஸார்... நீங்க எப்படியிருக்கீங்க...?"

பரஸ்பர குசல விசாரிப்பு

களுக்குப் பின்னர் கேட்கிறேன்.

"என்ன திடீர்னு 'இன்ஸ்டிடியூட்' பக்கம்...?"

"ஆபீஸ் வேலைதான்... ஒரு டெஸ்ட் ரிஸல்ட் வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஒரு மணி நேரம் ஆகும் என்றார்கள். உங்களைப் பார்த்தும் நாளாகிறதே... பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்..." என்கிறான்.

'லதா வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாளா?' 'ரேவதி இப்போது எங்கே இருக்கிறாள்? அவன் நண்பன் மூர்த்தி இப்போது எப்படியிருக்கிறான்? அவன் இரண்டு பிள்ளைகளும் நன்றாக இருக்கிறார்களா? அப்பா, அம்மா எப்படியிருக்கிறார்கள்?' என்ற வழக்கமான கேள்விகளுக்கெல்லாம் புன்னகையுடன், 'எல்லோரும் நல்ல சுகமாக இருக்காங்க!' என்று பதிலுரைக்கிறான்.

"உங்க அப்பாவையும், அம்மாவையும்தான் பார்த்து நாளாகிறது...!" என்கிறேன்.

"வாஸ்தவம்தான் ஸார்... நான் நாளைக்கு மறுநாள் இந்தோர் போகிறேன். அடுத்தவாரம் ஹாங்காங்... அப்புறம் நாலு நாளில் வந்து விடுவேன்... வந்தவுடன் நானே வந்து உங்களைக் கூட்டிப்போகிறேன்..." என்று பொறுப்புடன் சொல்லும் விஷ்வா, கடிகாரம் பார்க்கும் முன்பே செல்போன் சிணுங்குகிறது.

"ம்...ம்... இதோ ரிப்போர்ட்டோட வந்துண்டே இருக்கேன்..." என்று போனில் கூறியவன், "ஆபீஸ்தான்... வரட்டுமா ஸார்... பார்க்கணும்..." என்று கிளம்பிப் போகிறான்.

**வி**ஷ்வாவைப் பார்த்துப் பேசியதில் மனசுக்கு ரொம்ப திருப்தியாக இருக்கிறது. நம்மிடம் படித்த குழந்தைகள் இன்று நல்ல நிலையில் இருந்துகொண்டு நம்மை நினைவும் வைத்திருந்து வந்து பேசிச் செல்வது இன்னும் சந்தோஷம்தான்.

விஷ்வா சொன்னதுபோல் பத்து நாள் கழித்து வந்து என்னை அவன் வீட்டுக்குக் கூட்டிப் போக மாட்டான். முதல்தடவைதான் அவன் அப்படிச் சொல்லி வராமல் இருந்தபோது சற்று ஏமாற்றமாக இருந்தது.


இது எத்தனையாவது முறை என்று நினைவில்லை. ஆனால் எனக்கு எதிர்காலத்தை நினைத்து வருத்தமாக இல்லை; நிகழ்காலத்தை எண்ணி சந்தோஷமாக இருக்கிறது.

இந்த விஷயத்தில் நான் விஷ்வாவைக் குறை சொல்ல முடியாது. இந்த முழுக் கதையையும் 'விஷ்வா' என்ற பெயருக்குப் பதிலாக 'கிருஷ்ணா' என்று மாற்றிப் போட்டுப் படித்துப் பாருங்கள்.

அவன் போய்ப் பார்த்த நபர் ராமலிங்கம் என்று ரிடையர் ஆகி பள்ளிக் கரணைக்கு அருகே இருப்பவர்.

அந்தக் கிருஷ்ணா, யார் என்றுதானே கேட்கிறீர்கள்?

அது நான்தான்! ○



"நம்ம தலைவர் யார்கிட்டயும் வாயைத் திறந்து உதவி செய்யச் சொல்லி கேக்க மாட்டார்..."

"பின்னே?"

"கை ஏந்திதான்..."

- கே. ஆனந்தன்

# 3



## சினிமாவுக்குப் போகலாம் வாங்க!

தென்னிந்தியாவின் முதல் திரையரங்குக் கட்டடம் இன்றும் சென்னையில் இருக்கிறது. அண்ணாசாலை அஞ்சல் நிலையத்திற்கும் தூன் பில்டிங்கிற்கும் இடையே இருக்கும் பழைய கட்டடம் தான் அது.

- 'எம் தமிழர் செய்த படம்'
- *தியோடர் பாஸ்கரன்.*

கிராமத்து சினிமா தியேட்டர்கள், பெரும்பாலும் ஊருக்கு வெளியேதான் அமைதியாகக் கொலு வீற்றிருக்கும். ஆற்றங்கரை, வயல்வெளி, தென்னந் தோப்புகளுக்கு அருகில் அமைந்திருக்கும்.

மாட்டு வண்டிகளில் குழாய் ரேடியோ கட்டி, ஊர் முழுக்க பகல் நேரத்தில் சினிமா நோட்டீஸ் குடுப்பார்கள். அந்தச் சினிமா நோட்டீஸ் படிக்க மிகச் சுவையாக இருக்கும்.

இரண்டு வாரங்கள் ஓடும் வெற்றிப்படமாக இருந்தால் (அனேகமாக எம்.ஜி.ஆர் படமாகத்தான் இருக்கும்) பேண்டு வாத்தியம் வைத்து ஊர்ச் சுற்றி, கரகாட்டம் வைத்து ஆடி வருவார்கள். நாங்களும் அந்தக் கூட்டத்தோடு ஊரெல்லாம் சுற்றி விட்டு வீட்டில் வந்து அடி வாங்குவோம்.

மாலை 6.30 மணிக் காட்சிக்கு நாங்கள் ஒரு மணி முன்னதாகவே சென்று விட்டோம்.

ஆண் டிக்கட்

தரை - 25 பைசா


பெஞ்ச் - 50 பைசா

சேர் - 70 பைசா

பெண்கள் தரை 20 பைசா

சுவரில் எலிப் பொந்து மாதிரி ஒரு ஓட்டை. அது தான் டிக்கெட் கொடுக்குமிடம்.

தியேட்டருக்கு வெளியே பெண்கள் கூட்டம். அதில் படம் பார்த்த சில கிழவிகள் விலாவாரியாகக் கதை




சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

'இந்தப் பய வேற எடத்தில வளர்றான்மா, ஆனா அவுக அப்பனுக்கு இவன்தான் நம்ப மகன்னு தெரியாம அவன் முகத்தில திராவகத்தை ஊத்திடறான் பாரு அப்ப...' கூட்டமே வாய் திறந்து கேட்டுக் கொண்டிருக்க...

'விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்' கிராமபோன் ரிக்கார்டு போட்டு, ஊரே கேட்க ஒலிபெருக்கியில் சீர்காழி கோவிந்த ராஜன் பாட்டு ஆரம்பமானது.

'முதல் பாட்டு போட்டுட்டான்' கூட்டம் எழுந்து நின்று தயாரானது.

'மூணாவது பாட்டுக்கு டிக்கெட் கொடுப்பான்' - சந்தோஷமாகச் சொல் லும் ஒரு பெருசு!

'ஆறாவது பாட்டுக்குப் படம் போட்டுருவான்' - யாரோ சொல்லி முடிப்பதற்குள்... டிக்கெட் குடுக்கத் தொடங்க அனைவரும் எலிப் பொந்தில் கைவிட கூட்டம் சுறுசுறுப்பானது.

# எலிப்பொந்து வீரன்!

கு.ஞானசம்பந்தன்



பெண்கள் பகுதியில் டிக்கெட் கொடுப்பவரும், அதைக் கிழிப்பவரும் நெஞ்சுறுதி கொண்ட வீரனாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு தான்.

எட்டு வயதுப் பையனை இடுப்பில் தூக்கியபடி சில பெண்கள் வீரமாக உள்ளே நுழைவார்கள்.

"பையனுக்கு டிக்கெட் வாங்கலையா?"


"யாருக்கு இவனுக்கா? இந்தப் பச்ச மண்ணுக்கா? ஏண்டா உனக்குக் கண்ணு கிடையாதா? நீ வெளங்குவியா? உன் முதலாளி உருப்புடுவானா?" இதனைத் தொடர்ந்து வரும் வசவுகளால் அதிர்ந்து போகும் டிக்கெட் கிழிப்பாளி பிறகு வாயே திறக்க மாட்டார்.

பெண்கள் பகுதியில் தரையெல்லாம் ஆற்று மணல்தான் பரப்பப்பட்டு இருக்கும்.

திரைக்கு மிக அருகில், சில சமயம் மல்லாக்கப் படுத்தபடி படம் பார்த்தால்தான் கிராமத்து மக்களுக்குத் திருப்தி ஏற்படும்.

திரையின் இரண்டு புறமும் லட்சுமி, சரஸ்வதி, தெய்வச் சிலைகள். அம்மன் சிலைகளுக்கு மேல் ஜீரோவாட் பல்புகள்.

உள்ளே நுழைந்தவுடன் வேண்டிய அளவு மணலை மேடுகள் குவித்து அதன் மீது



"நம்ம கட்சி ஆபீஸ்ல எதுக்கு சின்னச் சின்னதா ரூம்ஸ் கட்றாங்க?"

"கோஷ்டித் தலைவர்கள் உட்கார தனித்தனியா ரூம் கேட்கிறாங்களாம்..."

- பம்மல் நாகராஜன்

ஆளாளுக்கு அமர்ந்து, உடனே வெற்றிலை போட்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, தென்மேற்கு என்று அத்தனைப் பக்கங்களிலும் துப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் பகுதியில் உயிரை வெறுத்துப் பலர் ஓடிவந்து மணலில் விழுந்தார்கள். இலேசான அடிதடிகள்.

முதல் மணி அடித்து சில விளக்குகள் அணைய இலேசாக இருள்சூழ, எங்கும் அமைதியும் சமாதானமும் உண்டாயிற்று. வெள்ளித்திரை ஒளியோடு உயிர்பெற்றது.

'புத்தா பிக்சர்ஸ்' 'பாவமன்னிப்பு' என்ற எழுத்துகள் திரையில் மின்னத் தொடங்கியதும், எங்கும் ஓரே கைதட்டு, ஆரவாரம், விசில்.

'நடிகர் திலகம்' சிவாஜிகணேசன்' நான் எழுத்துக்கூட்டி வாசித்த எழுத்துகள். திரும்பவும் கைதட்டுகள். மண் தரையில் இருந்து வெள்ளித்திரையில் நான் வியந்து பார்த்து மயங்கி நின்ற நாள் அந்த நாள்தான்.

'பாவமன்னிப்பை' நான் நினைத்துப் பார்த்தபோது என் இனிய நண்பரும், இயக்குநரும் நடிகருமான ஆர். பாண்டியராஜனின் சாதனைப் படமான 'ஆண் பாவம்' என் மனக்கண்ணில் வந்தது.

ஒருமுறை மதுரைக்கு அருகில் பொய்கைக்கரைபட்டி என்ற ஊர்த் திருவிழாவில் பட்டிமன்றம் பேசுவதற்காகப் போயிருந்தோம்.

ஒரு பெரிய மைதானம். மைதானத்தின் ஒரு ஓரத்தில் எங்களுக்கான பட்டிமன்ற மேடை. இடது பக்கம் சற்று தூரத்தில் ஒரு பெரிய சினிமாத் திரை கட்டியிருந்தார்கள். எங்கள் மேடைக்கு எதிர்ப்புறம் ஒரு சினிமாத் திரை. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூட்டம். அத்தனை பேரும் எங்கள் மேடையை நோக்கி உட்கார்ந்திருந்தார்கள்.

எனக்கும் எங்கள் குழுவினருக்கும் ஆனந்தமோ ஆனந்தம். மக்களுக்குத்தான் எத்தனை ஆர்வம் என்று நினைத்து நான் பேச்சைத் தொடங்கியதும் எதிர்த்திரை வண்ண ஓவியமாக உயிர் பெற்றது. ஆர். பாண்டியராஜனின் 'ஆண் பாவம்' என்று எழுத்துக்கள் மின்னத் தொடங்கியதும் ஐயாயிரம் சனங்களும் கவிட்ச் போட்டாற்போல எதிர்ப்புறம் திரும்பி அமர்ந்தார்கள். பிறகு நாங்கள் என்ன பேசியும் யாரும் கேட்கவில்லை. நாங்களும் மேடையை விட்டு மெதுவாக இறங்கி, கூட்டத்தோடு உட்கார்ந்து ஆண் பாவம் பார்த்துவிட்டு சந்தோஷமாக வந்தோம்.

பெண்பாவம் தான் பொல்லாததும் பாங்க - ஆண்பாவமும் அப்படித்தான் போல. அன்றைக்கு உண்மையிலேயே ஆண்பாவம் நான்தான்.


பாவமன்னிப்பு படம் பார்த்துக் கொண்டிருந்த தியேட்டர் திரையில் எழுத்துப் போட்டார்கள்.

'இடைவேளை!'

(ரீல் சுற்றும்...)

படம்: புதூர் சரவணன்

● மயிலாடுதுறை தொகுதியில், அரசியல் கதகதத்துக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து அந்தத் தொகுதி, கூட்டணிக் கட்சிகளுக்கே ஒதுக்கப்பட்டதில் உள்ளூர் உடன்பிறப்புகள் அதிருப்தியில் இருக்கிறார்கள். இதைக் களைய, இம்முறை அங்கு தி.மு.க.வே களம் காணவிருக்கிறது. கோதாவில் குதிப்பவர் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி தான்... ஏன்... கும்பகோணம் என்னாச்சாம்..? அங்கு இம்முறை கோ.சி.மணியின் வாரிசு கோ.சி. மதியழகன் போட்டியிடப் போகிறாராம்.



* வேல்முருகன்

● 'மூன்று எம்.எல்.ஏ.க்கள் திடீர் ராஜினாமா' என்கிற அதிர்ச்சி வைத்தியத்தால் ஏகத்துக்கும் கலகலத்துப் போயிருக்கிறது பா.ம.க. உள்ளதும் கொள்ளை போகாமல் இருக்க தன் கட்சி எம்.எல்.ஏ.க்களைக் கண்காணிக்கும் பொறுப்பை, காடுவெட்டி குருவுக்கும், பண்ருட்டி வேல் முருகனுக்கும் தந்துள்ளதாம் பா.ம.க. தலைமை. தற்போது இந்த இருவரும் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு அலைகிறார்கள்.

● அமைச்சர் தாமோதரனின் இல்லத்தில் எப்போதுமே கல்யாணப் பந்தி ரேஞ்சுக்கு சாப்பாடு பரிமாறப் பட்டுக் கொண்டே இருக்கிறது. தொகுதிப் பிரச்னை தொடர்பாகத் தம்மை நேரில் சந்திக்க வருபவர்களுக்கு வயிறு முட்ட சாப்பாடு போட்டே அனுப்புகிறார். ஆக, வரும் தேர்தலில் இந்த நன்றிக்காகவே வோட்டு விழலாம்.



* ஜெகத்ரட்சகன்

● ஜெகத்ரட்சகனுக்கு மருத்துவம் தவிர ஆன்மிகம் விருப்பமான துறை. அவருடைய வீட்டு வரவேற்பறையை நூற்றியெட்டு வைணவ திவ்ய தேசங்களின் புகைப் படங்கள் அழகாக அலங்கரிக்கின்றன.

● தன் கட்சி சார்பாக நடத்தப்படும் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கென்று பேச்சாளர்கள் டீம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் விஜயகாந்த். இதற்காக ஓரிரு முக்கிய தமிழ்ப் பேச்சாளர்கள், பட்டிமன்ற நாயகர்களிடம் பேசியிருக்கிறாராம் விஜயகாந்த்.

- கலை




* தாமோதரன்



* கோ.சி. மணி

# நன்றி... மீண்டும் சாப்பிடுக!



# நகரம்

நா.வே.அருள்

ஊர் ஆலமரத்தின்கீழ்
வடை விற்ற பாட்டி
இன்று நகர நடைபாதையில்
காய்கறி விற்கிறாள்

இப்போதும்
கவ்வ வருகிறது காக்கை
கையில்
லத்தியுடன்!

***

குழந்தைகள், காப்பகத்தில்
பெற்றோர்கள், முதியோர் இல்லத்தில்
பிளாஸ்டிக் வண்ணத்துப் பூச்சிகளை
சுவரில் ஒட்டிவைத்துவிட்டு
மனிதர்கள் பறக்கிறார்கள்!

கிணற்றில் விழுந்த நிலவைத்
தூக்கிவிடத் துடித்த மனசு
மின்சார ரயிலில்
பக்கத்தில் பிணம் கிடக்க
பதற்றமேயின்றி
பட்டாணி கொறித்துப்
பயணம் போகும்!

***

எங்கெங்கு காணினும்
வான்முட்டும்
வணிக வளாகங்கள்
இன்னும்
தேடிக் கொண்டேயிருக்கிறேன்
எங்கே
ஒரு
மனித வளாகம்?

கேம்பஸ் இன்டர்வியூ மூலம் அள்ளிக் கொள்கிற கல்லூரியில் படிப்பதென்றால் குஷிக்குக் கேட்கணுமா என்ன? அதிலும் கதாநாயகி வாய்ப்புக்கு கேம்பஸ் இன்டர்வியூ நடக்கும் கல்லூரி என்றால் குஷி ப்ளஸ்.

"எங்க எர்ணாகுளம் செயின்ட் தெரசாஸ் கல்லூரியில் வருஷம் தவறாமல் யூத் ஃபெஸ்டிவல் நடக்கும். அதுக்கு மலையாள பட உலகிலிருந்து நிறைய சினிமா இயக்குனர்கள், மாடல் கோ-ஆர்டினேட்டர்ஸ் வருவாங்க. அதிர்ஷ்ட தேவதைகளை அங்கேயே கதாநாயகியா தேர்ந்தெடுத்து அறிவிச்சுடுவாங்க. நான் மட்டுமில்ல இங்கே கலக்கிக் கொண்டிருக்கிற மீராஜாஸ்மின், நவ்யாநாயர், ரேணுகா மேனன், அசின், மங்களா, திவ்யா உண்ணின்னு வருஷத்துக்கு பத்து கதாநாயகிகளையாவது நாட்டுக்கு அர்ப்பணிக்கிற காலேஜ்" என்று கர்வத்தோடு விழிகளை உருட்டிச் சொல்லும் ஷம்ருதா இதே கல்லூரியில் இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் பயில்கிறார். இப்போது சேரனின் உதவியாளர் சாமி இயக்கி வரும் 'உயிர்' படத்தின் கதாநாயகி.

"லால்ஜோஸ் டைரக்ஷன்லே திலீப்கூட 'ரிஷிகன்' கிற மலையாளப் படத்துல அறிமுகமானேன். இப்போ மம்முட்டி, லால் சேட்டன் கூட நடிச்சுட்டேன். ஒரு கமர்ஷியல் படம் நடிச்சா ஒரு ஆர்ட் ஃபிலிம்லே நடிக்க வாய்ப்புக் கிடைக்கிற ஒரே இண்டஸ்ட்ரி மலையாளம்தான். 'நோட்டம்', 'அச்சன் உறங்கா வீடு', 'புலி ஜென்மன்'னு மூணு ஆர்ட் ஃபிலிம் பண்ணிட்டேன். கமர்ஷியல் படத்துல டூயட்டுக்கு ஆடிப்பாடி டான்ஸ் கத்துக்கலாம். இதுலே டூயட் அவஸ்தை இல்லாமல் நடிப்பைக் கத்துக்கலாம்" என்று படபடக்கிறார் ஷம்ருதா.

'உயிர்' படத்தில் யாருடைய உயிராக வருகிறார்? "ஸ்ரீகாந்த் உயிருக்கு உயிரா லவ் பண்ற ஆனந்தியா வர்றேன். என்னோட அறிமுகமே அமர்க்களமா இருக்கும் பாருங்க" என்று குமரி வாசனையோடு சரளமான தமிழில் அசத்துகிறார்.

- ஸ்ரீ

அட்டை, படம் :
**புதூர் சரவணன்**



# அறிமுகமே அமர்க்களம்!

டாக்டர் ஒரு மாதம் வைத்தியம் பார்த்தபின், நெருக்கடியான நிலைமை தீர்ந்துவிட்டது; "இனிமேல் நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. நமச்சிவாயத்தை மதனப் பள்ளிக்கு அழைத்துப் போய் அங்கே இரண்டு வருஷம் இருக்கச் செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

இந்தக் காலத்தில் புண்ணியவான்கள் ஜில்லாவுக்கு ஒரு க்ஷயரோக வைத்திய சாலை ஏற்படுத்தி வருகிறார்கள். அப்போதெல்லாம் மதனப்பள்ளிக்குப் போனால் தான் கொடிய வியாதிக்குச் சிகிச்சை என்று இருந்தது.



# நீலமணி

மதனப் பள்ளிக்குப் போய் இரண்டு வருஷம் இருப்பதற்கு ஐயாயிரம் ரூபாய் பணம் வேண்டும். இதற்கு எங்கே போவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் எதிர்பாராத உதவி ஒன்று கிட்டியது. கும்பகோணத்தில் அப்போது வேறொரு நாடகக் கம்பெனியார் நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நமச்சிவாயத்தின் நிலைமையை அறிந்து அவனுக்கு உதவி செய்யும் முறையில் அவர்கள் ஒரு யோசனை கூறினார்கள். அதாவது, நீலமணி அவர்களுடைய கம்பெனியில் பத்து 'ஸ்பெஷல்' நாடகங்களில் நடித்தால் நாடகத்திற்கு, ஐந்நூறு ரூபாய் வீதம் ஐயாயிரம் ரூபாய் முன் பணமாகவே தருவதற்கு முன் வந்தார்கள்.

நாடகத்துக்கு வசூலே சாதாரணமாக ஆயிரம் ரூபாய்க்குமேல் ஆகாது. நீலமணிக்கு மட்டும் ஐந்நூறு ரூபாய் என்றால், உதவி செய்யும் நோக்கத்துடனே தான் அவர்கள் சொன்னார்கள் என்பதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. இதை நமச்சிவாயமும் உணர்ந்தான். 'ஸ்பெஷல்' நாடகங்களில் நீலமணி நடிப்பதற்கு அவன் சம்மதம் கொடுத்தான்.

ஆனால் நீலமணி பிடிவாதமாக மறுதளித்தாள். நமச்சிவாயம் இருக்கும்போது இன்னொருவனுடன் மேடையில் ஏறி நடிக்க முடியாது என்று சொன்னாள்.

"அப்படியானால் நான் செத்துத் தொலைந்து போய்விட வேண்டும் என்கிறாயா? அதற்குப் பிறகு இன்னொருவருடன் நடிப்பாயா?" என்று ஏடாகூடமாகப் பேசினான் நமச்சிவாயம். நீலமணி ஆத்திரம் தாங்காமல் பொருமி அழுதாள்.

மறுபடியும் நான் தலையிட்டுத் தகராறைத் தீர்த்து வைத்தேன். நீலமணியைச் சமாதானப்படுத்தி அவள் நடிக்க ஒப்புக் கொள்வதுதான் உசிதம் என்றும் நமச்சிவாயத்தினிடம் அவளுடைய உண்மை அன்புக்கு அதுதான் ருசுவாகும் என்றும் எடுத்துக் கூறி ஒப்புக் கொள்ளச் செய்தேன்.

நீலமணியின் 'ஸ்பெஷல்' நாடகங்கள் பத்தும் இரண்டு மாதத்துக்கு நடைபெறுவதாக ஏற்பாடு. ஒன்றைவிட ஒன்றை மிஞ்சிய மகத்தான வெற்றியாக, நாடகங்கள் நடந்து வந்தன. இந்த 'ஸ்பெஷல்' நாடகங்களின்போதுதான் நீலமணிக்குச்

'சின்னப் பாலாமணி' என்று சிலர் பெயர் கொடுத்தார்கள். கடலூரிலிருந்தும், திருச்சிராப்பள்ளியிலிருந்தும், மதுரையிலிருந்தும், நாகப்பட்டினத்திலிருந்தும் நாடகம் பார்க்க ஜனங்கள் வந்தார்கள். இந்த ஜனங்கள் வழக்கமாக வரும் ரெயில்களுக்கு 'நீலமணி ஸ்பெஷல்' என்ற பெயரும் ஏற்பட்டது.

இவ்வளவு அமோகமான வெற்றிக்கு மத்தியில் நமச்சிவாயத்தின் மனோநிலை மட்டும் நாளுக்கு நாள் கெட்டுப் போய் வந்தது. முதலில் நீலமணி நடிப்பதற்குச் சம்மதம் கொடுத்தவன், தான் இல்லாமலே அவள் நாடகத்தில் வெற்றி அடைந்து வருகிறாள் என்பதைப் பார்க்கப் பார்க்க எரிச்சல் அடைந்தான். அவனுடைய எரிச்சலை வளர்ப்பதற்கு முக்கியமாக ஒரு காரணம் ஏற்பட்டது. "பெற்ற தாய்தனை மக(வு) மறந்தாலும்" என்னும் பாட்டில் தன்னுடைய பெயர் வருவதால் அதை மட்டும் நீலமணி பாடக் கூடாது என்று அவன் சொல்லியிருந்தான். பாடுவதில்லையென்று அவளும் உறுதி கொண்டிருந்தாள். ஆனால் நாடகத்துக்கு வரும் மகாஜனங்களின் இயல்பு அபூர்வமானது. அவர்களுக்குத் தங்கள் அதிகாரத்தை நிலை நாட்டுவதில் ஆர்வம் அதிகம். அவர்கள் கோரிக்கையை நடிகர்கள் நிறைவேற்றாவிட்டால் ரகளை செய்துவிடுவார்கள். முதல் நாள் நாடகத்திலேயே சிலர் 'பெற்ற தாய்தனை' என்று கத்தினார்கள். அதை நீலமணி பொருட்படுத்தாமல் வேறொரு விருத்தம் பாடி சமாளித்தாள். மறுநாள் சபையோர் அதற்கு இடங்கொடுக்கவில்லை. மூலைக்கு மூலை எழுந்து நின்று "பெற்ற தாய் பாடு!" என்று கட்டளையிட்டதுடன், பாடாவிட்டால் உட்கார மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தார்கள். நாடக நிர்வாகிகள் நீலமணியிடம், "பாடாவிட்டால் கலகம் உண்டாகும்'' என்று எச்சரித்ததன் பேரில் அவளும் பாட நேர்ந்தது. அந்தப் பாட்டைப் பாடும்போது இயற்கையாக அவளுடைய உணர்ச்சி மிகுந்திருந்தபடியால் ராக மாலிகை பிரமாதமாக அமைந்துவிட்டது. ஜனங்களும் கையைக் கொட்டித் தீர்த்துவிட்டார்கள்.

அதற்குப் பிறகு நீலமணி ஒவ்வொரு



நாளும் சபையோர் கேட்பதற்கு இடம் வையாமல் அந்தப் பாடலைப் பாடிவிட்டாள்.

"பாடாவிட்டால் கலகம் நேர்ந்து நாடகம் குழப்பத்தில் முடிந்திருக்கும்" என்பதை நமச்சிவாயத்துக்கு அவன் எடுத்துச் சொன்னான். அதை அவனும் வெளிப்படையில் ஒப்புக் கொண்டான். இருந்தாலும் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தான்.

நீலமணி நாடகக் கொட்டகைக்குப் போய் வெற்றிமாலை சூடிக் கொண்டு திரும்பி வருவதும், தான் வீட்டிலேயே உட்-



அமரர் கல்கி

கார்ந்திருக்க வேண்டியிருப்பதும் அவனுடைய மனவேதனையையும் எரிச்சலையும் நாளுக்கு நாள் அதிகமாக்கிக் கொண்டே வந்தன.

இரண்டொரு முறை அவனை நான் பார்க்கப் போயிருந்தேன். நாஸூக்காக நாடகத்தைப் பற்றிய பேச்சையே எடுக்காமல், மேலே அவனுக்கு நடக்க வேண்டிய சிகிச்சை பற்றிப் பேசினேன். டாக்டரைக் கொண்டு மதனப்பள்ளிக்குக் கடிதம் எழுதச் சொல்லியிருப்பதாகக் கூறினேன்.




''மதனப்பள்ளிக்கு நான் எங்கே போகப் போகிறேன்? மரணப் பள்ளிக்குத் தான் போகப் போகிறேன்!'' என்றான் அவன்.

''சிச்சி! இது என்ன பேச்சு? தம்பி!'' என்று சமாதானமாக ஏதோ அவனுக்குச் சொல்லிவிட்டு ஊருக்குத் திரும்பினேன்.

எனக்கும் என்னுடைய ஜோலிகள் இருந்தன. நான் இவர்களையே எப்போதும் கட்டிக் காத்துக் கொண்டிருக்க முடியாது அல்லவா? என்னுடைய சம்பாத்தியத்தைக் கொண்டு பிழைக்க வேண்டிய ஜீவன்கள் பதினைந்து பேர் என் குடும்பத்தில் இருந்தார்கள். நான் கச்சேரிகளுக்குப் போய் வராவிட்டால் என் குடும்பம் நடப்பது எப்படி?

'ஸ்பெஷல்' நாடகங்கள் எட்டு முடிந்த பிற்பாடு, சிக்கல் உற்சவத்துக்குப் போய் விட்டு நான் அய்யம்பேட்டைக்குத் திரும்பி வந்தேன். கும்பகோணத்தில் நிலைமை மிக்க நெருக்கடி என்று தெரிந்தது. என் தமக்கை ''அந்தப் பையன் ஒவ்வொரு சமயம் பெட்டியைத் தூக்கிக் கொண்டு தேசாந்திரம் போகிறேன் என்று கிளம்புகிறான். ஒரு சமயம் நீ மருந்து வைத்துத் தான் என் உடம்பு கெட்டு விட்டது என்கிறான். துப்பாக்கியை எடுத்துக் காட்டிச் சுட்டு விடுவேன் என்று பயமுறுத்துகிறான். இன்னொரு சமயம் கையில் அக்கினித் திராவகத்தை வைத்துக் கொண்டு 'குடித்துச் செத்துப் போகிறேன்' என்கிறான். வீடு ஒரே பயங்கரமாயிருக்கிறது. எந்த நிமிஷம் என்ன விபரீதம் நேருமோ தெரியவில்லை. நீ உடனே போய்ப் பார் தம்பி. அவர்களைப் பிரித்துத் தனித்தனியே விட்டு விட்டால் கூடத் தேவலைபோல் இருக்கிறது!'' என்றாள்.

**எ**ன் இரட்டை மாட்டுப் பெட்டி வண்டியை உடனே பூட்டச் சொல்லிக் கும்பகோணத்துக்குக் கிளம்பினேன். அன்றைக்குத் தீபாவளி முதல் நாள். கும்ப



கோணத்து வீதிகள் ஓரே கோலாகலமாக இருந்தன. எங்கே பார்த்தாலும் டப் டுப், டப் டபார் என்று சின வெடிகள் வெடித்துக் கொண்டிருந்தன. கம்பி மத்தாப்புக்களிலிருந்து பொழிந்த வர்ண ஒளிப்பொறிகள் கண்களுக்கு விருந்தாக இருந்தன. விஷ்ணு சக்கர வாணங்கள் பூமியிலிருந்து சுழன்று சுழன்று வானை நோக்கிச் சென்று படாரென்று வெடித்து மறைந்தன. இவற்றிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த புகை மூக்கில் ஏறி மூச்சுத் திணறும்படி செய்தது.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளும், புதுவஸ்திரங்களும் வாணங்களும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். கடைத் தெருக்கள் 'ஜேஜே' என்று இருந்தன.

ஆனால் என் நெஞ்சு மட்டும் திக், திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பாவி - சண்டாளன் - என் அருமைக் குழந்தையை என்ன செய்யப் போகிறானோ, என்னமோ என்று எண்ணிய போதெல்லாம் அடி வயிறு விம்மி எழுந்து மார்பை அடைத்தது. ஒவ்வொரு தடவை பட்டாசு வெடித்த போதும் என் தலையில் ஏதோ வெடித்தது போல் தோன்றியது.

கடைத் தெருவில் சிறிது வண்டியை நிறுத்தி, நமச்சிவாயத்துக்குப் புது வேஷ்டியும் நீலமணிக்குப் புதுச் சேலையும் எடுத்துக் கொண்டு போனேன். வீட்டை நெருங்க நெருங்க, என் நெஞ்சுத் துடிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது.

உடனேயே அய்யம்பேட்டைக்குத் திரும்ப நான் விரும்பியபடியால், வண்டியைப் பூட்டு அவிழ்க்காமல் அப்படியே நிறுத்தி வைக்கச் சொல்லி விட்டு புது

வஸ்திரப் பொட்டலங்களுடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

உள்ளே இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. வீட்டு நடையில் சிறிது தயங்கி நின்றேன்.

"விடுகிறாயா மாட்டாயா?"

"விடமாட்டேன்!"

"என்னைத் தடுக்க உனக்கு என்ன அதிகாரம்?"

"என்னைத் தாலி கட்டி நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளவில்லையா? அந்த அதிகாரந்தான்!"

"நீ எனக்கு மனைவியும் அல்ல; நான் உனக்குப் புருஷனும் அல்ல, உன் மாமாவுக்காகச் செய்த காரியம். நான் இப்போது புறப்பட்டுத்தான் போவேன். ரெயிலுக்கு நேரமாகிவிட்டது. வழியை விடு! இப்படி அதைக் கொடு!"

"விடமாட்டேன்; கொடுக்கமாட்டேன்!"

"கொடுக்காவிட்டால் உன்னை இதோ இந்தக் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிடுவேன்!"

"பேஷாகச் சுட்டுக் கொன்றுவிட்டுப் போங்கள்!"

நமச்சிவாயம் துப்பாக்கியால் சுடுவதாகப் பயமுறுத்தியதை நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. நாடக மேடைகளில் உபயோகப்படுத்தும் விளையாட்டுத் துப்பாக்கி ஒன்று அவன் வைத்திருந்தான். அதில் குண்டு கிடையாது. சுட்டால் வெளிச்சமும் புகையும் தான் வரும்.

டப்! டுப்! டப்! டபார்!...

'வீல்' என்று ஒரு கோரமான குரல் காதில் விழுந்தது. யாரோ தடால் என்று விழும் சத்தமும் கேட்டது.

அலறிப் புடைத்துக் கொண்டு உள்ளே ஓடினேன். நீலமணி அலங்கோலமாகத் தரையில் விழுந்து கிடந்தாள். அவள் உடம்பு துடித்துக் கொண்டிருந்தது. அவள் முகத்தைப் பார்த்ததும் "ஐயையோ!" என்று நான் அலறினேன். உடனே அவள் அருகில் பாய்ந்து சென்று உட்கார்ந்தேன்.

"என்ன, மாமா? என்ன?" என்று கேட்டுக்கொண்டே நமச்சிவாயம் அருகில் உட்கார வந்தான்.

"அட பாவி! சண்டாளா! துரோகி! என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று அவன் தோளைப் பிடித்து ஓர் உலுக்கி உலுக்கித் தூரத் தள்ளினேன்.

நமச்சிவாயம் ஆவேசம் வந்தவன் போல், "அடே நீ யாரடா என்னைப் பிடித்துத் தள்ளுவதற்கு?" என்று பலமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு திரும்பி வந்தான்.

என்னுடைய கோபம் எல்லையைக் கடந்து விட்டது. உடனே குதித்து எழுந்து நமச்சிவாயத்தின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு, "அடே பாதகா. அவளுடைய வாழ்க்கையைத்தான் பாழாக்கிவிட்டாய்! அவள் உயிரோடிருப்பதுகூட உனக்குப் பொறுக்கவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே அவன் கழுத்தைப் பிடித்து இறுக்கத் தொடங்கினேன். நான் செய்வது என்னவென்று எனக்கே தெரியவில்லை, நமச்சிவாயத்தின் விழிகள் பிதுங்கின. அவன் தொண்டையிலிருந்து உருத் தெரியாத பல மாதிரியான சத்தங்கள் எழுந்தன.

கடவுள் என்னைக் கொலைகாரன் ஆக்காமல் தடுத்தாட் கொண்டார். விசித்திரமான, எதிர்பாராத முறையில் குறுக்கிட்டார்.

அண்டகடாகங்கள் வெடித்துவிட்டன என்று சொல்லும்படியான ஒரு சத்தம் எழுந்தது. வீட்டின் முன்புறத்திலிருந்துதான், ஆயிரம் பேரிடிகள் சேர்ந்தாற்போல் நீடித்து இடித்தது போன்ற சத்தம். நூறு எம்டன் குண்டுகள் ஒருமிக்க வெடித்தது போன்ற சத்தம். என் காதின் நரம்புகள் தெறித்து அறுபட்டு விட்டதாகத் தோன்றியது. என் மண்டையே ஆயிரம் சுக்கலாகி விட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அந்த வெடிச் சத்தத்தின் அதிர்ச்சியினால் நமச்சிவாயத்தின் கழுத்திலிருந்து என் கைகள் வெளி வந்தன. இரண்டு பேரும் தூர தூரப் போய் விழுந்தோம். ஒரு நிமிஷ மூளைக் குழப்பத்துக்குப் பிறகு





நேர்ந்தது என்ன என்பது என் அறிவுக்குப் புலனாகிவிட்டது. அந்த வீட்டின் முன் அறை மட்டும் என் சிநேகிதர் ஒருவர் வசத்தில் இருந்தது. அவர் பலசரக்கு வியாபாரி. தீபாவளி சமயத்தில் அவர் பட்டாசுக் கட்டுக்கடையும் நடத்துவார். பெரிய பெரிய கள்ளிப் பெட்டிகளில் வரும் பட்டாசுக் கட்டுகள், மத்தாப்புப் பெட்டிகளை அந்த அறையில் போட்டுப் பூட்டி வைத்திருப்பார். கொஞ்சங் கொஞ்சமாகத் தேவைப்படும்போது சில்லறை விற்பனைக் கடைக்கு எடுத்துப் போவார்.

அந்த அறைக்குள் எப்படியோ நெருப்புப் பொறி பறந்து விழுந்து, பட்டாசுப் பெட்டிகளில் தீப் பிடித்துவிட்டது என்பதை அறிந்து கொண்டேன்.

மறுநிமிஷம் வீடு ஒரே புகை மயமாகிவிட்டது. முன் அறையின் கூரை தீப்பற்றி எரிவதையும் கண்டேன். வீட்டைப் பற்றி நான் அப்போது கவலைப்படவில்லை. வெடி விபத்தினால் விளையக் கூடிய மற்ற தொல்லைகளைப் பற்றியும் சிந்திக்கவில்லை. உடனே குதித்து எழுந்து நீலமணியை எடுத்துத் தோளின்மீது போட்டுக் கொண்டு புகை நெருப்பின் வழியாக வாசற் பக்கம் ஓடினேன். தயாராய் நின்ற வண்டியில் அவளைப் போட்டுவிட்டு நானும் ஏறிக் கொண்டேன். "ஓட்டு! ஓட்டு! டாக்டர் வீட்டுக்கு ஓட்டு!" என்று கத்தினேன்.

பத்து நிமிஷத்துக்கெல்லாம் வண்டி டாக்டர் ராமசர்மாவின் வீட்டு வாசலில் போய் நின்றது. அந்தப் புண்ணியவான் - அவரைப் போல் தயாளகுணமுள்ள டாக்டர் இப்போது யார் இருக்கிறார்கள்? - நீலமணியை வண்டிக்குள்ளே பார்த்துவிட்டு "நேரே ஆஸ்பத்திரிக்கு விடுங்கள்!" என்றார். அவரும் மோட்டாரில் இன்னொரு டாக்டரையும் நர்ஸையும் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்துசேர்ந்தார். தீபாவளி ராத்திரியாயிற்றே என்று பாராமல் இரவெல்லாம் கண் விழித்து நீலமணிக்குச் சிகிச்சை செய்தார்கள்.

நான் உணர்ச்சியும் உயிரும் அற்றவனாக ஆஸ்பத்திரி வாசலிலேயே காத்திருந்தேன்.

"பிழைத்தால் புனர்ஜன்மந்தான்!" என்றார் டாக்டர். ஆனாலும் பிழைக்க வைத்துவிட்டார். ஒரு வாரத்துக்கெல்லாம் உயிருக்கு அபாயமில்லை என்று தெரிவித்தார்.

ஆயினும் ஆஸ்பத்திரியிலிருந்து நீலமணியை அய்யம்பேட்டைக்கு அழைத்துப் போவதற்கு ஆறுமாதம் ஆயிற்று.

கும்பகோணத்தில் என் வீட்டில் லைசென்ஸ் இல்லாமல் வெடிக்கும் சாமான்களை வைத்திருந்ததற்காக என் பேரில் ஒரு வழக்கு வந்தது. அதற்கு நான் பொறுப்பாளி இல்லையென்று வக்கீல் வைத்து வாதாடித் தப்பிக் கொண்டேன்.

ஆறுமாதத்துக்குப் பிற்பாடு இன்னொரு தொல்லை நேர்ந்தது; திருப்பிக் கட்டப்பட்ட அதே வீட்டில் நாட்டு வெடி குண்டுகள் இரண்டு வெடித்தன. 'கும்பகோணம் வெடி குண்டு வழக்கு' என்று நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அந்த வழக்கிலும் என்னைப் போலீஸார் சம்பந்தப்படுத்தினார்கள். நான் மகாத்மா காந்தி கொள்கையில் பக்தியுள்ளவன் என்றும், அஹிம்சாவாதி என்றும் ஊரில் நூறு பிரமுகர்கள் சாட்சி கூறினார்கள். இதனால் அந்த வழக்கிலிருந்தும் தப்பிப் பிழைத்தேன்.

பிற்பாடு, ஒரு தப்புத் தண்டாவுக்கும் போகாமல் மற்றவர்கள் காரியத்தில் தலையிடாமல் 'நான் உண்டு; என் தொழில் உண்டு' என்று மானமாகக் காலட்சேபம் செய்து வருகிறேன்.

(அடுத்த இதழில் முடியும்)


# புத்தகக் கண்காட்சியில் சுஜாதா!

இம்முறையும் சென்னைப் புத்தகக் கண் காட்சி ஹவுஸ்ஃபுல் போர்டு மாட்டாத குறையாக மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது.

பொங்கலுக்கு முந்தைய தினம், நாலரை மணி அளவில் புத்தகக் கண்காட்சிக்குள் நுழைந்தார் எழுத்துலகின் சூப்பர் ஸ்டாரான சுஜாதா. கண்காட்சியில் ஏற்கெனவே தள்ளுமுள்ளு சற்று அதிகமாக இருக்க, ஜனத்திரளில் மெல்ல நீந்தி வந்தார்.

என்.ஆர்.ஐ வாசகர் ஒருவர் சுஜாதாவை சட்டென அடையாளம் கண்டு அவர் கையைத் தேடிப் பிடித்துக் குலுக்கினார். ''சார், எனக்கு ஸ்கூலில் செகண்ட் லாங்குவேஜ் ஹிந்திதான். உங்க புத்தகங்கள் மூலமாதான் தமிழ் பரிச்சயம்'' என்று சுஜாதாவின் காதருகே கிசுகிசுத்தார். அவர் கையில் வழவழப்பான அட்டை கொண்ட 'சுஜாதா பதில்கள்' புத்தகம். அதில் 'அன்புடன் சுஜாதா' என்று நாற்பத்தைந்து டிகிரி கோணத்தில் கையெழுத்திட்டுத் தந்தார் சுஜாதா. அதற்குள் சுஜாதாவைப் பலரும் முற்றுகையிடத் துவங்கினர். அவரைச் சுற்றிலும் ஒரு கூட்டம் கூடிவிட்டது.

''இந்தமுறை புக் ஃபேர்ல என்னென்ன புக்ஸ் வாங்கினீங்க சார்?'' வெள்ளைச் சட்டை அணிந்த நாற்பது வயது வாசகர் தயங்கியபடி சன்னமான குரலில் கேட்க, சிரித்தார் சுஜாதா. ''வருடா வருடம் கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது என்னால் இந்தக் கூட்டத்திலெல்லாம் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. மதிய நேரம் என்னைப் போன்றவர்களுக்குச் சாதகமான நேரம். யாரிடமும் முட்டி மோதாமல் சாவகாசமாகப் புத்தகங்களைப் புரட்டலாம். அரிதான தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் விற்பனை செய்யும் பதிப்பகங்களுக்குச் செல்வேன்'' என்று பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இன்னொரு வாசகர் இடைமறித்தார். ''சார் உங்களை காண்டாக்ட் பண்ணணும்னா எப்படி....?'' என்று இழுத்தார். சுஜாதா தன் வீட்டுத் தொலைபேசி எண்ணையும் முகவரியையும் அடுத்த நொடியே சொல்ல ஆரம்பிக்க, கேள்வி கேட்டவர் தடுமாறினார். கையில் பேனா, பேப்பர் எதுவுமின்றி நிராயுதபாணியாக நின்றவர் எப்படியோ வெள்ளைப்



* பேர் என்னப்பா?

பேப்பருக்குத் தயார் செய்துவிட்டு பின்னர் பேனாவுக்கு சுஜாதா கைவசமிருந்ததை அபகரிக்க முயல, ''மறக்காம கொடுத்துடுங்க'' என அன்புக் கட்டளையிட்டு தன் ஆயுதத்தை அவருக்கு அளித்தார் சுஜாதா.



* அன்புடன் சுஜாதா...



* ''முயற்சிகள் தொடரும்''

தொடர்ந்து ஒவ்வொரு ஸ்டால்களையும் நோட்டமிட்டபடியே மெள்ள நடக்க ஆரம்பித்தார். அடுத்ததாக அரைக்கால் சட்டை போட்ட சிறுவன் இடைமறித்து ஆட்டோகிராப் புத்தகத்தை நீட்டினான். புருவத்தை உயர்த்தியபடி "பேர் என்னப்பா?" என்றார் சுஜாதா. ''சரவணக்குமார்'' கீச்சுக்குரலில் பதில் வந்தது. அவனுக்குப் பின்னால் சிறுவனின் தந்தை. அவரிடம் சுஜாதா, ''இதுபோல் குழந்தைகளை புத்தகக் கண்காட்சிக்குக் கூட்டி வருவது மிக நல்ல பழக்கம். வருடந் தவறாமல் கூட்டி வாருங்கள். குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப் புத்தகங்களை அறிமுகம் செய்யுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார்.

**மா**லை ஐந்து மணிக்கு சுஜாதா புத்தகக் கண்காட்சியிலுள்ள உயிர்மை பதிப்பக ஸ்டாலில் வாசகர்களைச் சந்திப்பதாக ஏற்பாடு. சுஜாதாவும் சரியான நேரத்துக்கு அங்கு நுழைந்துவிட்டார். 'உயிர்மை'யில் சுஜாதா இருக்கிறார் என்கிற தகவல் தீ போல் பரவ, அதைத் தொடர்ந்து வாசகர்கள் உயிர்மை மீது படையெடுக்க ஆரம்பித்தனர். சுஜாதாவிடம் பேசிவிட வேண்டும், ஆட்டோகிராப் வாங்கிவிட வேண்டும் என்பதற்காகவே பலரும் அவசர அவசரமாக உயிர்மைக்குள் புகுந்து புத்தகங்களை அள்ளினர். வரிசையில் நின்று சுஜாதாவைச் சந்தித்தனர். திடீரென ''சார் நல்லாயிருக்கீங்களா?'' என்றொரு பழக்கமான குரல் கேட்டது. திரும்பினால் சக எழுத்தாளர் ஜெயமோகன். ''ஸாரி அன்னைக்கு விழாவுக்கு வர முடியலை'' என்றார். சுஜாதா சிநேகத்துடன் தலையாட்டினார்.

அதற்குள் சுஜாதாவின் நெஞ்சுக்கு நேரே ஒரே சமயத்தில் பல புத்தகங்கள் முண்டியடித்து முன்னுக்கு வர, சுருக்கமாக முடிந்தது சுஜாதா - ஜெயமோகன்

சந்திப்பு.

இரட்டைச் சடைப் பின்னலிட்டு ஃப்ராக் அணிந்த ஒரு சிறுமி சுஜாதாவின் 'பூக்குட்டி'யை நீட்டி கையெழுத்து வாங்கினாள். அருகிலிருந்த அச்சிறுமியின் அம்மா சுஜாதாவிடம் ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

"ஆங்கிலக் குழந்தைகளுக்கென ஏராளமான புத்தகங்கள் உள்ளன. தமிழில் ஏன் இல்லை?"

'பூக்குட்டி'யைக் கைகாட்டினார். "முயற்சிகள் தொடரும்"

தொடர்ந்து வாசகர்களிடமிருந்து கேள்விகள் பறந்தன. "கற்றதும் பெற்றதும் நிறுத்திட்டீங்களே?"

"வாராவாரம் புது விஷயங்கள் எழுத வேண்டியுள்ளது. 'போரடிக்கிறது' என்று வாசகர்கள் முந்திக் கொள்ளும்முன் நாமே தாற்காலிகமாக நிறுத்திக் கொள்ள வேண்டும்."

"பயோகிராஃபி எழுதலாமே?"

"அதெதற்கு? ஓர் எழுத்தாளனுக்கு அவனுடைய எழுத்தே சுயசரிதம்தான். என் கதைகளிலும் கட்டுரைகளிலும் அவ்வப்பொழுது அவை வந்து கொண்டுதானிருக்கிறது. தனியாக எழுத வேண்டியதில்லை."

"சினிமா திரைக்கதை பற்றிய புத்தகங்கள் எழுத வேண்டிய நிர்ப்பந்தம்?"

"ஸ்கிரிப்ட் எழுதத் துவங்கும் முன் பின்பற்ற வேண்டிய சில வரைமுறைகள் உள்ளன. நான் திரைக்கதை எழுதும்முன் இதைத்தான் பின்பற்றுகிறேன். மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்கிற என் ஆசையே புத்தக வடிவில் வந்துள்ளது."

"சிவாஜியில்...?"

"போச்சுடா! இங்கேயும் அதைப் பற்றி துருவ ஆரம்பித்து விட்டீர்களா? அடுத்தகேள்வி..."

- ச.ந. கண்ணன்

படங்கள்: ஸ்ரீஹரி



## சின்ன ஜோக்; பெரிய பரிசு!

**ஜமாயுங்க வாசகர்களே...**

**வாரம் ஒரு ஜோக் போட்டி!**

### போட்டி 3

டீ.வி மெகா சீரியல் ஜோக்குகளை சும்மா வாரி விடுங்க... தேர்வாகும் சிரிப்புகளுக்கு சன்மானம் உண்டு


பளீர் ஜோக்குக்கு

**தூத்துக்குடி மெட்டல்ஸ்,** சென்னை - 19

வழங்கும்

**'ப்ரீத்தி' மிக்ஸி பரிசு!**

- 'டீ.வி மெகா சீரியல் ஜோக்ஸ்'னு குறிப்பிட்டு அஞ்சலட்டையில் மட்டுமே எழுதணும்.
- ஒரு அட்டையில் ஒரு ஜோக் மட்டுமே எழுதவும்.
- ஆசிரியர் தீர்ப்பே இறுதி. • கடைசித் தேதி : 1.2.2006





# டிஸ்லெக்சியா!

'சம்யுக்த் 2006' என்கிற பெயரில் குழந்தைகளுக்கு ஏற்படும் டிஸ்லெக்சியா என்கிற குறைபாடு தொடர்பான ஒரு விழிப்புணர்வுக் கூட்டத்தை, மெட்ராஸ் டிஸ்லெக்சியா அசோசியேஷன் (எம்.டி.ஏ) ஜனவரி 28-29 தேதிகளில் சென்னையில் நடத்தவுள்ளது

டிஸ்லெக்சியா மற்றும் எம்.டி.ஏவின் செயல்பாடுகள் குறித்து நம்மிடம் பேசினார் எம்.டி.ஏவின் சிறப்பு ஆலோசகர் சுபா வைத்தியநாதன்.

"உலகிலுள்ள குழந்தைகளில் பதினைந்து சதவிகிதம் பேருக்கு டிஸ்லெக்சியா குறைபாடு உள்ளது. இது பிறப்பிலுள்ள குறைபாட்டினாலும் பரம்பரையினாலும் வருகிறது. இதற்கென தனியாக மருந்து மாத்திரை எதுவும் கிடையாது.

டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒரு நிலையற்ற தன்மை உடையவர்கள். ஒருநாள் பாடங்களை நன்றாகப் படிப்பார்கள்; மறுநாள் மந்த நிலையில் காணப்படுவார்கள்.

டிஸ்லெக்சியா குழந்தைகளின் நலனுக்காக பெற்றோர்கள், மருத்துவர்கள் மற்றும் தன்னார்வம் கொண்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டதுதான் மெட்ராஸ் டிஸ்லெக்சியா அசோசியேஷன். நாளடைவில் டிஸ்லெக்சியா குறைபாடுள்ள குழந்தைகளுக்கென்று சங்கத்தின் சார்பாக ஆரம்பிக்கப்பட்டது அனன்யா பள்ளி. இப்பள்ளியில் ஒவ்வொரு வருடமும் எழுபத்தைந்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். இதுவரைக்கும் அரசிடமிருந்து எவ்வித உதவியும் பெறவில்லை. மக்களிடமிருந்தே நிதி உதவியைப் பெறுகிறோம்.

பொதுவாக டிஸ்லெக்சியா தீவிரம் குறைவாக உள்ளவர்கள் வழக்கமான பள்ளிகளிலேயே பயிலலாம். இப்பொழுது ஒவ்வொரு பள்ளியிலும் டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கவனிப்பதற்கென்று தனி ஆசிரியர்களை நியமித்து வருகிறார்கள். அதன் தீவிரம் அதிகமானவர்கள் மட்டுமே இதற்கென செயல்படும் சிறப்பு பள்ளிகளில் பயில வேண்டும்.

நான் எம்ஃபில் சைக்காலஜி படித்து, நிர்வாகத் துறையில் வேலை செய்துகொண்டிருந்தேன். ஆனால் நாளடைவில் இத்துறைக்கு வந்த பிறகு நான் அடையும் இன்பத்திற்கு அளவே இல்லை. இன்று அனன்யாவில் சிகிச்சை மேற்கொண்ட பலரும் மருத்துவர்களாகவும் இன்ஜினியர்களாகவும் வலம் வருவதைக் காணும்போது மனநிறைவு ஏற்படுகிறது."

- செந்தில்

# வை கோ மகன் துரை.வையாபுரி

# “என் வழி வேறு!”

“நான்கு வயதுச் சிறுவனாக இருந்த என்னை மழலையர் பள்ளியில் அம்மா சேர்த்துவிட்டு வந்தார்கள். முதல் நாள் வகுப்பில் உங்க அப்பா என்ன செய்கிறார் என்று ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே வந்தார் ஆசிரியை. எனக்கோ இதயம் 'திக் திக்' என்று துடிக்க ஆரம்பித்தது. அது 1974ஆம் ஆண்டு. மிசா எமர்ஜென்சி சட்டத்தின் கீழ் அப்பாவைக் கைது செய்த அரசு, அவரை பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்திருந்தது.

அப்பா அரசியல்வாதி என்பது அந்த சிறிய வயதிலேயே புரிந்து போயிற்று. ஆனால் தப்பு செய்தவர்களைத்தான் போலீஸ் கைது செய்யும் என்ற கண்ணோட்டம், சினிமா வழியே எனக்குள்ளும் பதிவாகி இருந்தது. அப்பா சிறைக் கைதி என்று சொன்னால், எங்கே எல்லோரும் நம்மை கிண்டல் செய்வார்களோ என்கிற பயம். என்ன சொல்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே என்முறை வந்துவிட்டது. 'அப்பா ஜெயிலில் வேலை செய்கிறார்' என்று உண்மையும் பொய்யும் கலந்துச் சொன்னேன். அன்று வீட்டுக்கு வந்த ஆசிரியை எனது புத்திசாலித்தனத்தை அம்மாவிடம் சொல்லிச் சிரித்தார்.

உயர்நிலைப் பள்ளியை எட்டும்போது ஒட்டுமொத்த அரசியல் களத்தையும் புரிந்து கொண்டேன். அரசியலில் மேலே வருகிறவர்கள் எதனால் வருகிறார்கள். கீழே விழுகிறவர்கள் எதனால் விழுகிறார்கள். அரசியல் என்றால் தவிர்க்க முடியாத பல நிர்ப்பந்தங்கள் இருக்கும். கட்சித் தொண்டர்களையும், நிர்வாகிகளையும் உற்சாகத்தோடு வைத்திருக்க வேண்டும். குடும்பத்தோடு கொஞ்ச நேரம்தான் செலவிட முடியும் என்பதெல்லாம் புரிந்தபோது அப்பாவின் அரசியல் வாழ்க்கை எங்களுக்குப் பழகிப்போய்விட்டது.

நேர்மையாளர், திறமையாளர், உழைக்க அஞ்சாதவர் தி.மு.க.வின் அடுத்த தலைமுறை என்றெல்லாம் கல்லூரியில் பயில்கிறபோது அப்பாவைப் பற்றி பத்திரிகைகளில் வரும் செய்தியைப் படித்து பெருமைப்படுவேன். நம்மால் அப்பாவுக்கு எந்தக் கெட்ட பெயரும் வந்துவிடக்கூடாது எனும் எச்



சரிக்கை உணர்வோடு, வயதுக்குரிய குறும்பு களையும் கொண்டாட்டங்களையும் புறக் கணித்திருக்கிறேன். எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் வைகோவின் மகன் என்று காட்டிக் கொள்ளவும் விரும்ப வில்லை. ஆடம்பரம் விரும்பாத எளிய மாணவனாகவே எல்லோருட னும் பழக விரும்பினேன். திடீ ரெனத் தெரிந்துவிடும் தரு ணங்களில் 'டேய்! ஏண்டா மறைச்ச? வைகோ பையன்னு சொல்லிக்க பெருமைப் பட ணும்டா...' என்று மாணவர் களும், பேராசிரியர்களும் சொன்னபோது அப்பா சம்பா தித்த மரியாதை எனக்கு தன்னம்பிக்கையைக் கொடுத்தது.



• மனைவி குழந்தைகளுடன்

அப்பாவின் லீடர் ஷிப், அவருடைய உழைப்பு, அவருடைய பேச்சாற்றல் எனக்குக் கிடையாது. ஆனால் அவ ருடைய துணிச்சலும் நேர்மையும் என்னிடம் உண்டு. அரசியல் எனக்கு ஈடுபாடு இல்லாமல் போன தற்குக் காரணம், அப்பாவின் கொள்கைதான். வாரிசு அரசியல் கூடாது என்பதற்காகத்தான் அப்பா கட்சி ஆரம்பித்தார். அந்தக் கொள்கைக்கு எந்தச் சூழ்நிலையிலும் என்னால் ஆபத்து வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன்.

பொடா சிறையில் இருந்தபோது, கட்சித் தொண்டர்களின், நிர்வாகிகளின் இல்லத் திருமணங்களில் பங்கு பெற முடியாத அப்பா, 'நம் வீட்டிலிருந்து ஒருவராவது போய் வரவேண்டும்' என்று கூறி என்னைப் போய்வரும்படி வலியுறுத்தினார். நான் சென்று வந்த திருமணங்கள் தோறும் வாழ்த் துரை வழங்க மேடையில் வந்து அமரும்படி வற்புறுத்துவார்கள். தவறியும் கூட நான் அந்தத் தவறைச் செய்வதில்லை. உறவினர், நண்பர்களோடு கீழே அமர்ந்து மணமக் களை வாழ்த்திவிட்டு வருவேன். வாரிசு அரசியல் சரியா தவறா எனும் சர்ச்சைக்குள் நுழைய விரும்பவில்லை. அதே நேரம் அரசியலுக்கு வருகிற வாரிசு, நல்லவராக இருந்துவிட்டால் வரவேற்கலாம்.

அப்பாவை 'பொடா' சிறையில் அடைத்து ஆறு மாதங்கள் ஓடியேவிட்டன. கட்சித் தொண்டர்களும், நிர்வாகிகளும் மனம் நொந்து போனார்கள். 'பொடா சட் டத்தின் விதிகளைப் பயன்படுத்தி பத்துவரு டம் கூட சிறையில் அடைத்துவிடலாம் என்கிறார்களே; உங்கள் முகத்தில் கவலை என்கிற உணர்ச்சியையே காணோமே!' என ஒரு பத்திரிகையாளர் என்னிடம் கேட்டார். 'ஆறு மாதம் ஆனாலும் சரி, ஆறு வருடங் கள் ஆனாலும் சரி! அப்பா கொள்கைக்காக சிறை சென்றிருக்கிறார். ஆண்டுக்கு குறைந் தது ஒரு லட்சம் கிலோ மீட்டர்கள் பயணம் செய்கிறார். வெளியே இருந்தால் அவரது இடைவிடாத அலைச்சலை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. சிறையில் அவரால் ஓய்வெடுக்க

முடியும். கடந்த வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து அசைபோடவும், எதிர் கால அரசியலை எப்படி எடுத்துச் செல்வது என சிந்திக்கவும் இதைவிட அவருக்குச் சிறந்த வாய்ப்பு அமையாது. அப்பா சிறையில் வாடுவதாக நாங்கள் நினைக்கவில்லை. இதனால் எங்களுக்குக் கவலை இல்லை. வீட்டில் எல்லோருடைய எண்ணமும் இது தான்' என்று அவரிடம் சொன்னேன். ஆனால் வேலூரின் அதிகபட்ச வெப்பம் காரணமாகவும், சிறையில் எந்த வசதிகளையும் ஏற்றுக் கொள்ளாததாலும் பதினெட்டு கிலோ எடை குறைந்து, உடல் மெலிந்து போனார் அப்பா. கொசுக்கடியிலிருந்து தற்காத்துக் கொள்ள பயன்படுத்திய கொசுவத்தி சுருளால் சுவாசக் குழாய் புண்ணாகி அவதிப்பட்டதைப் பார்த்தபிறகே அப்பாவுக்கு எதற்காக இந்த அரசியல் என்று நினைத்தேன்.

இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு அரசியல்வாதி இருக்கிறார் என்று அப்பாவைப் போற்றுகிறார்கள். அளவற்ற புகழ் கிடைத்திருக்கிறது. ஆனால் அதற்கு அவர் தரும் விலை, அதிகம். அடுத்த மூன்று வருடங்களுக்கு அப்பா எடுக்கப் போகும் முடிவுகள் முக்கியமானவை. மக்களுக்காக அரசியலை முன்னெடுத்துச் செல்ல அப்பா படுகிற கஷ்டங்களையும், வேதனைகளையும் பார்த்து கர்வப்படலாம். ஆனால் அவரையே ரோல் மாடலாக எடுத்துக் கொள்ளும் அசாத்தியத் துணிச்சல் எனக்குக் கிடையாது. அப்பாவைப் போல நேர்மையை, உழைப்பை, கட்டுக்கோப்பை விரும்புகிறவர்கள் தயவு செய்து அரசியலுக்கு வராதீர்கள். வேறு துறைகளில் உங்கள் நேர்மையையும், உழைப்பையும் செலுத்தினாலே நல்ல நிலைக்கு வரமுடியும். நாலு பேருக்கு உதவி செய்ய முடியும்.

பட்டப் படிப்பை முடித்த கையோடு ஐ.டி.சி. நிறுவனத்தின் உணவுப் பொருள்களை தென் மாவட்டங்களில் விநியோகிக்கும் உரிமையை எனது சொந்த முயற்சியில் பெற்றேன். என்னை நேர் காணல் செய்த ஐ.டி.சி.யின் தமிழகப் பொது மேலாளர் என்னிடம் கேட்டார் 'அரசியலிலேயே நன்றாக சம்பாதிக்கலாமே. இந்த ஏஜென்சி மூலம் எவ்வளவு சம்பாதித்துவிட முடியும்?' என்று. 'பூர்விகச் சொத்து நிறைய இருக்கிறது. ஆனால் எனக்கென்று சமூகத்தில் ஓர் அங்கீகாரம் வேண்டும். அதனால்தான் பிசினஸைத் தேர்ந்தெடுத்தேன்' என்றேன். அவர் மாற்றலாகிப் போகும்போது என்னை நல்ல டிரெண்ட் செட்டர் என்று எல்லோரிடமும் சொல்லிச் சென்றிருக்கிறார்.

தொழில் நிமித்தமாக கடைகள் தோறும் செல்லும்போது 'தயாநிதிமாறன், அன்புமணி மந்திரி ஆகிவிட்டார்கள். உங்களை எப்போது அப்படிப் பார்க்கப் போகிறோம்?' என்று கேட்பார்கள். நான் சொன்னேன். 'எனது அப்பா கலைஞரோ, ராமதாஸோ இல்லை; வைகோ'. இப்போதும்கூட அப்பாவைக் கூப்பிடுகிறோம். பேசாமல் வாருங்கள் எங்களோடும் பேரக் குழந்தைகளோடும் நிம்மதியாக இருந்து விடுங்கள் என்கிறோம். ஆனால் தமிழ் மக்கள் எல்லோரும் தலை நிமிரும் காலம் வரட்டும் என்கிறார். அதுதான் அப்பா. அவர் வழி வேறு; என் வழி வேறு!"

தொகுப்பு : **ஆர்.சி.ஜெயந்தன்**
படங்கள் : **ஸ்ரீஹரி**



"வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு!"

"கவலையை விடுங்கள் மன்னா. இன்னிக்கு இராப்பிச்சை வேடத்தில் நகர்வலம் போயிடலாம்!"

- ஞா.ஞானமுத்து

# பறக்குது பலாமரம்!



**பி**ரெஞ்சுக் கவிதைகளில் ஆர்வம் உள்ள, மேரிலாண்டைச் சேர்ந்த பெண்மணி நிகோல் அஸ்க்வித், நியூயார்க்கைச் சேர்ந்த திரைப்பட ஆர்வலர் பிரசாந்த் பார்கவா, அரசு நிர்வாகம் - மக்கள் உறவு குறித்த விவகாரங்களில் அக்கறை கொண்ட துருக்கி நாட்டுப் பெண் யோங்க்கா கோக்ஸல், பழங்குடியினர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நைஜீரிய இளைஞர் பெஞ்சமின் அடிஸா... இவர்களுடன் மிருதங்க கலைஞர் உமையாள்புரம் மாலியும் இணைகிறார். இந்த ஐந்து பேருக்கும் கோப்லண்டு ஃபெலோஷிப் இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது.


அமெரிக்காவில் உள்ள மாஸசூஸட்ஸ் பல்கலைக் கழகத்தின் ஆம்ஹர்ஸ்ட் கல்லூரியில், மிருதங்கம் வாசிக்கும் நுணுக்கங்களைப் பற்றி மாணவர்களுக்கு விளக்கப்போகிறார் மாலி.

**இ**ந்த வருடம் அறு பத்தைந்து பேருக்கு மேல் இந்த மிருதங்க வாசிப்புப் பயிற்சி வகுப்பில் மாலியுடன் உரையாடவும், மிருதங்க வாசிப்பின் நுணுக்கங்களை அறிந்துகொள்ளவும் காத்திருக்கிறார்கள்.

"வீணை வாசிப்பதில் பெரிதும் நாட்டம் கொண்டு வருடா வருடம் இந்தியா வந்து தங்கும் பேராசிரியர் டேவிட் ரெக் என்னைப் பரிந்துரை செய்தார். நூற்றுக்கணக்கான இளைஞர்களில் முதலில் ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்து, அந்த ஐந்து பேரில் ஒருவனாக என்னைத் தேர்வு செய்தார்.

உமையாள்புரம் மாலி சென்னைப் பல்கலைக் கழக சயின்ஸ் பட்டதாரி. பல சீனியர் - ஜூனியர் இசைக் கலைஞர்களுக்குப் பக்க வாத்தியம் வாசித்திருக்கிறார். கும்பகோணம் ராஜப்பய்யரிடமும், உமையாள்புரம் சிவராமனிடமும் மிருதங்கம் பயின்றவர்.

**ச**மீபத்தில் 'ஜேக்வுட்' என்ற தலைப்பில் ஒரு ஸி.டி. வெளியிட்டிருக்கிறார் மாலி. அதில் பேராசிரியர் ரெக் வீணை வாசிக்க, எச். சுப்பிரமணியன் கெத்து வாத்தியம் வாசிக்க, மாலி மிருதங்கம் வாசித்திருக்கிறார். ஜேக்வுட் என்றால் பலாமரம். மூன்று வாத்தியங்களுமே பலா மரத்தால் செய்யப்பட்டவை என்பதால் அப்படியொரு தலைப்பு!



- சாருகேசி



# குறையொன்றுமில்லை

கிருஷ்ண நாமத்தைச் சொல்லுங்கள். அவனுக்கு தாஸன் என்கிற எண்ணத்தோடு நித்யம் அவனை தியானம் பண்ணுங்கள். அவன் திருநாமத்தை உரக்கச் சொன்னால் நரக யாதனை கிடையாது.

யமலோக சர்ச்சையே நமக்கு இருக்கக் கூடாது என்றால் பகவன் நாமாவைச் சொல்லியாக வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

எம்பெருமான் திருநாமம் கற்றவர்கள் தொண்டரடிப்பொடியாழ்வார் சொன்னதுபோல் நமன்தமர் தலைகள் மீதே பாதம் பதித்து இறைவனடி எய்திவிடலாம்.

சுவாமி தேசிகனும் இதையேதான் சொல்கிறார். 'ரமா சஹித ரங்கபூ!' என்று ரங்கநாதரை அழைத்துச் சொல்கிறார் அபீதி ஸ்தவம் என்று அந்த ஸ்தோத்திரத்துக்குப் பெயர். ரங்கநாதர் விஷயமான இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்கிறவர்களுக்குப் பயமே ஏற்படாது.

சில பேர், ரொம்ப வியாகூலமாக, பயமாக இருக்கிறது; மனசிலே பீதி இருக்கிறது என்று சொல்கிறார்கள் பாருங்கள்... அவர்கள் இந்த சுலோகத்தைச் சொன்னால் பயமெல்லாம் ஓடிப் போய்விடும். அபயங்கரன் எம்பெருமான். அவன் திருநாமத்தைச் சொன்னால் எல்லா பயமும் நீங்கும் என்றார். யாருக்காவது அப்படி நீங்கியிருக்கிறதா என்று கேட்டால் கயாதுஸுத னுக்கு நீங்கியிருக்கிறது என்கிறார்.

கயாது என்பவள் ஹிரண்ய கசிபுவினுடைய தர்மபத்னி. அவளுடைய பிள்ளை பிரஹலாதன்.

சோகம் தவிர்க்கும் கருதிப் பொருள் ஒன்று சொல்லுகின்றேன்

நாகம் தனக்கும் ராக்கதர்க்கும் நமக்கும் சரணாம்

என்று சொல்கிறார் ஆழ்வார்.

காகாசுரனை அவன் ரக்ஷித்தான். கஜேந்திரனை அதிவேகமாய் ஓடிவந்து ரக்ஷித்தான். 'ஆழிதொட்டானை திருவல்லிக்

முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

எட்டாம் பாகம் 3

கேணி கண்டேனே' என்கிறார்.

எட்டுத் திருக்கரங்களோடு காஞ்சிபுரத்திலே காட்சியளிக்கிறான் எம்பெருமான். அந்த எட்டு புஜங்களோடு எதற்காக ஓடி வந்தான் அவன்? அந்த கஜேந்திரனை ரக்ஷிப்பதற்காக அரைகுலைய தலைகுலைய ஓடி வந்தான். அவன் திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டதற்காக அப்படி ஓடி வந்தான்.

நாராயண பட்டத்திரி குருவாயூரப்பனைப் பார்த்துக் கேட்கிறார்: "ஹே குருவாயூரப்பா! நீ ஓடிவந்து கஜேந்திரனை ரக்ஷித்தாயாமே? வாஸ்தவமா?" என்று கேட்க, பகவானும் தலை அசைத்து அதை அங்கீகரித்தான்!

பூரி காருண்யத்தோடு ஓடிவந்தான் அவன். அந்த கஜேந்திர வேழமே அந்த பரதத்வத்தை பகவானுடைய காருண்யத்தை - காட்டிக் கொடுத்தது உலகத்துக்கு...

வாரணன் அழைக்க வந்த காரணனாய் அத்திகிரி அருளாள பெருமான் வந்தார்.

அந்த எம்பெருமானுடைய வருகையைத் தெரியப்படுத்துகிறார் திருச்சின்னமாலை என்கிற பிரபந்தத்திலே.

கஜேந்திரனை ரக்ஷித்தான். திரௌபதியை ரக்ஷித்தான்.

ஹா க்ருஷ்ணா! துவாரகா வாஸின்
க்வாஸி யாதவ நந்தனா ||
சங்கர சக்ர கதாபாணே துவாரகா
நிலையாச்சுதா ||
கோவிந்தா புண்டரீகாக்ஷா ரக்ஷமாம்
சரணாகதம்

என்று கதறினாள் திரௌபதி.

ஓடி வந்து கஜேந்திரனை ரக்ஷித்த மாதிரியே திரௌபதியையும் ரக்ஷித்தானா பரமாத்மா என்றால், இல்லை! அந்த 'கோவிந்தா' என்கிற திருநாமமே அவளை ரக்ஷித்தது.

ஒவ்வொரு அவதாரத்திலேயும் ஒரு குறை உண்டு என்றான் பகவான். இந்த க்ருஷ்ணாவதாரத்திலே என்ன குறை?

"திரௌபதி கூப்பிட்டபோது நான் போய் அவளை ரக்ஷிக்கவில்லையே!" என்கிறான் பகவான்.

அவன் ரக்ஷிக்கவில்லையா! அப்படியானால் திரௌபதிக்கு வஸ்திரம் சுரந்ததே? புடைவை சுரந்து ரக்ஷிக்கப்பட்டாளே?

இதற்கு பகவான் சொல்கிறான் : "நான் எங்கே போனேன் அவளை ரக்ஷிக்க? என்னுடைய நாமா, கோவிந்த நாமா ரக்ஷித்தது" என்றான்.

அதனால்தான் 'குறையொன்றுமில்லாத கோவிந்தா' என்றான் ஆண்டாள். 'கோவிந்தா





என்ற உன்னுடைய திருநாமம் இருக்கிற போது எங்களுக்கு என்ன குறை? அந்தத் திருநாமமே எங்கள் குறையையெல்லாம் தீர்த்தது.'

அவன் குறையையும் நீக்கிய திருநாமம் அல்லவா அது! பக்தை அவன் (திரௌபதி) கூப்பிட்ட போது திருநாமமல்லவா ரக்ஷித் தது! ஜடமான திருநாமமே ரக்ஷித்தது என்று பகவானே சொல்லியிருக்கிறான் என்றால் அந்தத் திருநாமத்தின் பெருமையை என்ன வென்று சொல்வது?

கஜேந்திரன், காகாசுரன், திரௌபதி, விபீஷணன், புஜங்கவன் என்கிற காரீய சர்ப்பம் வ்ரஜஜனமாகிய கோபிகாஸ்த்ரீகள், அம்பரீஷன் என்று சகலரையும் பரமாத்மா விசேஷமாக ரக்ஷித்திருக்கிறான். எல்லோரும் அவன் திருநாமத்தை உச்சாரணம் பண் ணியதால் ரக்ஷிக்கப்பட்டார்கள்.

அந்த கோபிகா பக்திக்கு ஈடு இணை இல்லை. அவர்களிடையிலே நர்த்தனமாடி அத்தனை பேரையும் ஆட்கொண்டான் பரமாத்மா. அவர்களுக்குப் பூரணமாக அனுக்கிரஹம் பண்ணினான். எப்போதும் பகவானுடைய திருநாமத்தையே சொல்லிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். அந்த எம்பெருமானையே நினைத்து நினைத்து உருகினார்கள்.

"இத்தனை பேரை அவன் ரக்ஷித்திருக் கிறான். இவ்வளவு பேரும் பகவானிடத்திலே ஈடுபட்டவர்கள். நீங்களும் அவன் திரு வடியைப் பற்றினால் ரக்ஷிப்பான் என்பதில் சந்தேகம் உண்டோ?" என்று கேட்கிறார் ஸ்வாமி தேசிகன்.

'அவர்களுக்கெல்லாம் அனுக் கிரஹம் பண்ணியதனாலே, ஹே ரங்கநாதா, எங்களுக்கும் கிடைக்கும் படியாக அனுக்கிரஹம் பண்ணு' என்று அவன் திருவடியை நாம் பற்றினோமானால், திருநாமத்தைச் சொன்னோ மானால், நம் பயத்தையும் போக்கி உயர்ந்த கதியை அவன் அளிக்கிறான்.

"அவர்களை மட்டுமே காப்பதற்காகவா அவன் அவதாரம்? நம்மையும் ரக்ஷிக்கத் தான்" என்று சொல்கிறார் ஸ்வாமி தேசிகன்.

சர்வ விதத்திலேயும் எல்லாரையும் எக் காலத்திலும் ரக்ஷிக்கக்கூடியவை அவன் திருநாமங்கள்.

அந்தத் திருநாமங்களிலே முக்கிய மானது யோக: . யோகித்யேயம் சதானந்தம் யோகிகளால் எப்போதும் தியானம் பண்ணப்படக்கூடியவன்; சதா ஆனந்தமாக விளங்கக்கூடியவன் எம்பெருமான்.

ஆனந்தம் - சதானந்தம். எப்போதும் ஆனந்தமாக இருக்கக்கூடியவன் பரமாத்மா. அதனால்தான் உபநிஷத்தானது விசேஷ மாக, 'ஆனந்தோத் பிரும்மேதி வ்யஜானாத்' என்று ஆரம்பித்து விளக்குகிறது. பிரும்ம வல்லி என்கிற தைத்ரீய உபநிஷத்தானது இந்த விஷயத்தை நன்கு எடுத்துக்காட்டு கிறது.

பிருகு மஹரிஷி வருணனுடைய புத்திரர். தன் தந்தையாகிய வருணனிடம் போய் அவர் கேட்கிறார்.

'பிருகுர்வைவாருணி:' என்று இவரை வருணனின் பிள்ளை என்று குறிப்பிடுகிறது உபநிஷதம்.

பிருகு என்று சொன்னால் போதாதோ? வருணனுடைய பிள்ளையாக இவரைக் குறிப்பிடுவது எதற்கு என்று கேட்டால், இதனால் பிள்ளைக்கும் ஏற்றம்; அப்பாவுக்கும் ஏற்றம்.

வேதத்தில் இன்னொரு இடத் திலே சொல்கிறபோது 'யாருக்கும் இடி இடித்துத் தலையிலே விழுந்து மரணம் சம்பவிக்கக்கூடாது' என்று ஒரு பிரார்த்தனை வருகிறது. யார் சொல்கிறார் இந்தப் பிரார்த்த

"கண்டக்டர் இந்த பஸ் எப்ப கிளம்பும்?"

"இன்னும் ஐந்து பேர் வரணும்?"


"ஓ! ஐந்து டிக்கெட் குறையுதாக்கும்?"

"இல்லீங்க! ஐந்து பேர் சேர்ந்து தள்ளினால்தான் கிளம்பும்!"

- வே. முருகேசன்



னையை என்றால், வியாஸர் சொல்கிறார். வியாஸர் சொல்கிறார் என்று சொன்னால் போதாதோ?.... 'பராசரருடைய திருக்குமாரரான வியாசர் சொல்கிறார்' என்று சொன்னதனாலே, அப்பா உயர்ந்தவர் - பிள்ளையும் உயர்ந்தவர் என்று அந்த சம்பந்



தத்தை விவரிக்கிறது. சம்பந்தத்தை இட்டே விஷயம் சொல்லப்படுகிறது :

**வியாஸ : பாராசர்ய :**
சுகபிரும்மர் இந்த வியாஸரை தியானம் பண்ணுகிறபோது,

**'வியாஸம் வசிஷ்ட நப்தாரம் சக்தே : பௌத்ரகல்மஷம்**
**பராசராத்மகம் வந்தே சுக தாபம் தபோநிதிம்'**

என்று சொல்கிறார். நாமும் இப்படியே தியானம் பண்ணுகிறோம்.

'வசிஷ்டருக்குக் கொள்ளுப் பேரனாக இருக்கக்கூடியவர், சக்தி என்கிற அந்த மஹரிஷிக்குப் பேரனாக இருக்கக்கூடியவர், பராசரருக்குப் பிள்ளையாக இருக்கக்கூடியவர்' என்று முன்னே மட்டுமின்றி பின்னேயும் பெருமையுடைய வம்சம் இது. ஆகவே, வியாஸரை தியானம் பண்ணுகிறபோது, அவருக்குப் பெரியோர்களையும் பின்னால் வந்தவர்களையும் சொல்லி தியானம் பண்ணுகிறோம். பெரியோர்களைச் சொன்னால், சின்னவர்களுடைய திருமுடி சம்பந்தத்தினால் அவர்களுக்குப் பெருமை. பின்னால் பிறந்தவர்களைச் சொல்லும்போது, பெரியவர்களுடைய திருவடி சம்பந்தத்தினால் இவர்களுக்குப் பெருமை.

முன்னாலே பத்து தலைமுறைகள், பின்னாலே பத்து தலை முறைகள் - இப்படி 21 தலைமுறைகள் அந்த குலத்திலே பெருமையுடையவர்கள் விளங்குவார்கள் என்கிறது வேதம்.

''பெரிய பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸுக்கு எல்லாம் என் கணவர் கூட்டிப் போக மாட்டார்.''

''ஏன்?''

''அவருக்கு அப்படி ஒரு காம்ப்ளெக்ஸ்...''

- எஸ்.மோகன்

**அ**ப்படி உத்தமமான பிருகு மஹரிஷி, வருணனிடத்திலே போய்ப் பிரார்த்திக்கிறார் :

"பரபிரும்மம் என்றால் என்ன? அதை எப்படி நாம் தெரிந்து கொள்வது?" என்று கேட்கிறார்.

கேட்டவுடனே வருணன் என்ன பண்ணினார், "பரபிரும்மத்தை அப்படி 'தடால்' என்று எடுத்துக்காட்ட முடியாது! நீயே தெரிந்து கொள்வாய்" என்றார்.

உடனே பிருகு மஹரிஷி போய் கொஞ்சம் நாள் தபஸ் பண்ணினார். தபஸ் பண்ணிவிட்டு அப்பாவிடம் வந்து சொன்னார் :

"தெரிந்து கொண்டுவிட்டேன். பரபிரும்மம் என்றால் எது என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன்!"

"என்னது அது?" என்று கேட்டார் அப்பா.

"பிரஸாதம் இருக்கிறதே... அன்னம்... அதுதான் பரபிரும்மம். ஏனென்றால் அது இல்லையானால் உபன்யாஸம் பண்ண முடியுமா? கேட்க முடியுமா? மீதி எல்லாம் சொல்லிக் கொடுத்து வரவேண்டிய வித்யை. இது ஒன்றுதான் - சாப்பிடுவது ஒன்றுதான் - சொல்லிக் கொடுக்காமலே வரக்கூடியது. சொல்லிக் கொடுக்காமலே, சாப்பிட வேண்டும் என்பது இயற்கையிலேயே தோன்றுகிறதே...!" என்றார்.

இதைக் கேட்ட வருணன் சரியென்றும் சொல்லவில்லை... 'தப்பு' என்றும் சொல்லவில்லை. "மறுபடியும் தபஸுக்குப் போ!" என்றார் பிருகு மஹரிஷியைப் பார்த்து!

(வளரும்)

# மூலிகை பிஸ்கெட்!



• ரவி

இந்தியாவிலேயே முதன்முறையாக நீரிழிவு நோயாளிகளுக்கென டைபடோபிக்ஸ் என்கிற மூலிகை பிஸ்கெட்டைக் கண்டுபிடித்துத் தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்துள்ளது மெடிக் இந்தியா நிறுவனம். அதன் நிறுவனர் ரவி நம்மிடம் கூறியபோது,

"நான் வெளிநாடு போகும்போதெல்லாம் அங்கு சத்தான உணவுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தியாவில் எல்லாமே ஜங்க் ஃபுட்தான்.

யு.எஸ்.ஸிலிருக்கும் என் நண்பர் ராம்குமாருடன் விவாதித்தேன். சாதாரணமாக நாம் உணவில் பயன்படுத்தும் இந்திய மூலிகைகளைக் கொண்டு நீரிழிவு நோயாளிகளுக்கான பிஸ்கெட்டைத் தயாரிக்க முடிவு செய்தோம்.

வட இந்தியாவில் மைதா, வெந்தயம் மற்றும் சர்க்கரை கலந்த மூலிகை பிஸ்கெட்டுகளைத் தயாரிக்க முயற்சி செய்த நிறுவனங்கள் இறுதியில் தோல்வியே அடைந்தன. எங்களுடைய பிஸ்கெட்டில் கொஞ்சம்கூட மைதா கலந்திருக்காது. சர்க்கரையே இல்லாத முழு கோதுமை பிஸ்கெட்டைத் தயாரிப்பதென்பது மிகவும் கடினம். அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆரஞ்சு, ஆப்பிள் போன்ற பழங்களில் உள்ள ஃப்ரக்டோஸ் மூலக்கூறுகளைச் சேர்த்தோம். மேலும் கறிவேப்பிலை, அதி மதுரம், மிளகு, இப்பிலி, நெல்லிக்காய்... போன்ற பத்து மூலிகைகளையும் சேர்த்துள்ளோம். இந்த பிஸ்கட் நார்ச்சத்து தருவதால், குடலுக்கு மிகவும் நல்லது.

நீரிழிவு நோயாளிகள் தினமும் நான்கு டைபடோபிக்ஸ் பிஸ்கெட்டுகளைச் சாப்பிடும்படி பரிந்துரைக்கிறோம். இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டும் மார்க்கெட் செய்து வருகிறோம். விரைவில் இந்தியா எங்கும் கிடைக்கும்."

- பப்பி

# சொந்தங்கள் வாழ்க! 14

# வாழ்வின் விசைகள்!

**மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்**



உணர்வுகளைப் புரிந்துகொண்டு பேசுவது உறவை இத மாக்கும் என்பதைப் புரிந்துகொள்கிறோம். ஆனால், நாம் புரிந்துகொண்டு விட்டோம் என்று மற்றவருக்குப் புரிய வைக்கத் தவறி விடுகிறோம்! (ஹலோ, இங்கே என்ன ஒய்.ஜி.எம்/எஸ்.வி. சேகர் நாடகம் நடக்குதா? - டயலாக் அப்படிப் போகுதே! என்று பார்க்கிறீர்களா?) நெருங்கிய உறவா னாலும்கூட, அவர்கள் பேசும்போது, கவனித்துக் கேட்பதும், அதைப் புரிந்துகொண்டதற்கு அடையாளமாக ஒரு வாக்கியமாவது பேசுவதும், அதன் பிறகு நமது கருத்தை/புத்திமதியைக் கூறுவதும் அவர்கள் எதிர்பார்க்கும் இதத்தைக் கொடுக்கும். இதோ ஒரு மாதிரி - எப்படிப் பேசக்கூடாது என்பதற்கு..!

மறுபடியும் கணவன் - மனைவி பிரச்னையைத்தான் உதாரணமாகச் சொல்லப் போகிறேன்! தங்கை, லதாவின் திருமணம் முடிந்து சுபாஷும் அவரது மனைவி விந்தியாவும் மகிழ்ச்சியாகத்தான் ஊர் திரும்பினார்கள். சில நாட்கள் கழித்து மாமியாரிடம் தொலைபேசியில் பேசிய விந்தியா, அதைக் கோபமாகத் துண்டித்துவிட்டு, வேகமாகத் தனது பீரோவில் இருந்த லதாவின் திருமணப் புடைவையை வீசி கட்டிலில் எறிந்துவிட்டு, "யாருக்கு வேணும் இந்தப் புடைவை?" என்று கத்துகிறாள். இந்தக் காட்சியில் சுபாஷ் எப்படிப் பேசக்கூடாது என்று பார்க்கலாமா?

"கல்யாணத்துக்காக வாங்கின புடைவையைப் போய் இப்படி அலட்சியமாய்த் தூக்கி எறிவது சரியா?" ஏன் இப்படி நடந்துக்கறே? என்ன காரியம் பண்ணறே?" என்று சுபாஷ் கோபப்பட்டால், அது புத்திமதி சொல்வதாகும். ரூபாய்க்கு நூறு புத்திமதி கிடைக்கும் பட்சத்தில், இது அவளுடைய கோபத்துக்குத் தூபம் போடும்!

"தூக்கி எறிய இது என்ன குப்பையா? ஒழுங்கா எடுத்து



* படம்: ஸ்ரீஹரி



வெச்சுட்டுப் பேசு" என்று உத்தரவிட்டால் உடனே கேட்பாளா, என்ன?

"ஓ.கே. உனக்கு இந்தப் புடைவை வேண்டாம்னா நம்ம முனியம்மாவுக்குக் கொடுத்திடலாமே! அவ சந்தோஷமா வாங்கிக்கிட்டுப் போவா.... பாவம், நீ பிடிக்காத புடைவையை வச்சுகிட்டுத் திண்டாட வேண்டாமே!" இப்படிக் கிண்டலாக பதில் சொன்னால் விந்தியாவுக்கு எரிச்சல்தான் வரும்.

"ஏன் வீசி எறியறேன்னு எனக்குத் தெரியும். என் தம்பி பெண்டாட்டியின் புடைவையிலே கொஞ்சம் ஜரிகை கூட இருப்பது உன் கண்ணை உறுத்திகிட்டே இருந்துச்சு. அப்பவே விட்டு எறிஞ்சிருக்க வேண்டியதுதானே? ஏன் இந்த லேட் ரியாக்ஷன்?" உளவியல் நிபுணர் மாதிரி, காரணம் கற்பித்துப் பேசுவது அவளை இன்னும் உசுப்பிவிடும்.

"இங்கே பார்... புடைவையெல்லாம் சின்ன விஷயம்; இதுக்குப் போய் இவ்வளவு அலட்டிக்கலாமா? வாழ்க்கையிலே எவ்வளவோ இருக்கு. வயசாக, ஆக நமக்கு மெச்சூரிடி வரணும். நான் பாரு, எதுக்காவது அலட்டிக்கறேனா?". இந்த போதனையைக் கேட்டால் விந்தியா வரிந்து கட்டிக்கொண்டு வருவாள் கடந்த காலத்தில் சுபாஷ் செய்த விஷயங்களைப் பற்றி.

"தெரியுமே அன்னைக்கே, ஒருநாள், உனக்குக் கோபம் வரும்; அப்போ எங்க அம்மா வாங்கிக் கொடுத்ததை வீசி எறிவேன்னு!" என்று சுபாஷ் ஒரு போடு போட்டால், பூகம்பம்தான்.

"என்னைக்கு நீ எங்க வீட்டை மதிச்சிருக்கே? அன்னைக்கு அப்படி, இன்னைக்கு இப்படி..." என்று சுபாஷ் ராமாயணத்தை ஆரம்பித்தால், போச்சு, தொடர் கதைதான்.

(பி.கு: புரட்டிப்போட்டு சுபாஷை விந்தியா வேறு ஒரு விவகாரத்தில் இப்படிப் பேசுவதாகவும் கொள்க!)

இவையெல்லாம் சரியான அணுகுமுறை இல்லை (ineffective communication) என்று ஏன் சொல்கிறேன்? விந்தியாவின் பேச்சில் தெரியும் உணர்வு என்ன? கோபம், வருத்தம். இதுவரை சொன்ன வாக்கியங்கள் அந்த உணர்வுகளைப் பிரதிபலித்தனவா? அவை விந்தியாவின் நடத்தையைச் சுட்டிக் காட்டினவேயன்றி, அவளது உணர்வை சுபாஷ் புரிந்துகொண்ட மாதிரி காட்டவில்லையே? "விந்தியா, நீ கோபமா இருக்கிறமாதிரி தெரியுது. என்ன ஆச்சு?" என்று சுபாஷ் முதலில் கேட்டுவிட்டுப் பிறகு மற்றவற்றை (கிண்டல், கோபம் இல்லாமல்) சொன்னால், புண்ணை வருடிக் கொடுத்த சுகம் அவளுக்குக் கிடைக்க, கணவன் தன்னைப் புரிந்துகொண்ட நிறைவில், தன் கோபத்துக்குத் தானே வருந்தப் படுவாள்!

"வேற வேலை இல்லையா? யாருக்கு இருக்கு அவ்வளவு பொறுமை?" என்று முணுமுணுப்பவர்கள் உறவுகளைத் தூரத்

"'யார் லஞ்சம் வாங்கினாலும் சுட்டுடுவேன்'னு தலைவர் சொன்னதன் அர்த்தம் இப்பத்தான் புரியுது!"

"என்ன?"

"நான் வாங்கி வச்சிருந்த லஞ்ச பணத்தை எனக்குத் தெரியாமல் சுட்டுட்டாரே"

- ஜி. சுந்தரராஜன்

தள்ளிவிடுவார்கள்! ஒரு ரகசியம் தெரியுமா? இப்போது உறவுக்காகச் செலவழிக்கும் ஒரு நிமிடம், பிற்காலத்தில் பத்துமணி நேர விவாதத்தைத் தவிர்க்கும்! நாம் முதலில் மாறினால் நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நமக்கு ஏற்றபடி மாறுவார்கள்.

சொந்தங்களை பல கோணங்களிலிருந்து கடந்த பதின்மூன்று வாரங்களில் அலசினோம். இவற்றில் பேசப்படாத சில விவரங்கள் உண்டு என்பதை நான் அறிவேன். உதாரணமாக, கணவன் - மனைவி உறவில், இருவரில் ஒருவருக்கு வேறு தொடர்பு இருப்பதை பற்றியோ, குடி, போதை, சூதாட்டம் போன்ற அடிமைப்படுத்தும் விஷயங்களைப் பற்றியோ நான் குறிப்பிடாததன் காரணம் இவற்றைப் பற்றி மட்டுமே நிறைய விவரங்கள் இருக்கின்றன என்பதுதான். ஒன்று மட்டும் நிச்சயம்; கணவன் - மனைவி உறவில் சந்தேகம் என்பது, பாலில் விஷம் கலந்த மாதிரி. வாழ்க்கைத் துணை சந்தேகப்படுவதாகத் தெரிந்தால், 'நான் ஒன்றும் செய்யாதபோதே என் கணவன்/மனைவி சந்தேகப்படுகிறாரே/றாளே. தவறு செய்தால் என்னவாம்?' என்று வக்கிரமாக புத்தி போகும் அபாயம் உண்டு. அனாவசியமாகச் சந்தேகப்படுவதும் நல்லதல்ல; தவறு நடந்துவிட்டது என்று உறுதியாகத் தெரிந்தபின் வாளாயிருப்பதும் நல்லதல்ல.

கட்டுரையில் சொல்லப்படாத மற்ற விஷயங்கள்:

- மனநலப் பிரச்னைகள் உள்ளவர்களைப் பற்றி / மனநோய்கள் பற்றி
- 'சொன்னாலும் புரியாது; சுயமாகவும் தெரியாது' என்று சிலர் இருப்பார்களே - 'பர்ஸனாலிட்டி டிஸ்ஆர்டர்' உள்ளவர்கள், அவர்களைப் பற்றி.
- ஆண் - பெண்ணிடையே நிலவும் தூய நட்பு பற்றி
- டீனேஜ் காதல் பற்றி
- மேலும் மாறுபட்ட நிலையில் உள்ள உறவுகள் பற்றி.

ஜே. கிருஷ்ணமூர்த்தி சொன்னது போல, உறவுகளில் எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்ளும் நாம், ஏமாற்றம் அடைந்தால் அதற்கு உறவுகளா பொறுப்பு? "நாம் வாழும் வருடங்களின் எண்ணிக்கை முக்கியமில்லை; அந்த வருடங்களின் உயிரோட்டம்தான் முக்கியம்" என்றார் ஆபிரகாம் லிங்கன்.

அந்த உயிரோட்டமான வாழ்வுக்கு உறவுகள் விதைகள்.

"கடவுளே! மாற்ற முடியாதவற்றை மாற்றக்கூடிய மனப் பக்குவத்தையும் மாற்றக் கூடியவற்றை மாற்றிக் கொள்ளும் மனதைரியத்தையும், இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளக்கூடிய பகுத்தறிவையும் எனக்குக் கொடு"

சொந்தங்களை வாழவைத்து நாமும் வாழ்வோம்.

(முடிந்தது)



"அரண்மனை கஜானா திடீர்னு நிரம்பி வழியுதே... எப்படி?"

"போலீஸ் வேஷத்துலே மன்னர் தினமும் நகர்வலம் போனதுலே செம மாமூலாம்!"

- தஞ்சை தாமு

'மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பளம்; காலை பத்து மணி முதல் மாலை ஆறு மணி வரை வேலை நேரம் என்றாலும் காலை ஒன்பது மணிக்கே வந்துவிட வேண்டும். இரவு பத்து மணி வரை கூட வேலை இருக்கலாம். இது ஒரு பெரிய ரியல் எஸ்டேட் கம்பெனி. ஞாயிற்றுக் கிழமை கூட வர வேண்டியிருக்கும். இங்கே சேர்ந்த பிறகு டெஸ்ட், இன்டர்வியூ என்று வேறு எங்கும் அலையக் கூடாது. சம்மதமா விஜய்?'' என்றார் அந்த கம்பெனி நிறுவனர் குப்தா.

போபாலின் பெரிய கன்ஸ்டிரக்ஷன்ஸ் கம்பெனி. எங்கெங்கோ அப்ளிகேஷன் போட்டதில் இதுவும் ஒன்று. குப்தாவின் கேள்வி இரண்டு நாட்கள் சாப்பிடாதவனுக்கு தயிர்சாதம் மட்டும் தருவேன் சம்மதமா என்பதுபோல் இருந்தது. உடனே ஒப்புக் கொண்டான் விஜய்.

வெளியில் சோபாவில் அமர்ந்ததுமே 'கங்க்ராஜுலேஷன்ஸ்' என்ற ரிசப்ஷனிஸ்டை நோக்கி நன்றி தெரிவித்தான். 'என் பெயர் சோனியா' என்றும் அறிமுகம் செய்து கொண்டாள்.

பரோட்டாவும் வெண்ணையும் சேர்ந்து வளர்த்த தேகம்; நட்புரிமையுடன் பழகும் தனிக் குணம். இதற்கு மேல் சோனியாவின் அழகை ரசிக்க விஜய்க்கு மனமில்லை.

அவன் நினைவெல்லாம் ரயில்வே ஸ்டேஷனில் வழியனுப்ப வந்துவிட்டு கட்டி யணைத்து அழுத அம்மாவிடம்தான் இருந்தது. அந்தக் கண்ணீர் உப்பில்தான் என் னென்ன சேர்க்கை? 'உனக்கு விரைவில் வேலை கிடைக்க வேண்டும். நல்ல வேலையாகக் கிடைக்க வேண்டும். எங்களை மறந்துவிடாதே. வேலை கிடைத்தால் வெளியிடத்தில் ஒழுங்காக இரு' என்று எத்தனையோ.

காத்திருக்கும் நேரத்தில் வீட்டுக்கு ஃபோனாவது அடித்துச் சொல்லிவிடலாம் போல் தோன்றியது விஜய்க்கு. எஸ்.டி.டி. பூத்துக்கு சோனியா வழி காண்பித்தாள்.

'வேலை கொடுத்துவிட்டார்கள் என்று கண்டேன் சீதையைப் போல விஜய் சொன்ன வுடனேயே அந்தப் பக்கத்திலிருந்து வந்த நிம்மதிப் பெருமூச்சை உணர முடிந்தது. கூடவே கிடைத்த நிபந்தனைகளையும் ஒன்று விடாமல் விவரித்தான். பின்னர் லெட்டர் போடுகிறேன்' என்று சொல்லிவிட்டு ரிசீவரை வைத்தான்.


# முதல் பாடம்!

வேலைக்குச் சேர்ந்த ஒரு மணி நேரத்தில் சாப்பாட்டு வேளையும் வர, சரி வெளியே சென்று பார்க்கலாம் என்று விஜய் எழுந்தான். ''சாஹேப்! உங்களுக்கு லஞ்ச் பாக்கெட் வாங்கி வந்து விட்டேன்'' என்று ஹிந்தியில் சொல்லிய வண்ணம் பியூன் வந்தான். திகைப் புடன் விஜய் நிற்கையில், ''முதல் நாள் வேலைக்குச் சேர்ந்தவுடன் லஞ்ச் தருவது என் வழக்கம். உடம்பைத் தேற்றிக் கொள்'' என்று கூறியபடி தோளைத் தட்டிச் சென்றார் குப்தா.

பேச்சில் எவ்வளவு கறாரோ அவ்வளவு மனிதாபிமானமும் குப்தாவிடம் இருந்தது. ரூம் கிடைக்கும் வரை கம்பெனி கெஸ்ட் ஹவுஸில் தங்க அனுமதி தந்ததுடன் 'இரண்டு மூன்று நபர்களுடன் சேர்ந்து தங்கு. அப்போதுதான் வீட்டுக்குப் பணம் அதிகம் அனுப்ப முடியும்' என்று அறிவுரையும் கொடுத்தார். தான் சொல்லாமலேயே அவருக்கு அவனது

வீட்டு நிலைமையும் எண்ண ஓட்டங்களும் புரிந்தது பற்றி விஜய்க்கு மேலும் வியப்பு.

அந்த சனிக்கிழமை 'என்ன வேலை செய்ய வேண்டும்' என்பதைக் கேட்க மேனேஜரிடம் சென்றபோது "வேலை அதிகமில்லை. உனக்கு மாத முடிவில் சம்பளம் செக்காகத் தருவார்கள். போய் அக்கவுண்ட் திறப்பதிலிருந்து இருக்கும் எல்லா சொந்த வேலை



களையும் கவனித்துவிட்டுவா. பின்னால் நேரமிருக்காது" என்று சொல்லி அனுப்பினார்.

மாலையில் "நாளை ஞாயிற்றுக் கிழமை எத்தனை மணிக்கு வர வேண்டும்?" என்று விஜய் தயங்கியபடி கேட்க, அவரும் சிரித்துவிட்டு "வேலையிருந்தால்தான் வர வேண்டும். இல்லாவிட்டால் அவசியமில்லை. பத்து மணிக்கு வந்துவிட்டு மாலை ஆறு மணிக்கு ஓடும் வழக்கம் இல்லாமல் வேலையை முடிக்கும் மனநிலை உனக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் சேரும்பொழுது குப்தா அப்படிச் சொன்னார்" என்று விளக்கம் அளித்தார்.

பத்துப் பதினைந்து நாட்களில் மனமும் உடலும், வேலையிலும் அந்த கம்பெனியிலும் ஒன்றி விட்டதை விஜய் உணர்ந்தான்.

**மா**தமுடிவில் தாத்தா, பாட்டி ஹரித்வார், ரிஷிகேஷ் போவதால் அவர்களை ஸ்டேஷனில் போய்ப் பார்க்கும்படி சொல்லி அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. மழைக்காலம். தமிழ்நாடு எக்ஸ்ப்ரஸ் டெல்லி பக்கம் செல்லும்போது இரவு ஒன்பது மணிக்கு போபால் ஸ்டேஷனைக் கடப்பதால் அன்று இரவு எட்டு மணிக்கே வேலையை முடித்துவிட்டு வெளியே வந்தான் விஜய்.

தூறல் அதிகமாக ஆட்டோவையும் காணவில்லை. தயங்கியபடி நின்று கொண்டிருந்த விஜயை அவசரமாக வெளியே வந்த குப்தா கவனித்தார். விவரம் தெரிந்து கொண்டவர் மழைபெய்வதால், தன் காரில்

**சீதாராம்**

ஏறிக் கொள்ளச் சொல்லிவிட்டு தன்னைப் போகும் வழியில் வீட்டில் இறக்கிவிட்டு விட்டு காரை எடுத்துக்கொண்டு ட்ரைவருடன் ஸ்டேஷன் போய்க் கொள்ளச் சொன்னார். வாய் அடைத்துப் போன விஜய் கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டைத் திணித்தவர், "நீ இன்னும் முதல் மாத சம்பளம் கூட வாங்கவில்லை. பெரியவர்களைப் பார்க்கும்போது வெறும் கையுடன் போகாதே! அகர்வால்கடையில் பால்கோவா நன்றாக இருக்கும். வாங்கிக் கொண்டு போ! என்னுடைய நமஸ்தேயையும் சொல்" என்று சொல்லி விட்டு வீடு வந்ததும் இறங்கிவிட்டார்.

**வி**ஜய் பிளாட்ஃபாரத்தை அடையவும் ரயில் நுழையவும் சரியாக இருந்தது. பத்து நிமிடங்கள் நிற்கும். ஜன்னல் வழியாகப் பார்த்து, உள்ளே வருகிறேன் என்று சொல்வதற்குள் அம்மா கொடுத்தனுப்பிய சீடை முறுக்குடன் தாத்தாவும் பாட்டியும் தட்டுத் தடுமாறி இறங்கி விட்டனர். பாட்டிதான் பாவம் வாடி வதங்கி முகம் முழுவதும் சோகமாய் நின்றார். சுருக்குப் பையிலிருந்து திருநீறை எடுத்து விஜய் நெற்றியில் வைக்கும்போது தான் கேட்டான். "ஏன் பாட்டி உடம்பு இன்னும் சரியாகவில்லையா?"


"எல்லாம் உன் கவலை தான். இந்த விபூதிப் பிரசாதம் கூட நான் உனக்காக வைதீஸ்வரன் கோயில் வரை போய் கொண்டு வந்தது" என்றார். திக்கென்றிருந்தது விஜய்க்கு.

"உன் மேனேஜிங் டைரக்டர் சம்பளம் கம்மியாகத் தருகிறாராம். சனி, ஞாயிறு லீவு என்று கூடப் பார்க்காமல் உன்னைக் கசக்கிப் பிழிவதாய் உன் அம்மா சொன்னாள். உனக்கு வேறு நல்ல வேலை கிடைக்காதா என்று பிரார்த்தனையுடன் தினந்தோறும் ஸ்ரீராமஜெயம் எழுதிக் கொண்டிருக்கிறாள். நானும் ஹரித்வார் ரிஷிகேஷில் உனக்காக வேண்டிக் கொள்கிறேன்" என்றார் கவலையுடன். விஜய்க்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

எதை, யாரிடம் எப்போது எப்படிச் சொல்ல வேண்டும் என்பது சிறிது தெளிவானதுபோல் இருந்தது. அவசரத்தில் மனிதர்களை எவ்வளவு தவறாக எடை போடுகிறோம்? நெருங்கியவர்களுடன் சில சமயத்தில் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளும்போது தவறாகவும் முடிகிறது.

'வேலை கிடைத்துவிட்டது. மாதா மாதம் பணம் அனுப்பி விடுகிறேன்' என்று ஒரு வார்த்தை மட்டுமே பெற்றோர்களை நிம்மதியில் விட்டிருக்கும். உண்மையிலேயே கஷ்டங்கள் இருந்திருந்தாலும் சில நாட்கள் என்னுடனேயே வைத்திருக்கலாம்.

மௌனமாக பால்கோவா பாக்கெட்டை அவர்களிடம் நீட்டியவன் மெதுவாக கையைப் பிடித்து ரயிலில் ஏற்றி விட்டான்.



"என்னங்க இது - வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் ஜோசியரையும் வேலைக்குச் சேர்த்திருக்கீங்க?"

"வானிலை அறிக்கை வெளியிடறதுக்கு ஜோசியரையும் கலந்து பேசிக்குவோம்!"

- எம்.அசோக்ராஜா

# பொஸஸிவ் புருஷன்!

**அம்பை தேவா**

''தலைவருக்கு எப்பவும் பணத்துல தான் குறி!''

''எப்படிச் சொல்ற?''

''பாராளுமன்றத்துல கேள்வி நேரத்தை அதிகரிக்கணுங்கறார்!''





''இளைஞர் அணில இருந்து ராஜினாமா பண்ணிட்டீங்களே, ஏன்?''

''தலைக்கு டை அடிக்க முடியாதபடி மொத்தமா வழுக்கையே விழுந்துடுச்சே!''

''என் கணவர் ரொம்பவும் பொஸஸிவ்!''

''என்ன சொல்ற?''

''கிச்சன்ல அவரைத் தவிர வேற யாரும் உள்ளே நுழையக் கூடாதுங்கறார்!''



''இந்தக் கரும்பு ஏன் 'சப்'னு இருக்கு?''

''இது ஷுகர் ஃப்ரீ கரும்புங்க. டயபடீஸ்காரங்களுக்கு!''



பெங்களூர் ஹனுமந்த் நகரின் குறுகலான சந்துக்குள் இருக்கிறது அந்தக் கட்டடம். நெருக்கியடித்தாற்போல் இருக்கும் கட்டடத்தின் குறுகலான படிகளின் வழியாக மூன்றாவது மாடிக்கு ஏறினால் வரவேற்பறையில் திருப்பதி தேவுடா. மேஜையில் சிவலிங்கத்துக்கு சத்ரபதி சிவாஜி பூஜை செய்துகொண்டிருக்கிறார். நாம் வந்திருப்பதை கன்னடத்தில் சொல்லிவிட்டுக் காத்திருக்கிறோம். உள்ளிருந்து மராத்தியில் ஏதோ குரல்கள்; தம்பியைப் போலவே கைகூப்பி சிரித்தபடி வெளியே வருகிறார் ரஜினியின் அண்ணன் சத்தியநாராயணா ராவ் கெய்க்வாட்.



• இல்லத் திருமணத்தில்...



• சத்தியநாராயணா ராவ்

*ரிடையர்ட் லைஃப் எப்படியிருக்கு?*

தினமும் காலை, மாலை இரு வேளையும் ராமகிருஷ்ண மடம் போயிட்டு வர்றதுக்கே நேரம் சரியா இருக்கு. தம்பி நடிச்சிருந்ததால 'சந்திரமுகி' படம் தியேட்டருக்குப் போய்ப் பார்த்தேன். டீ.வியில எப்பவாவது தம்பி படம் போட்டா பார்க்கிறதுண்டு. மத்தபடி நியூஸ், சீரியல் மட்டும்தான். தமிழ், தெலுங்கு, கன்னடம்னு எல்லா சானலையும் பார்ப்பேன்.

*சத்ரபதி சிவாஜி, மராத்தி குடும்பங்கள்ல ஒரு குல தெய்வம் மாதிரி. சிவாஜின்னு பேர் வெச்சது பத்தி என்ன நினைக்கிறீங்க? ஸ்டோரி லைன் ஏதாவது சொன்னாங்களா?*

ஸ்டோரி லைன் எனக்குத் தெரியாது. ஆனா நல்லா இருக்கும்னு லதாம்மா சொன்னாங்க. கொஞ்சம் வித்தியாசமா இருக்கும். இது சிவாஜி மகாராஜ் கதை கிடையாது. சோஷியல் கதைதான். வழக்கமா இருக்குற எல்லா விஷயமும் இதுல இருக்கும்.

*சின்ன வயசுலேயே ரஜினிக்கு ஆன்மிகத்துல இஷ்டம்னு படை*

# "நிச்சயம் 'ஜக்குபாய்' வரும்!"

## -ரஜினியின் அண்ணன் உறுதி!





யப்பா விழாவுலேயே பேசியிருக்கீங்க. ஆனா நடுவுல சில காலம் அவருக்கு ஆன்மிகத்துல ஈடுபாடு இருந்த மாதிரியே தெரியலையே...

ஆரம்பத்திலேயிருந்தே இருந்திருக்கு. அது ஒரு நாளைக்கு வெளிப்படையா தெரியறதும் உள்ளுக்குள்ளேயே கனலா இருக்கிறதும் எல்லாருக்கும் நடக்கிறது தானே... ஆன்மிகத்துல இஷ்டங்கிறது ஆண்டவனே கொடுக்கிறது. அதுக்கு சரியான டைம் வரணும். எல்லாத்தையும் நாம அனுபவிச்சாகணும். கஷ்டமோ.... சுகமோ... அவரு எல்லாத்தையும் பார்த்திருக்காங்க.

***கண்டக்டர் வேலையை விட்டுட்டு சென்னைக்குப் போனப்போ நீங்க வருத்தப்பட்டதுண்டா?***

நடிக்கிறதுல அவருக்கு ஆர்வம் அதிகமா இருந்துச்சு. பள்ளிக்கூடத்துல படிக்கிறபோதே ஆரம்பிச்சுட்டாரு. ராமகிருஷ்ண மடத்துலதான் முதன் முதலா நாடகம் நடிச்சாரு. அதைப் பார்த்துதான் எங்களுக்கு நம்பிக்கை வந்துச்சு. அப்புறம் ஆண்டுவிழாவுல நடிச்சாரு. கண்டக்டர் வேலை பார்க்கும்போது வருஷா வருஷம் ஸ்டேஜ் ஏறி ஏதாவது நடிப்பாரு. பெரிய ஆளா வரணும்னு அப்பவே அவருக்கு நினைப்பு இருந்துச்சு. அதனால தான் ஆண்டவன் மேல பாரத்தைப் போட்டு மெட்ராசுக்கு அனுப்பி வெச்சோம்.

***ரஜினியோட கல்யாணமும் பத்திரிகை வட்டாரத்துல பரபரப்பாத்தான் இருந்துச்சு. ரஜினி பொண்ணு கல்யாணத்திலேயும் பரபரப்புதான். அதைப் பத்தி என்ன நினைக்கிறீங்க? உங்களைக் கலந்து பேசுனாங்களா?***

சர்ப்ரைஸ்தான். எங்ககிட்ட சொல்லி பொண்ணைக் காண்பிச்சுட்டு, சம்மதம் கேட்டுட்டுத்தான் ரஜினி கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. ஐஸ்வர்யா ஆசைப்பட்டிருக்கு. தடுக்க வேணாம்னு நினைக்கிறதா சொன்னாரு. சந்தோஷமா வீட்டுலேயே பந்தல் போட்டு கல்யாணத்தைப் பண்ணிட்டாங்க.

***'ஜக்குபாய்' படத்துக்கு நீங்களும்***

**ஒரு தயாரிப்பாளர். அதை டிராப் பண்ணினதுக்கு என்னதான் காரணம்?**

பாட்ஷா மாதிரியே ஸ்டோரி லைன் இருந்ததால நிறுத்தி வைச்சுட்டாங்க. கதையை மாத்திட்டு சொந்தமா படம் பண்றதுக்கு பிளான் இருக்கு; நிச்சயம் பண்ணுவாரு!

**சின்ன வயசுல அவருக்கு ராகவேந்திரர் மேல பக்தி வந்ததுன்னு எல்லோருக்கும் தெரியும். ரமணரைப் பிடிக்கும்னு சொன்னார். கொஞ்ச வருஷம் தயானந்த சரஸ்வதியோட இருந்தார். அப்புறம் சச்சிதானந்தா... பாபாஜி... ஆன்மிக குருவை அடிக்கடி மாத்திக்கிட்டே இருக்கிற மாதிரி தெரியுதே...**

குருஜியை மாத்திடறார்னு சொல்ல முடியாது. ஆரம்பத்துலே பக்தி மார்க்கத்துல ஆரம்பிச்சு இப்போ ஞான மார்க்கத்துல போயிட்டிருக்கார். எல்லாருக்கும் குருஜிங்கிறது ஒண்ணுதான். இவங்க எல்லாம் வேற மாதிரி தெரிஞ்சாலும் சொல்றதெல்லாம் ஒண்ணுதான். உலகத்துல எல்லோருக்கும் ஒரே குருதான். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாதான். அவருதான் எல்லோரையும் நியமிக்கிறாரு.

**ரஜினிக்கு நெருக்கமான வட்டாரத்துலேர்ந்து முதல்முதலா அவருக்கு அரசியல் ஒத்து வராதுன்னு சொன்ன ஒரே ஆள் நீங்கதான். படையப்பா மேடையிலேயே வெளிப்படையா இதைச் சொல்லியிருக்கீங்க. இப்பவும் அப்படித்தானா?**

ஆமாம். எப்பவும் அரசியல் சரி வராது. அவர் கொஞ்சம் நேர்வழியிலே போற ஆள். அவருக்கு அரசியல் எப்பவும் ஒத்து வராது.

**1992 - ம் வருஷம் காவிரி பிரச்னை வந்தப்போ வெளிப்படையா கர்நாடகத்துக்கு எதிரான ஒரு நிலையை எடுத்தாங்க. இப்ப மூணு வருஷத்துக்கு முந்தி பிரச்னை வந்தப்போ கொஞ்சம் யோசிச்சு நடுநிலையா இருந்த மாதிரி இருக்குதே... நடுவுல இப்படியொரு மாற்றம் வந்ததுக்கு என்ன காரணம்?**

அப்ப வேகமா பேசினாரு! பேச வேண்டிய தேவை இருந்தது. இப்போ அப்படியொரு நிலைமை வராது. கொஞ்சம் அமைதியா, யோசிச்சு முடிவு பண்ண வேண்டியிருக்குது. அப்படியொரு நிலைமை வந்தா என்ன சொல்லியிருக்காங்களோ அதை நிச்சயம் செய்வாரு.

**இப்போ ரஜினி, தான் உண்டு தன் வேலை உண்டுன்னு நினைக்க ஆரம்பிச்சுட்ட மாதிரி தெரியுது. முன்பெல்லாம் தமிழ்நாட்டுக்கு ஏதாவது செய்யணும்னு சொல்லிட்டிருப்பார் இனிமே எப்படி?**



''அரசே! இன்று நகர்வலத்துக்கு நான் எந்த மாறுவேடத்தில் வரட்டும்?''
''ஒப்பனை இல்லாமல் வந்தாலே போதும் மகாராணி!''
- ஞா. ஞானமுத்து

எல்லாத்தையும் நல்லா யோசிச்சு தான் முடிவு பண்ணுவாரு! நிறைய தரும காரியங்கள் பண்ணுவாரு. டிரஸ்ட் மூலமா இப்ப பண்ணிட்டு இருக்காங்க. அதை இன்னும் கொஞ்சம் அதிகமா பண்ணணும். மத்தபடி எல்லாத்தையும் ஆண்டவன்தான் முடிவு பண்ணணும். தமிழ்ப் பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. தன்னோட பொண்ணையும் தமிழ்நாட்டுலே கொடுத்துட்டாரு. அதனாலே இப்ப அவருக்கு சென்னைதான் சொந்த ஊரு.

**முன்னே மாதிரி கிட்ட போய் பார்த்து போட்டோ எடுக்க முடியலைன்னு ரசிகர்கள் வருத்தப்படறாங்க. ரசிகர்களை விட்டு விலகிப் போறதுக்கு ஏதாவது காரணம் உண்டா?**

பெரிசா காரணம் எதுவுமில்லை. பொதுமக்களுக்குத் தொல்லை அதிகமாகுதுன்னுதான் ரசிகர்களைச் சந்திக்கிறது கிடையாது. ஒரு கல்யாணத்துக்கு வந்தாருன்னா அவரைப் பார்க்கிறதுக்காக நிறைய கூட்டம் வருது. எல்லோரும் போட்டோ பிடிக்கணும்... கைகுலுக்கணும்னு ஸ்டேஜ் மேலே வந்து கலாட்டாவா ஆயிடுது. போனமாசம் எங்க மாமா பையனோட பொண்ணு கல்யாணம் பெங்களூர்ல நடந்துச்சு. கன்னட ஆக்டர் சினிவாச மூர்த்தியோட பையன் நவீனுக்குத்தான் பொண்ணைக் கொடுத்துருக்கோம். கல்யாணத்துக்காக மத்தியானம் சென்னையிலேயிருந்து ரஜினி வந்தாரு. ரஜினி வர்றாருன்னு தெரிஞ்சதும் பெரிய கூட்டம் வந்துடுச்சு. கூட்டத்துல என்னைக் கீழே தள்ளிட்டாங்க. வந்துட்டு ஒரு அஞ்சு நிமிஷம்கூட மண்டபத்துல அவரால நிக்க முடியலை. கொஞ்சம் கஷ்டமாத்தான் இருந்துச்சு. ஜனங்க... ஜனங்க எங்கே பார்த்தாலும் ஜனங்க. ஆனா அவங்களுக்கு இதனால வருத்தமோ சந்தோஷமோ கிடையாது. 'இதெல்லாம் எனக்குப் பழக்கமாயிடுச்சு; உங்களுக்குத்தான் கொஞ்சம் கஷ்டமாயிருக்கும்; அட்ஜெஸ்ட் பண்ணுங்க'ன்னு சொல்வாரு.

**வயசும் ஆயிடுச்சு. அதிகமா நடிக்கிறதும் இல்லை. வெளியேயும் வர்றதில்லை. இருந்தாலும் எப்படியாவது ரஜினியைப் பார்த்துடணும்னு கூட்டம் நிறைய வருதே... அதுக்கு என்ன காரணம்னு நினைக்கிறீங்க?**

எல்லாம் அதிசயம்தான். அவருக்கு தெய்வத்தின் ஆசிர்வாதம் அதிகமா இருக்கு. படமே நடிக்கலேன்னாலும் வீட்டை விட்டு வெளியே வந்தா அவங்களுக்கு ஜனங்க அன்பும் ஆதரவும் எப்போதும் இருக்கும்.

- ஜெ. ராம்கி



"செயலாளரைத் தலைவர் செல்லமா கடிஞ்சுக்கிட்டாராமே?"
"ஆயிரமாவது குட்டிக்கதை சொல்ல வரும் தலைவரே வருக... வருக...ன்னு போஸ்டர் அடிச்சுட்டாராம்!"

- அ. சுகுமார்

**நா**ன் நட்சத்திர அந்தஸ்து பெற்று வளர்ந்து வந்த நேரம். ஒரு பக்கம் 'உழவன் மகன்' சொந்தத் தயாரிப்பு வேலை. இன்னொரு பக்கம் என்னை வித்தியாசமான நடிகனாக அடையாளம் காட்டிய ஆர். சுந்தரராஜன் டைரக்‌ஷனில் 'காலையும் நீயே மாலையும் நீயே' படப்பிடிப்பு.

அன்றைக்கு அண்ணா மேம்பாலத்துக்குக் கீழே அதிகாலை நேரத்தில் சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது. நடராஜ் துப்பாக்கியால் என்னை நோக்கிச் சுடுவதுபோல, ஒரு காட்சி. நடராஜ் சுட்டார். அந்த டம்மி தோட்டா, காரில் பட்டு என் முகத்தில் கண்ணுக்கு மிக அருகில் வந்து விழுந்துவிட்டது. ரத்தம் சொட்டச் சொட்ட அப்படியே மயங்கி விழுந்துவிட்டேன்.

இப்ராஹிம் அலறி அடித்துக் கொண்டு அப்போலோ ஹாஸ்பிடலுக்கு எடுத்துக்கொண்டு போனான். என் முகமெல்லாம் வீங்கிவிட்டது. கண் திறக்க முடியவில்லை. இப்ராஹிம் அழுகை ஓயவேயில்லை. எனக்குச் சிகிச்சை நடந்தது. 'ஒரு மூணு மாசம் ஓய்வு எடுங்க, சரியாயிடும். அதிகம் வெளிச்சம் பார்க்கக் கூடாது. ரிஸ்க் எடுக்காதீங்க. உடம்பு நல்லா தேறணும்'னு டாக்டர் சொல்லிட்டாரு.

'நீ இங்கே இருந்தா ஓய்வு எடுக்க முடியாது; மதுரைக்குப் போய் ஓய்வெடு'னு இப்ராஹிம் என்னை மதுரைக்கு அழைத்துப் போய் ரகசியமாகத் தங்க





விஜயகாந்த் பேசுகிறேன்!

14

வைத்தான். கேட்கிறவர்களுக்கெல்லாம் பெங்களூரில் நான் ஓய்வு எடுக்கறதா சொன்னான்.

நான் மூணு மாதம் ஓய்வு எடுக்கறதுக்குள் சினிமா உலகில் எத்தனையோ வதந்திகள் 'விஜயகாந்துக்கு இரண்டு கண்ணும் போயிடுச்சு. இனி அவரால நடிக்க முடியாது. விஜயகாந்த் கதை அவ்வளவுதான், ஒழிந்தான்' என்றெல்லாம் கதை கட்டிவிட ஆரம்பித்து விட்டார்கள்.



* 'கருப்பு நிலா' படத்தில்...

இதனால 'உழவன்மகன்' படத்துக்கு ஃபைனான்ஸ் கொடுத்தவர்கள் கலவரமாயிட்டாங்க. பத்திரிகையாளர்களை அழைத்து வந்து மறுபடியும் 'உழவன்மகன்' படப்பிடிப்பு நடத்தி மேற்படி வதந்திக்கு முடிவு கட்டினோம்.

இப்படி எத்தனையோ கசப்பான அனுபவங்கள், அந்த நேரத்துல என் படங்கள் சரியாக ஓடாமல் மறுபடியும் ஒரு சரிவு ஏற்பட்டது. அந்தக் கால கட்டத்துல விஜயகாந்த் கண்ணுல பட்டுடக்கூடாதுனு சுத்திக்கிட்டுப் போன எத்தனையோ பேரைத் தெரிஞ்சு வைச்சுருக்கேன், கொஞ்ச நாள் நினைச்சு வருத்தப்பட்டும், அப்புறம் அமைதியா 'காலம் வரும்'னு பொறுத்திருக்கேன், இதுல குறிப்பிட்டு யார் மேலேயும் எனக்கு மனவருத்தம் கிடையாது. இது ஒரு வியாபாரம்னு நினைச்சு செய்றாங்க, அந்தந்த நேரத்துல பாப்புலரா இருக்கிற ஹீரோவைத் தேடறதுல எப்படித் தவறு இருக்க முடியும்.

ஆரம்பத்துல என்னோட நடிக்க மாட்டேன்னு மறுத்த நடிகைங்ககிட்டே நானே இதுபத்தி கேட்டிருக்கேன். 'என்ன சார் நீங்க'னு சிரிச்சுக்கிட்டே சிலபேர் நழுவியிருக்காங்க. 'நான் அப்படிச் சொல்லியிருப்பேனா விஜி'னு சில பேர் குழைஞ்சுருக்காங்க, யார் யார் எப்படின்னு எனக்கு நல்லாத் தெரியும். என் மேல நிஜமான அக்கறை யாருக்கு உண்டுனு தெரியும்.

அதேசமயம் என்னோட நடிக்க மாட்டேன்னு அப்ப சொன்னவங்க என்னைப் பத்தித் தெரியாதவங்க. ஒரு படத்துல என்னோட நடிச்சு முடிச்ச பிறகு இவ்வளவு நல்லா பழகுற மனுஷனைத் தப்பா புரிஞ்சுக்கிட்டோமே, பார்க்கத்தான் ஆள் முரட்டுத்தனமா தெரியுறாரே தவிர, 'ஹி ஈஸ் வெரி நைஸ்'னு சொல்லியிருக்காங்க.

'இதெல்லாம் ஒரு மூஞ்சியா?'னு என்னைத் திருப்பி

# மறப்போம் மன்னிப்போம்!



• 'உழவன் மகன்' படத்தில்...

நான் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகன்னு சொல்லிருக்கேன். அவரோட சேர்ந்து நின்னு ஒரு போட்டோகூட எடுத்துக்க முடியலங்கறது ரொம்ப வருத்தமான விஷயம். எனக்கு அப்படி ஓர் அரிய சந்தர்ப்பம் அமையாமல் போக பல காரணங்கள் உண்டு.

'பனைமரத்துக்குக் கீழே நின்னு எது குடிச்சாலும் கள்ளு'ன்னுதானே சொல்வாங்க. எம்.ஜி.ஆர் ஆட்சியில் இருக்கும்போது எதிர்கட்சித் தலைவரான கலைஞரை எந்தத் திரைப்பட நட்சத்திரமும் சந்திக்கத் தயங்கிய சமயத்தில், 'வேங்கையின் மைந்தன்' வெற்றி விழாவில் கலைஞர் கையால் நான் ஷீல்டு வாங்கினேன். அது, என்னை தி.மு.கக்காரனாக அடையாளப் படுத்திவிட்டது.

அப்புறம் தமிழுக்காகக் குரல் கொடுத்ததும், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்ததும், தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவித்து ஊர்வலமாகப் போய் மனு கொடுத்ததும் சேர்ந்து என்மேல் தமிழ் வெறியன் முத்திரை குத்தப்பட்டது. இப்படி பல சூழ்நிலைகளால் என்னால் எம்.ஜி.ஆர் பக்கம் போக முடியாமல் போனது.

நடிகர் திலகம் சிவாஜி கூட ஒருமுறை கூப்பிட்டு 'என்னடா தமிழ் தமிழ்னு சொல்லிட்டு சுத்துறே? தமிழ் பத்தி பேசுறவங்க பேரன் பேத்திகள் எல்லா மொழியும் படிச்சுட்டு சௌகரியமா இருக்காங்க. இப்படி எல்லாம் பேசிட்டு இருக்காதே. உம்புள்ளைங்களை எல்லா மொழியையும் நல்லா படிக்க வை'ன்னு கண்டிச்சார்.

திருப்பூர் மணிமாறன், தர்மலிங்கம் மாஸ்டர், டைரக்டர் கே. சங்கர் போன்ற நண்பர்கள் என்னை மக்கள் திலகத்திடம் அழைத்துப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் சூழ்நிலைதான் சரியாக அமையவில்லை.

அவரது ஆட்சியின்போதுதான் எனக்கு 'கலைமாமணி' விருது

அனுப்பியவர்கள், எனது நிறத்தைக் கேலி பேசியவர்கள், என்னுடன் நடிக்க மறுத்தவர்கள், எல்லா நினைவுகளும் என் நெஞ்சுல இருக்கவே செய்கிறது. நான் படத்துலதான் பழிக்குப் பழி வாங்குவேன், நிஜ வாழ்வில் கிடையாது. என்னால பலர் வாழ்ந்ததாகச் சொல்லணுமே தவிர யாரும் அழிந்ததாகச் சொல்லக் கூடாது. பேரறிஞர் அண்ணா சொன்ன 'மறப்போம் மன்னிப்போம்' என்பதே என் பாலிஸி.

அறிவிக்கப்பட்டது. அவர் கையால் விருது பெற்று விடுவது என்று ரொம்ப எதிர்பார்ப்பும், சந்தோஷமுமாக இருந்தேன். ஆனால் விதி அங்கேயும் எனக்குச் சதி செய்துவிட்டது. தலைவருக்கு உடல்நலம் இல்லாமல் போனதால் நாவலர் நெடுஞ்செழியன் கலைமாமணி விருது வழங்கினார்.

புரட்சித் தலைவருக்கு என் படங்களில் 'உழவன் மகன்', 'சட்டம் ஒரு விளையாட்டு' ரொம்பப் பிடிக்கும் என்றும், 'அந்தத் தம்பி என்னைப் போலவே பண்ணியிருக்கான்' என்று தலைவர் புகழ்ந்து பேசியதையும் ஜானகியம்மா சொன்னபோது ரொம்பப் பெருமையாக இருந்தது. தலைவரிடம் பாராட்டு பெற்ற சந்தோஷம்.

தமிழக அரசு சார்பாக, கலைஞர் எனக்கு எம்.ஜி.ஆர் விருது வழங்கிய போதும் இன்னும் கூடுதல் பெருமையாக இருந்தது.

**பு**ரட்சித் தலைவருடன் பழகும், அவரது அன்பைப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டாவிட்டாலும் அவரது துணைவியார் ஜானகியம்மாள் ஒரு தாயைப் போல பாசத்துடன் பழகினார். அவரது அன்பும் வாழ்த்தும் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் நிறையவே கிடைத்தது.

'யார் யாரோ தோட்டத்துக்கு வந்தார்கள். அவர் மேல் இவ்வளவு பாசம் கொண்ட நீ ஏம்பா தலைவரை வந்து பார்க்கலே'ன்னு கேட்டாங்க.

'கருப்பு நிலா' படத்தின் ஷூட்டிங் எம்.ஜி.ஆர் காது கேளாதோர் பள்ளியில் நடத்த அனுமதி கொடுத்தாங்க. அவங்க கையாலே சாப்பாடு போட்டாங்க. அந்த அன்புத்தாய், அதே பாசத்தோடுதான் மக்கள் திலகம் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்திய பிரசார வேனை அன்பளிப்பாக எனக்குக் கொடுத்தார். இன்னும் புரட்சித் தலைவரின் நினைவாக பல பரிசுப் பொருள்களைக் கொடுத்தார்.

'எல்லாரும் தலைவர்கிட்டே வாங்கிட்டுத்தான் போயிருக்காங்க. நீ ஒருத்தன்தான் தலைவர் பேர்ல உள்ள பள்ளிக்கு வருஷா வருஷம் ஐம்பதாயிரம் கொடுக்குறே'ன்னு அவங்க பாராட்டியது மறக்க முடியாதது.

அவர் உயிரோடு இருக்கிறவரை அந்த வேன் பற்றி வாய்மூடி இருந்தவர்கள் இப்போ சம்பந்தமே இல்லாமல் குதிக்கிறாங்க. அது ஏன்?

(சொல்றேன்)

படங்கள் உதவி: **சஜோ**

---

# விஜயகாந்த் பற்றி வி.ஐ.பி!

**வி**ஜயகாந்த் இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதர். முன்பு கடையேழு வள்ளல்கள் இருந்ததாகச் சரித்திரத்தில் படித்து இருக்கிறோம். இப்போது எட்டாவது வள்ளலாக இவரைக் காண்கிறோம்.


எனது கதைகளில் வரும் துப்பறியும் கதாநாயகன் 'விவேக்' கதாபாத்திரம் விஜயகாந்தை மனத்தில் வைத்து உருவாக்கப்பட்டதுதான்.

விஜயகாந்த் நல்ல மனிதர். இவரைப் போன்ற நல்லவர்கள் அரசியலுக்கு வருவது நல்லது.

- ராஜேஷ்குமார்



# அட்டகாசமான புதிய பகுதிகள் ஆரம்பம்!



## வைரமணி எஸ்டேட்

–புதிய தொடர்கதை

## சூப்பர் ஸ்டார்



–விளையாட்டு வீரர்களைப் பற்றிய தொடர்

## வியப்பூட்டும் ஸ்பைடர்மேன்!

–புதிய சித்திரத் தொடர்கதை

## விண்வெளிக் கதைகள்

## இசைக் கருவிகளும் இனிய கதைகளும்

## புஜ்ஜி


குழந்தைகளின் குதூகலம்!

ரூ.6/- **கோகுலம்** பிப்ரவரி 2006

# பிரியங்கா பிரசாரத்துக்கு வருவாரா?

நீங்கள் கேட்டவை

-தராசு



* பழசும்...



* ... புதுசும்!

● என்.சண்முகம், திருவண்ணாமலை

? "அமைச்சர்கள் எல்லோரும் முதல்வர் ஜெயலலிதாவுக்குக் காவல் தெய்வங்களாக இருந்து செயல்படுவார்கள்" என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியிருப்பது குறித்து?

! அமைச்சர்கள் காவல் தெய்வங்கள் எனில் ஜெ. முழுமுதற் கடவுளா? அப்படியென்றால் முப்பது லட்சம் செலவில் கபாலீசுவரர் கோயிலில் யாகம் எதற்கு?

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்ட முயற்சி செய்வது பற்றி?

! 'அப்படியொரு யோசனையோ திட்டமோ இன்னும் தோன்றவே இல்லையே!' என்று ஆந்திர அரசு மறுக்கிற வேகத்தைப் பார்க்கிறபோதே சந்தேகம் ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் தமிழக அரசு விழிப்புடன் இருக்க வேண்டும்.

● த.சத்தியநாராயணன், சென்னை-38

? நுழைவுத் தேர்வு முறையை ஜெ. அரசு ரத்து செய்தது சாதனையா?

! இப்படியெல்லாம் உயர்கல்வித் துறையில் குழப்படி தர்பார் நடத்தி, தரத்தைக் குறைத்துக் குட்டிச்சுவராக்குவதைவிட பள்ளிப்படிப்பை முடிக்கின்ற ஒவ்வொருவருக்கும் அவரவர் விருப்பப்படும் துறையில் ஒரு பட்டதாரி சான்றிதழைக் கையில் வழங்கிவிட்டால் வேலை சுலபமாகிவிடும் எல்லாருக்கும் திருப்தி.

● எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி ☐

? ஒரு புறம் உணவு தானிய விளைபொருள்களுக்கு அதிக விலை கேட்டுப் போராட்டம்; மறுபுறம் உணவுப் பொருள்களின் விற்பனை விலை



* ஆந்திராவில் ஆரம்பம்!

**களை ஏற்ற கடும் எதிர்ப்பு... இது எப்படி சாத்தியம்?**

! விவசாயிகளுக்கு அதிக விலை தந்து கொள்முதல் செய்ய மக்கள் வரிப்பணம் தான் பயனாகிறது. உணவுப் பொருள்களின் விற்பனை விலையைக் குறைத்து நிர்ணயித்து மானியங்கள் வழங்கவும் மக்களின் வரிப்பணம்தான் பயனாகிறது. எப்படிப் பார்த்தாலும் மறைமுக, நேர்முக வரிகள் செலுத்தும் மக்கள்தான் கடைசியில் வரி உயர்வால் பாதிக்கப்படுவார்கள். பொருளாதார உண்மை. ஆனால் மக்கள் புரிந்து கொள்வதில்லை.

**● வி.ஷியாம், கும்பகோணம் ★**

**? பார்லிமெண்ட் விதித்த தண்டனையில் நீதித் துறை தலையிடக்கூடாது என சபாநாயகர் கூறியுள்ளது பற்றி?**

! அதைப் பொருட்படுத்தாமல் உச்ச நீதிமன்றம் நாடாளுமன்றத்திடம் விளக்கம் கேட்டிருக்கிறது. நீக்கப்பட்ட எம்.பி.க்களில் ஒருவர் தொடுத்த வழக்கை விசாரித்து, அரசியல் சாசன ரீதியான தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதால் 'பெஞ்ச' அமைத்திருக்கிறது. நீதிமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையே மற்றுமொரு மோதல் என்றாலும், இதன் விளைவாக அரசியல் சாசன ரீதியான சிக்கல் இருக்குமானால், அதனைச் சீராக்க தீர்ப்பு உதவும்.

**● வி.என்.கோபால், சென்னை - 91**

**? பா.ம.க.விலிருந்து ஒவ்வொரு எம்.எல்.ஏ.வாக அ.தி.மு.க.வுக்குத் தாவுகிறார்கள். இந்நிலையில் (கூட்டணியில்) அதிக தொகுதிகளை பா.ம.க. வுக்கு வழங்குவது என்பது அ.தி.மு.க.வுக்குத்தானே சாதகமாக அமையும்?**

! கட்சித்தாவல் நடைபெறுவதும் அதற்கு பா.ம.க. தரப்பில் ஏதேதோ சால்ஜாப்பு கூறப்படுவதும் பா.ம.க.வின் இமேஜை பாதிப்பதுடன் கூட்டணியில் அந்தக் கட்சிக்கு ஒதுக்கப்படக் கூடிய தொகுதிகளின் எண்ணிக்கையையும் பாதிக்கும். அதிக தொகுதி கோரி வாதாடும் தார்மீக உரிமையை பா.ம.க. தலைவர் இழப்பார்.

**● எம்.சிவகுருநாதன், தஞ்சை**

**? தி.மு.க. செயல்வீரர் கூட்டத்தில் (புதுக்கோட்டை மா.வ) பேசிய மு.க. ஸ்டாலின், "நெற்றியில் திருநீறு பூசிக் கொள்வதோ குங்குமத் திலகம் இட்டுக் கொள்வதோ தி.மு.க. கொள்கைக்கு முரணானது" என்று தெரிவித்துள்ளது குறித்து...?**

! தி.மு.க. கொள்கைக்கு முரணானது என்று தானே சொன்னார். தி.மு.க. அரசியலுக்கு விரோதம் என்று சொல்லவில்லையே! கெட்டிக்காரர்தான்! தலைவர்கள் சொல்வதைச் சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள்; தொண்டர்கள் மத்தியில் நடப்பது நடந்து கொண்டுதான் இருக்கும்.



★ கெட்டிக்காரப் பேச்சு!

**● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி**

**? மத்திய அரசின் புதிய சட்ட மசோதா வலிமை இல்லாதது என்றும் கலவரங்களைத் தடுக்க பொடா சட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்றும் தமிழக அரசு கூறியிருக்கிறதே?**

! பொடா கடுமையானது என்பதைக் காட்டிலும் துஷ்பிரயோகத்துக்கு இடங்கொடுத்ததே அதன் ரத்துக்குக் காரணம் ஆயிற்று. தமிழக அரசும் இதற்கு விதிவிலக்கில்லை.

**ரூ.100 பரிசு பெறுபவர் :**
**எஸ்.கருணையானந்தம்,**
**கார்த்தி ஸ்டோர்,**
**முருகன் கோயில் தெரு,**
**உசிலம்பட்டி, 625532**



* தலைமைக் காவல்!

● கே.வி.ராமன், சென்னை - 73

**? ஹஜ் யாத்ரீகர்கள் 345 பேர் சவுதி அரேபியாவில் மினா என்ற இடத்தில் நெரிசலில் மரணமடைந்ததும் காயமுற்றதும் கோர சம்பவம் அல்லவா?**

! கடந்த கால அனுபவங்களினாலும் பாடம் கற்கவில்லை என்பது சோகத்தை அதிகரிக்கிறது. மக்கள் ஒரே சமயத்தில் நடந்து வர, பல நிலைகள் உள்ள பாதைகள் அமைப்பது; கடந்த ஐந்தாண்டுகளுக்குள் ஹஜ் யாத்திரை சென்றவர்கள் மீண்டும் அங்கே செல்லத் தடை விதிப்பது போன்றவை விபத்துகளைத் தவிர்க்க உதவும்.



* பீஹார் ரீப்ளே!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

**? தமிழக சட்டசபை தேர்தலுக்கு ப்ரியங்கா பிரசாரம் பண்ண வாய்ப்பு உண்டா?**

! ஹைதராபாத்தில் நடக்கவுள்ள காங்கிரஸ் மாநாட்டுக்கு அவர் செல்ல இருப்பது உறுதியாகியுள்ள நிலை, அவர் கட்சிப் பணிகளில் மேலும் தீவிரமாக இறங்க உத்தேசித்துள்ளதைத் தெரிவிக்கிறது. வாசனுடன் கலைஞரும் சேர்ந்து அழைத்தால் தமிழகத்துக்குத் தேர்தல் பிரசாரத்துக்கு வராமலா இருந்துவிடுவார்.

● எஸ்.முராரி, குறிஞ்சிப்பாடி

**? மஹாராஷ்டிர மாநிலத்தில், மூட நம்பிக்கைகளைப் பரப்புவதைத் தடை செய்யவும், பரப்புவோரைத் தண்டிக்கவும் என ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே?**

! ஒரு மூட நம்பிக்கையின் அடிப்படையில்தான் இத்தகைய சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மூட நம்பிக்கை என்பது முற்றிலும் மனம் சார்ந்தது. அதனைச் சட்டத்தைக் கொண்டு சீர் செய்ய முடியாது. பகுத்தறிவு, பண்பாடு - இவற்றை உள்ளடக்கிய கல்வி, மக்களுக்குக் கிடைக்கச் செய்தால் நாளடைவில் மூட நம்பிக்கைகள் தன்னால் குறைந்து மறையும்.

● வாசுதேவன், நவி மும்பை

**? ரிக்கி பாண்டிங்?**

! நூறாவது டெஸ்ட் - இரண்டு இன்னிங்ஸிலும் நூறு ரன்கள் என்பது அபார சாதனைதான். ஆனால் இப்பொழுது பழைய கதையாகிவிட்டது. லாஹூரில் வீரேந்திர சேவாக் பாகிஸ்தான் தலைமீது ஏறி ஆடியதே லேட்டஸ்ட். ஆட்டத்தை முழுசாக தூர்தர்ஷனில் பார்க்க முடியாமல் போனதுதான் வருத்தம்.

● ஆர்.கர்ணன், இனக்கர்குளம்

**? தலைமை தேர்தல் ஆணையர் டாண்டன் பற்றி தராசின் கருத்து?**

! டாண் டாண் என்று தமிழகம் வந்தார். 'டாண் டாண்' என்று கூட்டங்கள் நடத்தினார். 'டாண் டாண்' என்று பல உத்தரவுகள் பிறப்பித்தார். டாண்டன்! பீஹாரில் அவர் நடத்திய தேர்தல் சமய அதிரடி தர்பார் இங்கும் நடக்கும் என்று நம்பிக்கை பிறக்கிறது. தமிழக அரசியல்வாதிகளே உஷார்! ●

**ரூ.50 பரிசு பெறுபவர் :**
**வி.ஷியாம்,**
**1/12, சௌடாம்பிகை நகர்,**
**கும்பகோணம் - 612 001**

# ஆனை... அடி... அவசர சிகிச்சை!



* ரவிச்சந்திரன்



* விக்ரம் முரளிதரன்

**காலை 5 மணி - ஆனைமலை காட்டுப் பகுதி, பொள்ளாச்சி**

மழை பெய்து ஓய்ந்திருந்தது. வெளியே விடிந்து விட்டாலும், அந்தக் காட்டுப் பகுதி இருண்டே கிடந்தது. காய்ந்து கிடந்த ஒரு மரக்கிளையை வெட்ட ஆரம்பித்தான் குஞ்சிராமன். இரண்டு வெட்டு கூட விழுந்திருக்காது. பின்னால் ஏதோ சத்தம். திரும்பிப் பார்த்தால்... பெரிய காட்டு ஆனை! 'அய்யோ!' என்ற அலறக்கூட அவகாசமில்லை. 'பளார்!' மண்டையில் ஒரு அடி... இடிபோல இறங்குகிறது. ஆறடிக்குப் பறந்து முள் புதருக்குள் விழுந்து மயங்குகிறான் குஞ்சிராமன்.

**காலை பத்து மணி - ஆனைமலை டி.டி. நாயர் மருத்துவமனை**

டியூட்டியில் இருக்கிறார் டாக்டர் விக்ரம் முரளிதரன். "டாக்டரய்யா.. காட்டு யானை அடிச்சுப் போட்டுருச்சய்யா!" என்று கூட்டமாக அலறியடித்துக் கொண்டு ஓடி வருகிறார்கள் காட்டுவாசிகள். சுய நினைவின்றிக் கிடந்த குஞ்சிராமனைப் பார்த்ததும், டாக்டர் விக்ரம் அதிர்ச்சியடைகிறார். தலைப்பகுதி பெரிய பூசணிக்காய் அளவு கோரமாக வீங்கியிருக்க, இடது கண் பிதுங்கி வெளியே வந்திருந்தது.

"ஏம்பா... அஞ்சு மணிக்கு ஆனை அடிச்சிருக்கு. பத்து மணிக்குக் கொண்டு வந்திருக்கீங்களே! உடனே சிகிச்சை தரலைன்னா, கண் பார்வை போயிடும்பா. நாங்க கோயமுத்தூர் கே.ஜி. ஹாஸ்பிடலுக்குத் தகவல் கொடுத்திடறோம். உடனே கோயமுத்தூர் கொண்டு போங்க" என்று சொல்லிவிட்டு, முதல் கட்ட மருத்துவ உதவிகளைச் செய்ய ஆரம்பிக்கிறார் டாக்டர் விக்ரம்.

**காலை பத்து மணி, பத்து நிமிடம்... ஸ்பேஸ் ஹாஸ்பிடல்ஸ், சென்னை**

டெலிமெடிஸின் வசதி கொண்ட தங்களுடைய நெட்வர்க் ஸ்டுடியோவில் இருக்கிறார் டாக்டர் ரவிச்சந்திரன். அவருடன் ஓய்வுபெற்ற கர்னல். ஈ பத்மநாபனும், ஹைதராபாத் எல்.வி. பிரசாத் கண் மருத்துவமனையின் பிரபல கண் டாக்டர் கன்ஷியாமும் கான்ஃபரன்ஸிங்கில் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனாக உயிர் கொடுக்க, தற்செயலாக ஒரு கிளிக்கில் ஆனைமலை டி.டி. நாயர் மருத்துவமனைக்கு நெட்வர்க் இணைப்புக் கிடைக்கிறது. பரஸ்பர விசாரிப்புக்குப் பிறகு, "டாக்டர் ரவி... காட்டு ஆனையால் தாக்கப்பட்ட ஒரு ட்ரைபல் கேஸ் வந்திருக்கிறது. இப்போது அவரது முகத்தை நோக்கி கேமராவை திருப்பப் போகிறேன். பயந்துடாதீங்க!" என்று எச்சரித்து விட்டு குஞ்சிராமனின் முகத்தை குளோஸ்-அப்பில் காட்டுகிறார்.

'கண் மருத்துவ நிபுணர் ஒருவர், உடனடியாக சிகிச்சை தராவிட்டால், பார்வை பிழைப்பது அரிது' என்று டாக்டர் விக்ரம் வருத்தப்படவும், "கவலைப் படாதீங்க டாக்டர்... தெய்வாதீனமாக என் அருகிலேயே எல்.வி. பிரசாத் கண் மருத்துவமனையின் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் கன்ஷியாம் இருக்கிறார். அவர் உங்களுக்கு 'கைட்' செய்வார்" என்று டாக்டர் ரவிச்சந்திரன் 'மைக்'கை டாக்டர் கன்ஷியாமிடம் கொடுத்திருக்கிறார்.

மறுநிமிடமே, டாக்டர் கன்ஷியாம் சொல்லச் சொல்ல, டாக்டர் விக்ரம் முரளீதரன், குஞ்சிராமனுக்கு சிகிச்சை அளிக்கிறார். லோக்கல் அனஸ்தீஷியா

தரப்படுகிறது. மண்டையிலும், கண்ணுக்கு உள்புறமாகவும் கசிந்து உறைந்திருக்கும் ரத்தத்தையும், நீரையும் ஊசி மூலம் வெளியேற்றுகிறார். "இன்னும் கொஞ்சம் மேலே... ரைட்! அதே இடத்தில்தான்.. மெள்ள அழுத்துங்கள். அங்கே ஊசி போட்டு உறிஞ்சுங்க" என்று டீ.வி. ஸ்க்ரீனைப் பார்த்தபடியே சென்னையிலிருந்து அறிவுறுத்த, கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடங்கள் ஆனைமலையில் சிகிச்சை நடக்கிறது. அபாயக் கட்டத்தைத் தாண்டுகிறான் குஞ்சிராமன். தரப்பட வேண்டிய மருந்து, மாத்திரைகளைப் பற்றி கலந்தாலோசிக்கிறார்கள். தீவிர கண்காணிப்புப் பிரிவுக்கு மாற்றப்படுகிறான் குஞ்சிராமன். அன்று மாலையிலிருந்தே, ஆனைமலையிலிருக்கும் நோயாளியை ஹைதராபாத்திலிருந்து டாக்டர் கன்ஷியாம், சென்னையிலிருந்து டாக்டர் ரவிச்சந்திரனும் தீவிரமாகக் கண்காணிக்க... சில வாரங்களுக்குப் பிறகு குணமாகி வீட்டுக்குத் திரும்புகிறான் குஞ்சிராமன்.



"மண்டையில் 'ஹெமடோமா' ஏற்பட்டு, கண் பார்வை பறிபோகும் அபாய நிலையில் இருந்தான் குஞ்சிராமன். ஆனைமலையிலிருந்து, கோவை போவதற்குள் அவனது பார்வை பறிபோகவோ, வலிப்பு, பக்கவாதம் வரவோ வாய்ப்பிருந்தது. ஆனால் எங்களுடைய டெலிமெடிஸின் நெட்வர்க் மூலம், சரியான நேரத்தில், சரியான நிபுணர் கொண்டு, மிகச் சரியான சிகிச்சை முறை பரிந்துரைக்கப்பட்டதில், உயிரும் பிழைத்து, பார்வையும் காப்பற்றப்பட்டது. குஞ்சிராமன் அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டது தெரிந்ததும், டாக்டர் விக்ரமும் டாக்டர் கன்ஷியாமும் பகிர்ந்து கொண்ட மகிழ்ச்சி இருக்கிறதே. அப்பப்பா... எல்லா பாராட்டும், நிலைமையை உணர்ந்து மின்னல் வேகத்தில் செயல்பட்ட இரண்டு டாக்டர்களுக்கும், டெலிமெடிஸின் தொழில் நுட்பத்துக்கும்தான். இந்த குஞ்சிராமனுக்கு கேமிரா மிகப் பெரிய உதவி செய்தது. அதுபோல, நோயாளிகளின் மருத்துவக் குறிப்புகளை உடனுக்குடன் நிபுணரிடம் சேர்ப்பித்து ஆலோசனை பெறும் வசதி டெலிமெடிஸினில் மட்டுமே உள்ளது நாளைய மருத்துவம் டெலிமெடிஸினின் கையில்" என்கிறார் டாக்டர் ரவிச்சந்திரன்.

- மினி

# கொத்துக் கொத்தாகக்

உலகை உலுக்கிய குற்றங்கள்! 2

லாஸ் ஏன்ஜலீஸ். பெண்களுக்கான பிரத்யேக சிறைக்கூடத்துக்கு சூசன் அட்கின்ஸ் எனும் பெண்மணி கொண்டு வரப்பட்டாள். அவள்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. சர்வ சாதாரணமாக ஏதோ தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதுபோல் சிறைக்குள் நுழைந்த சூசன், அங்குள்ள பிற கைதிகளிடம் தன்னை மகிழ்ச்சியுடன் அறிமுகப்படுத்திக் கொண்டாள். ஒவ்வொருவரிடமும் கைக்குலுக்கல் வேறு. அதிகாரிகளுக்கு ஆச்சரியம். மரணம் உறுதி என்கிற நிலையில் இவளால் எப்படி இத்தனை அமைதியாக இருக்க முடிகிறது? சூசனின் மீது முதல் சந்தேகப் புள்ளி விழுந்தது அப்பொழுது தான்.



சூசன் மீண்டும் விசாரிக்கப்பட்டாள்.

"நீங்கள் ஒரு கொலைக் குற்றவாளி என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ தெரியுமே"

ஏனோ ஷேரான் டாடே மற்றும் தொடர் கொலைகள் பற்றியும் இவளிடம் கேட்க வேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தோன்றியது. (உள்ளுணர்வு, பட்சி இரண்டில் ஏதோ ஒன்றாக இருக்கக் கூடும்)

"அது சரி, சமீபத்தில் தொடர்ச்சியாக பல கொலைகள் நடைபெற்றது உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ தெரியுமே"

"அந்தக் கொலைகளை யார் செய்தது என்று தெரியுமா?"

ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் சூசன் தனது கைகளைச் சுழற்றியபடி கூறினாள்.

"ஓ தெரியுமே?"

அதிர்ந்து போய் பின்வாங்கினர் அதிகாரிகள்.


"யா... யார் செய்தது?"

"நான்தான்"

சொல்லிவிட்டு கலகலவெனச் சிரித்தாள் சூசன். இவளுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? தனது குரலை உயர்த்தினார் அந்த அதிகாரி.

"சூசன் நீ விளையாடுகிறாயா?".

தலையைப் பலமாக ஆட்டினாள் சூசன். "அட நான்தான் அவர்களைக் கொன்றேன்"



# கொலைகள்!

"ஏன்?"

"கடவுள் சொன்னார்"

"யார் அந்தக் கடவுள்?"

"சார்லஸ் மான்சன்"



* சார்லஸ் மான்சன்

அலறியடித்து சார்லஸ் மான்சனைக் கண்டுபிடித்து இழுத்து வந்தனர். சூசனைப் போல மந்தகாச புன்னகையைச் சிந்தியபடி கைகளை உயர்த்தி நீதிபதி, காவல்துறை அதிகாரிகள் உட்பட அனைவரையும் தனித்தனியே வாழ்த்தியபடி வந்து சேர்ந்தார் சார்லஸ். சாமியார் மாதிரி நீண்ட தாடி. வசீகரிக்கும் புன்னகை. நெற்றியில் 'X' என்று கீறியிருந்தது. ஒரு சிறு பூச்சியைக் கூட நசுக்க மாட்டார். அதாவது தன் கையால் நசுக்கமாட்டார். இவருக்கு நிறைய விசுவாசமான பக்தர்கள் இருந்தனர். சூசனைப் போல. அதோ அவர்தான் என்று இவர் கையை நீட்டினால் சம்பந்தப்பட்ட நபரின் தலையோடு திரும்பி வருவார்கள். (ஷேரான் டாடேவின் வயிற்றிலிருந்த கருவை எடுத்து வந்து ஒரு டவலால் சுத்தி அதை மான்சனுக்குப் பரிசாக அளிக்கவேண்டும் என்று சூசன் விரும்பினாராம்).

"உனது பெயர்?"

"இயேசுநாதர்" தாடியைத் தடவியபடியே பதில் சொன்னார் சார்லஸ்.

"ஏன் இத்தனை கொலைகள்?"

"கொலைகளா? தவறு அன்பரே. நான் யாரையும் கொல்வதில்லை. இறைவன் அளித்த கட்டளையை நிறைவேற்றுகிறேன்."

சார்லஸின் பைத்தியக்காரத்தனமான இந்தக் கற்பனையின் விளைவுதான் இத்தனை கொலைகள். (இவர் ஏன் குறிப்பிட்ட நபர்களைக் கொல்லச் சொல்கிறார் என்று யாருக்குமே தெரியாது). இவரது இயக்கத்தின் பெயர்தான் 'ஹெல்ட்டர் ஸ்கெல்டர்'. (பீட்டில்ஸ் பாடலின் வரியிலிருந்து சுட்டிருக்கிறார்கள். மான்சனுக்கு இசை ரொம்பப் பிடிக்குமாம். தேவைதான்).

குண்டுக்கட்டாக தூக்கிப்போய் நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். 'காச்மூச்' என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார் மான்சன். 'உன் தலை உருளும்' என்று நீதிபதியைப் பார்த்துச் சாபமிட்டார். அவர் தலை உருளவில்லை. மான்சனின் தலை தான் உருண்டது. சூசன் அட்கின்ஸுக்கு மரண தண்டனை அளிக்க முடியாமல் போனதற்குக் காரணம் அவரது பழுதடைந்த மூளை. ஷேரானுக்கு அடுத்து எலிஸபெத் டெய்லரின் தலையைக் கொய்யும் புனிதப் பணி இவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்ததாம். அதை நிறைவேற்ற முடியாமல் போனதில் இவருக்கு ஏக வருத்தம்.

(தொடரும்)

-மருதன்

# ஓடுகிறார் மந்திரா!

பத்து வருடங்களுக்கு முன்பு வெளியான ஹிந்திப் படம் - தில்வாலே துல்ஹனியே லே ஜாயங்கே. அந்தப் படத்தில் மந்திரா பேடியும் நடித்திருந்தார். ஆனால் அப்பொழுது அவரை யாரும் சட்டை செய்யவில்லை. தொடர்ந்து மும்பையிலுள்ள ஒரு திரையரங்கில் பத்துவருடங்களாக ஓடும் இப்படத்திற்கான தற்போதைய விளம்பர வாசகம் என்ன தெரியுமா? ஷாருக்கான், கஜோல், மந்திரா பேடி நடித்த...

மும்பை திரையுலகத்தால் முன்னொரு காலத்தில் ஓரங்கட்டப் பட்டவர்தான் மந்திரா பேடி. சோனி செட்மாக்ஸ் சேனலுக்காக கிரிக்கெட் வர்ணனை கொடுக்கப் போய் உட்கார்ந்த இடத்திலேயே சச்சின் டெண்டுல்கருக்கு இணையான புகழைப் பெற்ற இந்த ஸ்வீட் 30+, இன்று விரல் சொடுக்கில் பாலிவுட்டையும் ஹிந்தி சேனல்களையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கிறார். பாலிவுட்டில் இவரது அடுத்த ரிலீஸான 'மராத்தான்' மார்ச்சில் ரிலீஸ். இப்பொழுதே இதன் விளம்பரங்கள் 'சிவாஜி' ரேஞ்சுக்கு தூள் பரத்துகிறது.



42 கி.மீ. தூரம் கடக்கும் 'மராத்தான்' ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பப்படும் வெவ்வேறு குடும்ப

# குட்டி சச்சின்!



இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் காதில் இன்னொரு தேன் செய்தி... புதிய சச்சின் இந்திய அணிக்காக, தயாராகிக் கொண்டிருக்கிறார்... அதுவும் சச்சினின் மும்பை மண்ணில்... பெயர் ராகுல் டொண்டுல்கர். அப்படி என்ன செய்துவிட்டார் இந்த டொண்டுல்கர்?

மும்பையில் இருக்கும் பள்ளிகளுக்கு இடையே 'ஹாரிஸ் ஷீல்டு' கிரிக்கெட் போட்டி ஏகப் பிரபலம். சுனில் கவாஸ்கர், சஞ்சய் மஞ்ச்ரேக்கர், சச்சின் டெண்டுல்கர், வினோத் காம்ப்ளி, ரவிசாஸ்திரி உள்ளிட்டோர் இந்தப் போட்டிகளில் விளையாடி விட்டுத்தான் இந்திய அணிக்கே தேர்வாகினர். இந்த ஆண்டுக்கான போட்டி ஜனவரி முதல் வாரத்தில் நடைபெற்றது.

குயே குருஜி பள்ளியின் சார்பாகக் களமிறங்கினான் ராகுல் டொண்டுல்கர்... வந்த நொடியிலிருந்தே இவனது பேட் ரன் மெஷினாக மாறிவிட்டது போன்ற அதிசயம். நாலா பக்கமும் பந்துகள் சீறிப் பாய்ந்தன... ஆட்டமிழக்காமல் 357 ரன்களைக் குவித்திருந்தான் ராகுல்... அதில் 49 பவுண்டரிகள்... 8 சிக்

அமைப்பிலுள்ள ஐந்து பேர் அதற்காகச் சந்திக்கும் சவால்களே 'மராத்தான்' படத்தின் ஒருவரிக் கதை. (தமிழில் இப்படியெல்லாம் சிந்திக்க வலுவுண்டா?) இதில் மந்திரா ஒன்றும் ஜிலுஜிலு உடை அணிந்து 'மராத்தான்' போட்டியை வர்ணனை செய்யும் வேடம் புனையவில்லை. ''நான் குடும்பப் பெண்ணாக நடிக்கிறேன். ஒருநாள் திடீரென்று ஞானோதயம் தோன்றி, என் இஷ்டப்படி வாழ நினைப்பேன். போட்டியில கலந்துக்க முயற்சிப்பேன். பிரச்னை வரும். போதும். போதும். இதுக்கு மேல கதை சொன்னா நான் போட்டியில கலந்துக்க முடியாது'' என்கிறார். சாதாரணமாகப் பேசும்பொழுதுகூட புன்னகை செய்வது போலவே இருக்கிறது.

நிஜ வாழ்க்கையில் எப்படி? 'எனக்கு நூறு சிறகுகள். ஏதோ தன் மகள்போல என்னை உயர்த்திப் பார்ப்பதில் என் கணவருக்கு அவ்வளவு இஷ்டம். திருமணத்துக்கு முன்பு 'என் பெயருக்கு பின்னாலுள்ள பேடியை நீக்க மாட்டேன், மாடலிங்கை கைவிட மாட்டேன்' என பல மாட்டேன்களை அடுக்கினேன். சமர்த்தாக தலையாட்டினார். என் நிஜ வாழ்க்கையில் மராத்தானுக்கெல்லாம் அவசியமே இல்லை'' என்கிறார் கொடுத்து வைத்த மந்திரா பேடி.

**- சநகன்**

# இளமை கல்கி

ஸர்கள்.


அப்போது தான் அவனுக்குத் தெரிந்தது கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரையே தான் விஞ்சி விட்டோம் என்று... ஆம் இதே ஹாரிஸ் ஷீல்டு போட்டியில்தான் 1988-ல் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 326 ரன்களைக் குவித்த தோடு, வினோத் காம்ப்ளியுடன் இணைந்து 664 ரன்களைக் குவித்து உலக சாதனை படைத்திருந்தார். இந்தச் சாதனையைச் செய்த ராகுல் டொண்டுல்கருக்கு வயது வெறும் பதினைந்துதான்.

''ஓர் இளைஞன் இப்படி அற்புதமாக ஆடுவது இந்தியாவுக்கு நல்ல அறிகுறிதான். இருந்தாலும் அவன் இன்னமும் பள்ளிச் சிறுவன்தான். இன்னும் அவன் நிறைய வளர வேண்டியிருக்கிறது. அதற்குள் அவன் மீது அதிக பாரத்தை ஏற்றக் கூடாது. அவன் போக்கில் அவனை விளையாட விடுங்கள்'' என்று எச்சரிக்கை மணி அடிக்கிறார் மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின். சீக்கிரம் வாங்க, ராகுல் டொண்டுல்கர்... இந்திய அணிக்குள்ள உங்களுக்கு இப்பவே சிவப்புக் கம்பளம் விரிச்சாச்சு!

**- முத்து**




# அப் அப் அபர்ணா!





இந்தியாவில் டென்னிஸுக்கு சானியா மிர்சா என்றால் பாட்மின்டனுக்கு அபர்ணாவைத் தவிர வேறு சாய்ஸே இல்லை. இறகுப் பந்தில் இவர் படைத்து வரும் சர்வதேச, தேசிய சாதனைகளால் இவரது தொப்பியில் இறகுகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. சமீபத்திய சாதனை, தொடர்ந்து ஒன்பதாவது முறையாக பாட்மின்டன் தேசிய சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். 1998 முதல் அந்தப் பட்டத்தை அபர்ணாவிடமிருந்து யாராலும் தட்டிப் பறிக்க முடியவில்லை. மும்பையில் பிறந்து வளர்ந்த அபர்ணா, பாட்மின்டனுக்காக மட்டையோடு பெங்களூரில் குடியேறினார். பன்னிரண்டு வயதுக்குட்பட்டோருக்கான தேசிய பாட்மின்டன் சாம்பியனாக மாற, அதன் பிறகு பாட்மின்டன் வல்லவராகிவிட்டார். பாட்மின்டன் சாம்பியனான பிரகாஷ் படுகோனேதான் அபர்ணாவின் ரோல் மாடல். பெங்களூரிலிருக்கும் அவரது அகாடமியில்தான் ஏழு வருடங்களாக பயிற்சி எடுத்துக் கொண்டார்.

இந்தியாவில் மகளிர் பாட்மின்டன் சூப்பர் ஸ்டார் என்றால் அது அபர்ணா தான் என்னுமளவுக்கு தேசிய அளவில் பல சாதனைகள். 1998-ல் ஃப்ரெஞ்ச் ஓப்பன் சாம்பியன், 2002-ல் காமன் வெல்த் போட்டி

புல்தரை, காபி கடை, ரயில்வே நடைபாதை, சினிமா தியேட்டர்... எந்த இடத்தில் வேண்டுமானாலும் இருந்து கொள்ளுங்கள். என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் உங்கள் மடிக்கணினியைப் (லாப்டாப்) பிரித்து ஒரு மூலையில் கிடத்தி விட்டால் போதும். திரையில் தோன்றும் ஆசிரியர் உங்களுக்காக வகுப்பெடுக்கத் தொடங்கி விடுவார். அட்டென்டென்ஸில் உங்கள் பெயர் டிக்காகிவிடும்.



அமெரிக்கா உட்பட பல மேலை நாடுகளில் இந்த மடிக்கணினி கல்வி முறை பிரபலமாகி வருகிறது. "அட போப்பா யாரு பையைத் தூக்கிக்கிட்டு காலேஜுக்கு எல்லாம் போறது?" என்று ரிமோட்டைக் கையில் வைத்து சுழற்றியபடி சிரிக்கிறார்கள் நவீன மாணவர்கள். வீட்டு மொட்டை மாடியில் காலை நீட்டி அமர்ந்து லெக்சர் கேட்கும்



களில் வெள்ளி என சர்வதேச களத்திலும் சில வெற்றிகள் பெற்றிருக்கிறார். முடிந்து போன சிட்னி (2000) மற்றும் ஏதென்ஸ் (2004) ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியா சார்பில் பாட்மின்டனுக்காகக் கலந்து கொண்டவர் அபர்ணாதான். சிட்னியில் அபர்ணாவுக்கு இடி ஒன்று காத்திருந்தது. அதிக ஜல தோஷத்தால் அவதிப்பட்ட அபர்ணா டி-கோல்ட் என்ற மாத்திரையை எடுத்துக் கொண்டார். அதில் தடை செய்யப்பட்ட வேதிப் பொருள் கலந்திருப்பதாகக் கூறி அபர்ணாவுக்கு சர்வதேச பாட்மின்டன் கழகம் மூன்று மாதங்கள் பிற போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதித்தது. இதனால் தனக்குக் கிடைத்த அர்ஜுனா விருது மற்றும் ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது ஆகியவற்றை அரசிடமே திருப்பிக் கொடுத்தார் அபர்ணா. ஆனால் 2002-ல் காமன் வெல்த் போட்டிகளில் சாதித்த பிறகு கர்நாடகா, மஹாராஷ்டிர அரசுகள் இவரைக் கௌரவித்தன.

''எப்பவும் நல்லா விளையாடுற சைனீஸ் வீராங்கனைகளை நான் ஒரு நாள் தோற்கடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதற்கான ஒரே வழி வேறென்ன... கடும் உழைப்புதான்'' என்கிறார் அபர்ணா.

- முகில்

# இளைய கல்கி

இன்பமே அலாதியானது என்கிறார்கள்.

"நான் ரொம்ப தூரம் இருக்கேன் சார். என்னால காலேஜுக்கு வர முடியாது சார். வீட்டிலிருந்தே படிச்சுக்கிறேன் சார்" என்று அப்பாவித்தனமாக முகத்தை வைத்துக்கொண்டு விண்ணப்பிக்கிறார்களாம். சரி பாவம் போனால் போகட்டும், எப்படியோ படித்தால் சரி என்று அட்மிஷன் கொடுத்து விடுகிறார்களாம். பிறகு பார்த்தால், கல்லூரி வளாகத்துக்கு நேர் எதிர் சந்தில்தான் இப்படிப்பட்ட அப்பாவி மாணவர்கள் வசிக்கிறார்களாம்.

போன வருடம் டகோடாவில் (அமெரிக்கா) மட்டும் 2.3 மில்லியன் 'அப்பாவி' மாணவர்கள் மடிக்கணினி மூலம் கல்வி பயின்றிருக்கிறார்கள். (எந்தப் பூங்காவில் யாரோடு சேர்ந்து க்ரூப் ஸ்டடி செய்தார்களோ தெரியவில்லை).

பாவம் ஆசிரியர்கள். "அய்யோ இதெல்லாம் ரொம்ப ஓவராயிருக்குங்க" என்று அங்கலாய்த்துக் கொள்கிறார்கள். "நாங்க யாருக்குப் பாடம் நடத்தறோம்னே தெரிய மாட்டேங்குது" என்று உதட்டைப் பிதுக்குகிறார்கள். நியூக்லியர் ஃபியூஷன் பற்றி, தொண்டை கிழிய இவர் கத்திக் கொண்டிருக்கும்பொழுது, பீட்ஸாவைக் கடித்துக்கொண்டே பிரிட்னி ஸ்பியர்ஸை ரசித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள்தான் அதிகமாம்.

முகத்துக்கு நேராக உட்கார்ந்து வகுப்பெடுத்தாலே முக்கால் வரிசை பேர் (முன் வரிசை நீங்கலாக) கண்கள் செருகிப் போய்த் தூங்கி விடுகிறார்கள். இதில் 'தொலைதூரம்' என்றால் கேட்கவே வேண்டாம். மவுசை இரண்டு முறை கிளிக்கினால் ஆசிரியர் காணாமல் போய்விடுவார் எனும்பொழுது கையை வைத்துக்கொண்டு யார்தான் சும்மாயிருப்பார்கள்?

- மருதன்

## லாப்டாப் ஆசிரியர்கள்!

இந்திரா செளந்தர்ராஜன்

'உணர்வால் வாழ்பவை
உயிரினங்கள்
மனதால் வாழ்பவன்
நிறை மனிதன்
உணர்வும் மனதும்
நானே என்பதால், ஆண்டவன்நான்
ஆயனாகவும் ஆனேனே...!'

– ஸ்ரீ கிருஷ்ணன்

# எங்கே என் கண்ணன்?

விமானம் பறக்கிறதா இல்லை மிதக்கிறதா என்றே தெரியவில்லை. புறத்தில் புஷ்டியான மேகப் பொதிகள். ஆனால் அவற்றை ரசிக்கும் மனநிலைதான் சம்பத்திடமும் சாருவிடமும் இல்லை.

நாடி ஜோதிடம் என்கிற புராதனமான ஒரு விஷயம், நவீன விஞ்ஞானமான விமானத்துக்குள் இருக்கும் போதும் தூக்கலாக இருவருக்குள்ளும் ஆட்சி செலுத்தியபடி இருந்தது.

'அது எப்படிக் கண்ணன் வரமுடியும்?' என்பதுதான் பிரதான கேள்வியாக அவர்கள் மனத்தில் நங்கூரம் போட்டிருந்தது. என்னதான் கடவுள் நம்பிக்கை இருந்தாலும் அவன் தங்களை ரட்சிக்க வரப்போகிறான் என்பதை மட்டும் ஏனோ நம்ப முடியவில்லை.

சாரு கூட துலக்கப்பட்ட வெள்ளிப் பாத்திரம்போல மாறிப்போனது தான் ஆச்சரியம்.

"ஏதேதோ நடக்கறது சாரு... பேசாம நாமனே பரிகாரம் பண்ணக் கிளம்பிப் போயிருந்துருக்கலாம். அப்ப உனக்குள்ள ஒப்புதல் இல்லை. ஆனா இப்ப நீயும் நானும் தயாராகியும் பிரயோஜனமில்லை. அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துடுத்து.

ஹார்ட் அட்டாக் மாதிரி ஒரு கொடுமையான உயிர்ப் பயம் எதுவுமே கிடையாது. சொடக்கு போட்ற நாழில வலி வந்து நெஞ்சையடைச்சு 'வாழ்ந்தது போறும வா'ன்னு எவ்வளவு பேரைக் கூட்டிண்டு போயிருக்கு தெரியுமா?

எமனோட குறுக்கு வழிகள்ளயே ரொம்ப ரொம்ப ஷார்ட் ரூட் இதுதான்..."

- சம்பத் தான் எதில் மையம் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லாமல் சொன்னான்.

''இல்லன்னா... நம்ம அப்பாவுக்கு எதுவும் ஆகாது. என் உள் மனசுக்குள்ள நம்பிக்கை தெரியறது. அது என்னவோ தெரியல அங்க அம்மாவும் அப்பாவும் பரிகாரம் பண்ணிட்டதைக் கேள்விப்பட்டதுல இருந்தே நான் ரொம்ப இலேசாயிட்ட மாதிரி தோன்றது'' என்றவள் திடீரென ''என்னன்னு தெரியல... வயித்தைப் புரட்டற மாதிரி இருக்கு...'' என்றாள்.

விமானப் பயணம் சிலர் வரையில் ரத்த நாளங்களில் எல்லாம் ஊடுருவும். அப்போது அவர்கள் இப்படிச் சொல்வதும் சகஜம்தான். சம்பத்தும் அப்படித்தான் எண்ணினான்.,



# 26

“இல்லன்னா... இது அந்த மாதிரி புரட்டலா தெரியல...” என்று அவனுக்குள் கொஞ்சம் குழப்பமேற்படுத்தினாள்.

**வீ**ட்டுக்குள்ளேயே மெல்ல எழுந்து நடந்து பார்த்தான் கணேஷ். நெற்றியில் கோபி சந்தனம், காதில் துளசி தளம், மார்பு, கைகளில் எல்லாம் சந்தன வரிகள்.

பார்க்க பரம வைதிக தோற்றம். குத்து விளக்குகள் எரிய கண்ணனின் அந்த மூங்கில் பெட்டி. அந்தப் பெட்டியை கணேஷ் அர்ச்சித்திருந்த பூக்கள் கிட்டத் தட்ட மூழ்கடித்திருந்தன. அவனுக்கு இப் படி ஆகும், அப்போது உதவுவதற்கு ஒருவர் வேண்டும் என்று எண்ணி திட்டம் போட்டு அனுராதாவைக் காலம் கொண்டு வந்து சேர்த்த மாதிரிதான் அவனுக்குத் தோன்றியது.

அவன் அம்மாதான் அடிக்கடி ‘நாம ஒருத்தருக்குச் செய்தா நமக்கு ஒருத்தர் செய்வாங்கப்பா....’ என்பாள். அப்போது அது அவன் வரையில் ஆறு வார்த்தைகளால் ஆன ஒரு சப்தம். இப்போது அதில் ஆழ்ந்த பொருள் இருப்பது போல ஒரு உணர்வு.

அம்மா எதிரில் ஒருமுறைக்கு மேல் சேர்ந்தார் போல் இருமிவிடக் கூடாது. ‘வறட்டு இருமல் - சூடு’ என்று கை நிறைய எண்ணெயைக் கொண்டு வந்து தலையில் வைத்து விடுவாள்.

ஏனோ தெரியவில்லை அவனுக்குள் அவன் தாயின் உணர்வுகள் பொங்கிப் பொங்கி எழும்பின. இப்பொழுது இங்கு மட்டும் அவள் இருந்தால் துடித்துப் போயி ருப்பாள்.

பாவம் அவள்...! ஒரு பக்கம் மனநலம்



சரியில்லாத அப்பா, இன்னொரு பக்கம் கழுத்தில் தாலி ஏறியும் வாழ்க்கைக்குள் புக முடியாத அக்கா, வியாதி உடம்பாகிப் போன தங்கை...

தொட்டுத் தொட்டு எல்லோர் நினைப்பும் அந்தத் தனிமையில் அவனுக்குள் மூண்டெழுந்தது. அதன் எதிரொலியாகக் கண்களில் கண்ணீர் சேர்ந்து விட்டது. அதைச் சுண்டி விட்டுக் கொள்ளும் போது சுச்சிதமாக கையில் டிபன் பொட்டலங்களோடு அனுராதா உள்ளே நுழைந்தாள். நொடியில் அவன் கண்ணீரையும் அதற்குப் பின்னால் உள்ள காரணங்களையும் புரிந்து கொண்டு விட்டாள். அவளைப் பார்க்கவும் அவனிடம் சமாளிப்பு.

"என்ன அனுராதா... நீங்க சாப்பிட்டு எனக்கும் டிபன் வாங்கிட்டு வந்துட்டீங்களா?"

"டிபன் வாங்கிட்டு வந்துருக்கேன். ஆனா நான் ஹோட்டல்ல சாப்பிடலை. உங்களோட சேர்ந்தே சாப்பிடுவோம்னு எனக்கும் சேர்த்தே பார்சல் பண்ணிட்டு வந்துட்டேன்."

அவள் அப்படிச் சொன்னதில் ஒரு பனித்துளிச் சிலிர்ப்பு அவனுக்குள் ஏற்பட்டது.

"என்ன நடந்து பாக்கறீங்களா... வலி இன்னுமா குறையல...?"

"இப்பதான் ரொம்ப அதிகமா இருக்கு. டாக்டரோ, எலும்பு முறிவு இல்லைன்னுட்டார். ஒரு தசைச் சுளுக்கு இப்படி வலிக்குமான்னு எனக்கு ஒரே குழப்பமா இருக்கு..."

"எப்படியோ இதுலயும் நீங்க அந்தக் கண்ணனுக்கு பூஜை செய்துட்டீங்களே... அதுதான் கிரேட்..."

"ஆங்... சொல்ல மறந்துட்டேன். அங்க அந்த பிராமணர் இப்ப நல்லபடி குணமாயிட்டார். அவரே என் கூட பேசினார். அம்பி... நிஜத்துல நீதான் பரமபக்தன். உன் முன்னால நானெல்லாம் ஒண்ணுமேயில்லைன்னு என்னென்னமோ சொன்னார். நான் என்ன பெருசா பண்ணிட்டேன்? சினிமாவுல கேரக்டர் ரோல் பண்ற நடிகன் மாதிரி இது ஒரு நடிப்பு. இருந்தாலும் இந்த நடிப்பை சிவாஜி மாதிரி அழுத்தமா திருப்தியா செய்தேன்னு சொன்னேன்.

"அவர் ஹார்ட் பிராப்ளம் சரியாகணும், அப்புறம் அவர் இந்த யாத்திரை மேற்கொண்டதே ஒரு குழந்தைக்காகதான்... அதாவது அவர் மகனுக்குக் கல்யாணமாகி அஞ்சாறு வருஷம் ஆகியும் குழந்தை பிறக்கலையாம். ஸோ... அவர் மருமகளுக்கு ஒரு நல்ல குழந்தையைக் கொடுன்னு அந்தக் கண்ணன்கிட்ட வேண்டிகிட்டேன்..."


கணேஷ் முடிக்கவும் இன்ப அதிர்வுடன் அவனை ஏறிட்ட அனுராதாவிடம்,

"என்ன பாக்கறீங்க அனுராதா... அவங்க நம்பற கண்ணன்கிட்ட அவங்களுக்காக அப்படி வேண்டிக்கிட்டேன். போட்ற வேஷத்தை நல்லபடியா போட வேண்டாமா?"


அவன் அவளை மடக்கிவிட்டது போல பேச அனுராதா உதட்டைச் சுழித்து சிரித்தபடியே டிபன் பொட்டலங்களை எடுத்துப் பிரித்து அவன் நாற்காலியில் அமர்ந்து சாப்பிடத் தோதாக அந்த அறை மேஜை ஒன்றின்மேல் வைத்தாள். அவனும் கெந்தி கெந்தி நடந்து வந்து அமர்ந்தான். அவளை நன்றியுடன் பார்த்தான். அவள் "சாப்பிடுங்க..."

"எதிரே யாரும் இல்லாமல் தனியாக நான் வெகுநேரம் மேடையில் நின்று பேசிக் கொண்டிருந்தால் மற்றவர்கள் என்னைத் தப்பாக நினைப்பார்கள் என்ற காரணத்தினால் எனது பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்."

- அஜித்லால்



என்றபடியே தனக்கான பொட்டலத்தைப் பிரித்தாள். பிரித்தபடியே "எதை நினைச்சு அப்ப அழுதீங்க...?"- என்றான். சட்டென்று அவனுக்கு ஒரு பதிலை அவளால் கூற முடியவில்லை. இட்லியைப் பிட்டு வாயில் வைத்தபடியே "என் குடும்பத்தை நினைச்




சேன்" என்றான்.

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா அதை எல்லாம் நான் தெரிஞ்சுக்கலாமா?"

- அவனும் சுருக்கமாக எல்லோரைப் பற்றியும் சொல்லி முடித்தான்.

"அடேயப்பா... எவ்வளவு பிரச்னைங்க... உண்மைல உங்களை நினைச்சா எனக்கு பிரமிப்பா கூட இருக்கு. உங்களை ஒண்ணு கேட்கட்டுமா?"

"என்ன... சும்மா கேளுங்க..."

"இந்த பூஜைல உங்களோட இந்தப் பிரச்னைகள் தீரணும்னு நீங்க கடவுள்கிட்ட கேட்கலாம் இல்லையா... அதே நாடக வேஷம் போட்ட பக்தர் நிலையில இருந்து தான்..."

"தெரியும்... நீங்க இப்படித்தான் கேட்பீங்க. உங்களுக்கு உங்க பாணியிலயே பதில் சொல்றேன். என்னைப் போல ஒரு நாத்திகனுக்கு நான் எதுவும் சொல்லாமலே, கேட்காமலே கடவுள் வந்து உதவி செய்யலாம் இல்லையா... அவர் உண்மைல இருந்தா? அவருக்குத் தான் எல்லாரும் எண்ணாச்சே..."

- அப்படி அவன் கேட்ட பிறகு அதற்கு மேல் அவளால் அவனிடம் மேற்கொண்டு பேச முடியவில்லை. பேச்சு அப்படியே கண்ணன் விஷயத்துக்குத் தாவியது.

"எனக்கு உதவி செய்யறேன்னு சொல்லிக்கிட்டு வந்த நபர்... இப்ப எங்க இருக்கார்னே தெரியல. இதுல இவர் மும்பை வரை போய் என் அப்பாவைக் கண்டுபிடிச்சு கூட்டிக்கிட்டு வரேன்னு பிலா வேற... வேடிக்கையா இல்ல...?"

"இல்ல கணேஷ்... என்னால அந்த நபரை, சாதாரணமா எடுத்துக்க முடியல. நீங்க வேணா பாருங்க. அவர் உங்கப்பாவோட வந்து நின்னு உங்களைத் திக்குமுக்காட வைக்கப் போறாரு..."

"என்ன அனுராதா... அந்த நபரோட தோற்றம், ஃபேஸ் ரீடிங் இதுல மயங்கிட்டீங்களா..."

"ஏன், நீங்க மயங்கலையா... அவர் எதிர்க்க நீங்களே ஒரு பெட்டிப் பாம்பா தானே இருக்கீங்க?" - அனுராதா அப்படிச் சொன்னது கணேஷை ஒரு குத்துக் குத்தி விட்டது.

"அப்படியா சொல்றீங்க... வரட்டும் அவர். எங்கய்யா சொல்லாம கொள்ளாம போய் ஒழிஞ்சேன்னு ஒரு பிடி பிடிக்கறேன் பாருங்க..."

கணேஷ் சொல்லி வாய் மூட "அப்படியா?" என்று ஒரு பதில் கேள்வி. நிமிர்ந்தால் எதிரில் அந்தக் கண்ணன். கூடவே கணேஷின் அப்பா வைத்யநாதன்!

பாவம், அவரிடம் ஸ்மரணையே இல்லை. கணேஷுக்குள் நிஜமாலுமே திக்குமுக்காடல்!

(தொடரும்)

"பெட்ரூம்ல 'ஐஸ்வர்யா ராய் ஒழிக'னு போர்டு மாட்டிருக்கே... ஏன்?"

"என் கணவர் ரஜினி ரசிகராச்சா? சிவாஜில கால்ஷீட் குடுக்காத ஐஸுக்கு, கனவுல வர்றப்ப எதிர்ப்பு தெரிவிக்கறார்!"

- அம்பை தேவா

# ஆதி



வழக்கமாக விஜய் குத்துப்பாட்டு ஒன்றில் வியர்க்க வியர்க்க ஆடியபடி அறிமுகம் ஆவார். இந்தப் படத்தில் அது மிஸ்ஸிங்... அதற்காக வித்தியாசமான படம் என்று எங்களை மாதிரியே நீங்களும் நினைத்தால் ஸாரி... ஒத்தை ஹீரோ ஒரு சாம்ராஜ்யத்தையே அழிக்கும் வழக்கமான கதைதான்.

விஜய், த்ரிஷா இருவருக்குமே ஒரே ரசனை. மழையில் நனைவது, ஐஸ்க்ரீம் சாப்பிடுவது என்பது போல குடும்பத்தை அழித்த வில்லன் கூட்டத்தை அழிப்பதிலும்தான்.

படத்தில் வரும் அத்தனை கேரக்டர்களும் ஏனோ ஸ்பீக்கரை விழுங்கிவிட்டதுபோல அவ்வளவு 'மெதுவாக'ப் பேசுகின்றனர். படம் பார்க்கப் போகும்போது பஞ்சு உருண்டை கொண்டு போவது நல்லது. வில்லன் சாய்குமார்... படம் முழுக்க 'ஆஹா.. ஓஹோ'வெனப் புகழ்ந்து கிட்டத்தட்ட விஜயின் பி.ஆர்.ஓ.வாகவே செயல்பட்டிருக்கிறார்.

படத்தில் வீணடிக்கப்பட்டவர்கள் பட்டியலில் பிரகாஷ்ராஜ், விவேக் ஆகியோர் முதல் இரண்டு இடங்களைக் கைப்பற்றுகின்றனர். இரண்டு குத்துப் பரோட்டாக்கள்... ஆனால் அதுவும் சரியாக வேகவில்லை. 'சன் ஃபீஸ்ட்', 'ஜமாய்' என்று படத்தில் அவ்வப்போது ஸ்பான்சர் வாசனைத் தூக்கல்... ஒரு கட்டத்தில் 'சன் ஃபீஸ்ட் ரொம்ப நல்ல பிஸ்கட்' என்று விஜய் விளம்பரம் செய்வது... நல்லா...வே இருக்கு...

படத்தின் பின்பாதியில் விஜய், வில்லனோடு பேசும்போது வரும் சூடான வசனங்கள் அவரது ரசிகர்களைத் திருப்திப்படுத்துகின்றன. இருந்தாலும் அவரது ரசிகர்களுக்கு ஃபுல் மீல்ஸ் அல்ல... கால் வயித்துக் கஞ்சிதான். படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது, எதிரில் இயக்குனர் ரமணா நம்மைப் பார்த்து, 'நீங்கள்லாம் எவ்னோ நல்லவங்க' என்று வடிவேலு ஸ்டைலில் சொல்வது போன்ற பிரமை.

- லஜ்ஜாவதி

T. நகர் இப்பொழுது திருவொற்றியூரில்

# தூத்துக்குடி மெட்டல்ஸ்,

No: 196, T.H. ரோடு,
திருவொற்றியூர்,
சென்னை - 600 019



## 21-ஆம் ஆண்டு நிறைவு விழா

## புத்தாண்டு சிறப்பு விற்பனை

கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள்,
பரிசுப் பொருட்கள் நியாயமான விலையில் வாங்க
இன்றே வருகை தாருங்கள்!

Prop. V.V. செல்வக்கனி நாடார் & சன்

பாத்திர வியாபாரத்தில் 50 வருட அனுபவம் பெற்ற நிறுவனம்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

